# உதயன்

விலை ரூ.20
பக்கம் 28

சுடர் 30 | கதிர் 078 | வள்ளுவர் ஆண்டு 2046 | தை 29 வியாழக்கிழமை 12-02-2015


12 FEB 2015

## இந்திய படகுகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 12
இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட படகுகளை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.
யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் உள்ள 81 படகுகளையும் விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. பக்.24

## சிக்கினார் மன்மதன்!

நெல்லியடி, பெப்.12
இரண்டாவது திருமணம் செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் திருமணக் கோலத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பல பெண்களைத் திருமணம் செய்வதாக ஏமாற்றியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. பக்.23

# நல்லிணக்க விசேட செயலணி இன்று ஆரம்பம்

### ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின் முன்னர் மீளாய்வு விடயங்களைக் கையாளும்

யாழ்ப்பாணம், பெப்.12
நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி விசேட செயலணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஜனாதிபதியின் இந்தியப் பயணத்துக்கு முன்னதாக மீள்குடியமர்வு தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்காகவே இந்தச் செயலணி இன்று ஆரம்பிக்கப்படுகின்றது என்று தெரியவருகின்றது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில், இனங்களுக்கான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் - நல்லிணக்கம் தொடர்பான விசேட செயலணியை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கோரப்பட்டிருந்தது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. பக்கம் 24

## "5 வருடங்கள் ஏமாந்தது போதும்"

கிளிநொச்சியில் மக்கள் போராட்டம்




யாழ்ப்பாணம், பெப்.12
காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும், நிரந்தர வீடு மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இவை புதிய அரசின் 100 நாள் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பக்கம் 02

## ஜோன் கெரியை இன்று சந்திக்கிறார் மங்கள



கொழும்பு, பெப்.12
இலங்கை மீதான சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை தணிக்கும் பொருட்டு, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியை இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். நாளை வெள்ளிக்கிழமை, ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.
இலங்கைக்கு எதிராக, அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை, அடுத்த மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கையை காலதாமதப்படுத்தும் – தணிக்கும் நடவடிக்கைகளில் இலங்கையின் புதிய அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தியுள்ளது. பக்கம் 24

## உண்மைகளை ஏற்றாலே நல்லிணக்கம் உருவாகும்

### சுட்டிக்காட்டுகின்றார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 12
நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், கடந்த காலங்களில் நடந்த உண்மைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். உண்மைகள் கசக்கத்தான் செய்யும். வடக்கு மாகாண சபை தனது பிரேரணையில் கடந்த காலங்களில் நடந்த – எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளைப் பட்டியலிட்டுள்ளது. உண்மையில், இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், வடக்கு மாகாண சபையின் பிரேரணையை ஏற்றுக் கொள்ள வேண்டும். - இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 24

அரசு மாறினாலும் தமிழர் தலைவிதி மாறப்போவதில்லை பக். 16

## விபூசிகாவின் தாய் மகஸினுக்கு மாற்றம்



கொழும்பு, பெப்.12
பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுமி விபூஷிகாவின் தாய், மகஸின் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்படாததாலேயே அவர் மகஸின் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பக்கம் 23

## பதவிக்கு கறையை ஏற்படுத்திவிட்டார் கோத்தபாய

### சாடுகின்றார் பொன்சேகா



கொழும்பு, பெப்.12
இப்போதைய அரசிலும் எனக்கு எதிரான சூழ்ச்சிகள் நடக்கின்றன - என்று கூறியுள்ளார் இராணுவ முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியைக் கறைப்படுத்திவிட்டார் கோத்தபாய ராஜபக்ஷ என்றும் அவர் சாடியுள்ளார். பக்கம் 23

## இந்திய மீனவர் அத்துமீறல் மன்னாரில் ஆர்ப்பாட்டம்

### மைத்திரி இந்தியா செல்லும் சமயம் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 12
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவில் தங்கி நிற்கும் சமயம், தமிழக மீனவர்களின் அத்து மீறலுக்கு எதிராக மாபெரும் கவனவீர்ப்புப் பேரணியை நடத்துவதற்கு மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை இந்தப் போராட்டம் நடக்கவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். பக்கம் 23

## பிணையில் வந்தார் திஸ்ஸ



கொழும்பு, பெப்.12
முன்னாள் அமைச்சர் திஸ்ஸஅத்தநாயக்க நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். பக்கம் 23

மேகமூட்டமாகக் காணப்படும். இலேசான மழைவீழ்ச்சி ஏற்படலாம்.

கூ.வெ. 30°C   கூ.வெ. 30°C

# வலி.தென்மேற்கு மக்களை அழிக்கின்றது மாநகர சபை

## 10,000 துண்டுப் பிரசுரங்கள் வீடு வீடாக விநியோகம்

யாழ்ப்பாணம், பெப் 12

"தினமும் 100 முதல் 120 வரையிலான டிராக்டர் திண்மக் கழிவுகளையும், 20 மலக்கழிவு பவுசர்களையும் கல்லுண்டாய் வெளிக்கு அனுப்பி யாழ்.மாநகரசபை வலி.தென் மேற்கு மக்களை அழிக்கிறது. கல்லுண்டாய் கழிவுக் குதத்தால் மனித உயிர்களுக்கு விரைவில் ஆபத்து. மக்களே விழித்தெழுங்கள். ஒன்று திரளுங்கள்" என்று தெரிவிக்கும் 10ஆயிரம்துண்டுப்பிரசுரங்கள் வலி. தென்மேற்கு மக்களுக்கு வீடாக வீடாக வழங்கப்பட்டு வருகின்றன.

வலி.தென்மேற்கு நவாலி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு ஒன்றிணைந்த கழக மக்களால் 10ஆயிரம் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கும் நடவடிக்கையை 10 சமூக அமைப்புகள் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழான யாழ்.மாநகர சபையானது மனிதனின் உயிரைக் காவு கொள்ளக் கூடிய வகையில் திண்மக் கழிவுகளையும் மலக் கழிவுகளையும் பொருத்தமற்ற முறையில் கொட்டி ஆபத்தை உண்டுபண்ணி வருகின்றது.

இதனால் நவாலி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு மற்றும் இதர பிரதேசங்களில் வாழும் குழந்தைகள், சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை பல்வேறு விதமான பாதிப்புக்களையும் உயிராபத்துக்களையும் எதிர்கொண்ட வண்ணம் உள்ளனர்.

தினமும் 100 முதல் 120 வரையிலான டிராக்டர் திண்ம கழிவுகளையும், 20 மலக் கழிவு பவுசர்களையும் எமது வலி.தென்மேற்குப் பிரதேச சபை எல்லைக்குள் கொட்டி ஆபத்தை உண்டு பண்ணி வருகின்றனர்.

எனவே சட்டத்தின் முன்நியாயமற்ற – பொருத்தமற்ற – ஆபத்துகளை உண்டு பண்ணக் கூடிய நிகழ்ச்சி தினமும் நடைபெற்ற வண்ணம் உள்ளது.

இங்கு கொட்டப்படும் கழிவுகள், தகரப் பேணிகள் திண்மக் கழிவுகள் எரியூட்டப்பட்டு அதனால் வரும் புகைமூட்டம் மூலம் அஸ்மா நோய்,புற்று நோய், குதவழி நோய்,தோல் வியாதி என்பன மறைமுகமாக தாக்கத் தொடங்கியுள்ளன.

மக்களாகிய உங்களுக்கு இது நேரடியாக இப்போதே தாக்கத் தொடங்கி விட்டது.

டெங்கும் இலையான்களும் பெருகிய வண்ணம் உள்ளன.

எனவே இந்தச் செயற்பாட்டை உடன் முடிவுக்கு கொண்டுவரவேண்டிய தேவை உணரப்பட்டு பலரும் விழித்துள்ளனர்.

யாழ்.மாநகர சபை வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் அத்துமீறி கழிவுகள், மலக் கழிவுகள் கொட்டப்படுவதனை நிறுத்துவதற்கு மக்கள் ஒன்று திரள வேண்டியுள்ளது–என்றுள்ளது. (த–51)

# பிரதம நீதியரசரின் செயலராக ஆனந்தி

யாழ்ப்பாணம்,பெப். 12

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவனின் பிரத்தியேக செயலாளராக இடமாற்றம் பெற்றுள்ளார். இதனையடுத்து மன்னார் நீதிவானாக ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா இடமாற்றம் பெற்று நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஆனந்தி கனகரட்ணம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பிரதம நீதியரசரின் பிரத்தியேக செயலாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அக்கரைப்பற்று நீதிவானாக இருந்த ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா மன்னார் நீதிமன்றில் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

# வலி.தென்மேற்கிலும் கழிவு ஒயில் தாக்கம்

## 10 இற்கும் மேற்பட்ட கிணற்று நீர் பரிசோதனைக்காக கொழும்புக்கு

வலி.தென்மேற்கு, பெப்.12

கிணற்று நீரில் கழிவு ஒயில் கலக்கும் படலம் முதன்முதலாக வலி.தெற்கு பிரதேசத்தில் ஆரம்பமாகி நாளடைவில் வலி.வடக்குப் பிரதேசத்துக்குப் பரவி தற்பொழுது வலி.தென்மேற்குப் பிரதேசத்துக்கும் தாவியுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள பத்துக்கும் மேற்பட்ட கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கிணறுகளிலுள்ள நீரைப் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசோதனை தொடர்பான அறிக்கை கிடைக்கும் வரை அந்த நீரை பருகவேண்டாமென்று மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மானிப்பாய் சுதுமலை, மாகியப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள பத்துக்கும் மேற்பட்ட கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பதாக மக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து மேற்படி கிணறுகளை நேரில் சென்று பார்வையிட்ட அதிகாரிகள் கிணற்று நீரை எடுத்துப் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை, இது சம்பந்தமாக ஆராயும் கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உதவிச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வலி.தென்மேற்குப் பிரதேச சபை தவிசாளர், சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த–115)

### இந்திய ஓதுவாரின் இசைக் கச்சேரி

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில்,இன்று மாலை 4.30 மணிக்கு, இந்திய ஓதுவார்கள் கலந்து கொள்ளும் இசைக்கச்சேரி ஆறு திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

# சமூக சுகாதாரத் தொண்டர் நேற்றும் கவனவீர்ப்புப் போர்




யாழ்ப்பாணம், பெப். 12

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி யாழ்.மாவட்ட சமூக சுகாதாரத் தொண்டர்கள் யாழ்.பண்ணையிலுள்ள சுகாதார அமைச்சு முன்பாக நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம் அவர்களுக்கு உறுதியளித்துள்ளார். நேற்று முன்தினமும் இவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

எமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். அதுவரை போராட்டம் தொடரும் என்றும், சமபந்தப்பட்டவர்கள் வந்து உறுதிமொழி தர வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

அதன் பின்னர் அங்கு சென்ற வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம் அவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்குவதாகவும் அதற்கான பணிகள் இடம்பெற்று வருவதாகவும் உறுதியளித்ததன் பின்னர் சமூக சுகாதாரத் தொண்டர்கள் அங்கிருந்து சென்றனர்.

இது குறித்து அமைச்சர் சத்தியலிங்கத்திடம் கேட்டபோது: யாழ். மாவட்டத்தில் உள்ள சமூக சுகாதாரத் தொண்டர்கள் உட்பட வடக்கிலுள்ள 867 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆளுநர் இருந்த காலத்தில் சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் தொண்டர்களது பட்டியல் வழங்கப்பட்டு விட்டது.

ஜனாதிபதியின் 100 நாள் வேலைத் திட்டத்தில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னர் ஒரு முறை சுகாதாரப் பகுதியினருக்கு நிரந்தர நியமனம் வழங்கவென நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டது. ஆனால் அந்தந்த மாவட்டங்களின் அமைச்சர்கள் அதனை சிபார்சு செய்ய வேண்டும் என்று முன்னைய ஆளுநர் கூறியதனால் டக்ளஸ் தேவானந்தாவும், ரிஷாத் பதியுதீனும் அதனைச் சிபார்சு செய்தனர். ஆனால் உரிய முறைப்படி நாம் தெரிவு செய்து கொடுத்த பட்டியலில் இருந்து 25 வீதமானவர்களின் பெயர் விவரங்களை நீக்கிவிட்டு அவர்கள் இரண்டு பேரும் தமக்கு வேண்டியவர்களின் பெயர்களைச் சேர்த்து நிரந்தர நியமனம் வழங்கியுள்ளனர்.

தற்போது தொண்டர்களது பெயர் விவரங்கள் வடமாகாண பிரதம செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவர் பெயர் விவரங்களைப் பரிசீலிக்கிறார். ஒரு வாரத்தினுள் அது வடமாகாண ஆளுநரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுவிடும். ஆளுநர் அதனை மத்திய அமைச்சுக்கு அனுப்புவார் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த–4)

# கண்டாவளை பிரதேச செயலரை உடன் இடமாற்றம் செய்யுங்கள்

## அப்பகுதி மக்கள் கூட்டாகக் கோரிக்கை




கிளிநொச்சி, பெப் 12

எங்களுடைய அடையாள அட்டைகள், குடும்ப அட்டைகளை பறிமுதல் செய்து வைத்துகொண்டு எமக்கு எந்தவிதமான உதவிகளும் வழங்காமல் உதவித் திட்டங்களையும் தடுத்துப் பக்கச் சார்பாகச் செயற்படும் கண்டாவளைப் பிரதேச செயலரை இடம்மாற்றவேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் முறையிட்டனர் கண்டாவளை பிரதேச மக்கள்.

காணி உரிமைப் பத்திரங்கள், நிரந்தர வீடுகள், மின்சாரம் போன்ற அடிப்படை பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்கவேண்டும் என்று கோரிக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட கண்டாவளை நாதன் திட்டம், புன்னை நீராவியடி, உழவனூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்களே இவ்வாறு கோரினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த உதவி அரச அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமைப் பத்திரம் எமக்கு வழங்கப்பட்டது. அது எங்கள் கைகளில் உள்ளது. ஆனால் தற்போது கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள உதவி அரச அதிபரிடம் அதை காட்டும் போது அது செல்லுபடியற்றது எனவும், நீங்கள் காணியுரிமை இல்லாதவர்கள். உங்களுக்கு இங்கு ஒன்றுமே இல்லை என்றும் கூறி எங்கள் குடும்ப அட்டைகள், ஆள் அடையாள அட்டைகள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்து வைத்திருக்கிறார். இன்றுவரை அவர் அவற்றை வழங்கவில்லை. மக்களை மாடுகள் போல பார்க்கின்றார். பக்கச் சார்பாக நடக்கின்றார். வீட்டுத் திட்டங்களிலும் பாரபட்சம் காட்டுகின்றார்–என்று கூறினர்

எனவே உடனடியாக அவரை இடமாற்றம் செய்யுமாறு அல்லது அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கூறினர்.

இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கூறுகையில், உதவி அரச அதிபர் தொடர்பாக மக்களால் இங்கு கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்து தான் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உடனடியாக மாற்றம் செய்வது என்பது பொருத்தம் அற்றது. ஒரு உயர் அதிகாரிக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ள போது அந்தக் கருத்து உண்மை தானா என்பது பற்றிய விசாரணைகளின் பின்பே முடிவு எடுக்கலாம். எனவே விசாரணகளுக்காகக் கால அவகாசம் தேவைப்படுகின்றது என்று தெரிவித்தார். (த–21)

# உலகக் கிண்ணத்தை யாரெல்லாம் வெல்வார்கள்?



♦ உலகக் கிண்ணத்தில் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்க அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். அரையிறுதி வாய்ப்பை பெறும் 4 ஆவது அணியாக இந்தியா அல்லது பாகிஸ்தான் இருக்கும். ஆனால், பாகிஸ்தான் அணி, இந்திய அணியை லீக்கில் வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழையும். கிண்ணம் வெல்லும் என்று, பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் ஸாஹிர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

♦ உலக கிண்ணத்தை வெற்றி கொள்வதற்கு தென்னாபிரிக்காவுக்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றது. 2011 உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பு அனுபவம், இளம் வீரர்கள் ஆகியவற்றால் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்லும் என்று கருதப்பட்டது. அது போன்ற நிலைதான் தற்போது தென்னாபிரிக்காவுக்கு உள்ளது. இவ்வாறு, இந்திய அணியின் முன்னாள் வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

♦ உலகக் கிண்ண தொடரில் முதன் முறையாக பங்கேற்கும் ஆப்கானிஸ்தான் அணியே கிண்ணம் வெல்லும் என்று, ரோபோ ஒன்று கணித்துள்ளது. நியூஸிலாந்தின் கான்டர்பரி பல்கலைக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட 'இக்ரம்' என்று பெயர் சூட்டப்பட்ட இந்த ரோபோவிடம், உலக்கிண்ண தொடரில் பங்கேற்கும் 14 அணிகளின் தேசியக் கொடி காண்பிக்கப்பட்டது. இதை வரிசையாக பார்த்த 'இக்ரம்', ஆப்கானிஸ்தான் அணிதான் கிண்ணம் வெல்லும் என்று கணித்தது. (5–ரி)

# சொதப்புகின்றதா இந்தியா?




♦ இந்தியா – பாகிஸ்தான் ஆட்டம் எப்பொழுதும் மிகவும் சிறப்பானதாகவும் – நெருக்கடி நிறைந்ததாகவும் இருக்கும். அதுவும் உலகக் கிண்ணத் தொடர், என்றால் நெருக்கடி அதிகமாகவே இருக்கும். இந்தியா அழுத்தத்தையும் – நெருக்கடியையும் எதிர்கொள்வது சவாலானது என்று, இந்திய அணியின் சகலதுறை வீரர் இர்பான் பதான் தெரிவித்தார்.

♦ இந்திய அணியின் வீரர் விராட் ஹோக்லியின் திறன் சற்றுக் கவலை அளிக்கிறது. ஆனால் அவர் மிகச் சிறந்த 'மட்ச் வின்னர்'. உலகக் கிண்ணத் தொடரின் முக்கிய சுற்றுக்குமுன்னர் அவர் தயாராகிவிடுவார் என்று, சக வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

♦ இந்திய அணியின் பந்து வீச்சாளர்களிடம் நம்பிக்கையே இல்லை என்று முன்னாள் அணித் தலைவரும், வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் கடுமையாகச் சாடியுள்ளார். (5–ரி)

உதயன் கிரிக்கெட் கொண்டாட்டம்!

# என்ன ஒரு ரகம்?




பயிற்சி ஆட்டத்தில் வித்தியாசமான தலை அலங்காரத்துடன் பங்கெடுத்த மேற்கிந்தியத் தீவுகளின் ரசல்.

# விதிகள் சதி செய்யுமா?

உலகக்கிண்ணத் தொடரின் விநோத விதிமுறைகள் சில நேரங்களில் அணிகளுக்கு எதிராகவும் அமையும். இந்த முறை அறிமுகமாக உள்ள புதிய அம்சங்கள்.

**ஒளிரும் 'பெய்ல்ஸ்'**

இலக்கு மீது பந்து பட்டு, 'பெயில்ஸ்' தெறிக்கும் போது, 1000 இற்கு 1 பங்கு நேரத்தில், 'ஷேஜுர்ட் சேர்கியூட்' ஏற்பட்டு 'பெயில்ஸ்' சில வினாடிகள் ஒளிரும். இது "ஸ்டம்ப்ஸ்' மீது பட, அதுவும் சேர்ந்து ஜொலிக்கும். இதன் மூலம் 'ரன் அவுட்', 'ஸ்டம்பிங்' முடிவுகளை துல்லியமாக அறிய முடியும். ஒரு ஆட்டத்துக்கு 50 லட்சம் செலவு செய்து, இதனை நிறுவ வேண்டும். இந்த உலகக் கிண்ணத் தொடரிலும், 'பெயில்ஸ்' ஒளிரப் போகிறது.

**களத்தடுப்பு கட்டுப்பாடு**

கடந்த 2012 ஆம் ஆண்டில் ஒரு நாள் ஆட்டத்தில் களத்தடுப்பு கட்டுப்பாடு விதிமுறை அறிமுகமானது. 3 ஆக இருந்த 'பவர் பிளே', 2 ஆகக் குறைக்கப்பட்டது. இதன்படி பந்து வீச்சு 'பவர் பிளே' நீக்கப்பட்டது.

முதல் 10 பந்துப் பரிமாற்றங்களில் 2 வீரர்கள் தான் உள்வட்டத்துக்கு வெளியே நிற்க வேண்டும். 11–40 பந்துப் பரிமாற்றங்களுக்குள் துடுப்பாட்ட 'பவர்பிளேயை' முடிப்பது தற்போது கட்டாயம். இந்த நேரத்தில் 3 களத்தடுப்பாளர்கள் மட்டும் உள் வட்டத்துக்கு வெளியே நிற்க வேண்டும். 'பவர் பிளே' இல்லாத நேரங்களில் உள் வட்டத்துக்குள் 4 வீரர்கள் எப்போதும் நிற்க வேண்டும். இது போன்ற விதிமுறை துடுப்பாட்ட வீரர்களுக்கு கொண்டாட்டம். பந்து வீச்சாளர்களுக்குத் தான் திண்டாட்டம்.

**இரண்டு புதிய பந்து**

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்குப் பின், ஒரு இன்னிங்ஸில் 2 புதிய பந்துகள் பயன்படுத்தப்படும். இரு பந்துகளிலும் தலா 25 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்படும் என்பதால், வேகப்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தலாம். அதேநேரம், 'ரிவர்ஸ் சுவிங்' செய்வது சற்று கடினம்.

**மூன்றாம் நடுவர் 'யு.டி.ஆர்.எஸ்.'**

கடந்த 2011 ஆம் ஆண்டு தொடரை போல நடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும்' முறை உள்ளது. இதில், 'ஹொட்ஸ்பொட்', 'ஸ்னிக்கோ மீட்டர்' எல்லாம் பயன்படுத்தப்படவுள்ளது. (5–ரி)

# தகதகக்கும் கிண்ணம்

கடந்த 1975 தொடர் முதல் பல்வேறு மொடல்களில் உலகக் கிண்ணம் வழங்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் ஐ.சி.சி., உலகக் கிண்ணம் அறிமுகமானது. இதனை இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனம் வடிவமைத்தது. 60 சென்ரி மீற்றர் உயரம், 11 கிலோகிராம் எடை கொண்டது. வெள்ளியால் செய்யப்பட்டு தங்க முலாம் பூசப்பட்டது. இதன் மூன்று தூண்கள் போன்ற அமைப்பு துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பைக் குறிக்கும். நடுவில் உள்ள பூமி போன்ற உருண்டை, பந்தை குறிக்கும்.

கிண்ணத்தின் கீழ் பகுதியில் இதுவரை சம்பியன் பட்டம் வென்ற அணிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டு இருக்கும். பரிசளிப்பு விழாவின் போது மட்டும் 'ஒரிஜினல்' கிண்ணம் வழங்கப்படும். பின்னர் மாதிரி கிண்ணத்தை சம்பியன் பட்டம் வென்ற அணி எடுத்துச் செல்லும். 'ஒரிஜினல்' கிண்ணம் டுபாயில் உள்ள ஐ.சி.சி., தலைமையகத்தில் பத்திரமாக இருக்கும்.

**பரிசு**

உலகக் கிண்ணத் தொடரின் மொத்த பரிசுத் தொகை ரூ. 63 கோடி (இந்திய மதிப்பில்). இது கடந்த 2011 தொடரை விட, 20 சதவீதம் அதிகம். சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு மட்டும் ரூ. 24.6 கோடி (இந்திய மதிப்பில்) கிடைக்கும். இறுதியில் தோற்கும் அணி ரூ. 10.8 கோடி (இந்திய மதிப்பில்) பெறும். மற்றபடி அரையிறுதியுடன் திரும்பும் அணிகள் தலா ரூ. 3.71 கோடி (இந்திய மதிப்பில்), காலிறுதியில் வெளியேறும் அணிகள் தலா ரூ. 1.85 கோடி (இந்திய மதிப்பில்) கொண்டு செல்லும். லீக் சுற்றுடன் நடையை கட்டும் 6 அணிகளுக்கு, தலா ரூ. 22 லட்சம் (இந்திய மதிப்பில்) கிடைக்கும். இது தவிர, லீக் சுற்றில் பெறும் ஒவ்வொரு வெற்றிக்கும் தலா ரூ. 28 லட்சம் (இந்திய மதிப்பில்) பெறலாம். (5–ரி)













'உலகக் கிண்ண வாசகர் கணை' உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

cricket@uthayan.com
www.facebook.com/uthayan.print

உதயன் உலகக் கிண்ண கொண்டாட்டம், உங்களுடன். எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை. நீங்கள் பார்த்த உலகக் கிண்ண ஆட்டம் தொடர், நடப்பு உலகக் கிண்ண தொடர்பிலான விமர்சனம்.....





# அதிர்ச்சிகளின் சங்கமம்

தோல்வியில் இந்தியா

இரண்டு உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட நாடு. முதன் முறையாக உலகக் கிண்ணத்தை நடத்தும் வாய்ப்பை 30 ஆண்டுகளின் பின்னரே பெற்றது. 2007 ஆம் ஆண்டு 9 ஆவது உலகக் கிண்ணம் கரீபிய தீவுகளில் அரங்கேறியது. அளவுக்கு அதிகமாக அணிகள் உள்ளெடுக்கப்பட்டன. 16 அணிகள். நான்கு அணிகள், நான்கு குழுக்கள். லீக் ஆட்டம். சுப்பர் சிக்ஸ் மாற்றமடைந்து சுப்பர் எட்டு ஆகியது. லீக்கில் கத்துக் குட்டிகளின் ஆதிக்கம். அதிர்ச்சி தோல்விகள். விடைதெரியா சாவு. என்று பல குழப்பங்கள் – சர்சையுடன் நீண்ட காலம் இழுபட்டு தொடர் நடந்து முடிந்தது. முதல் முறையாக 'பவர் பிளே' அறிமுகமாகியது. அது மட்டுமே மாற்றம்.



## லீக் ஆட்டம்

நியூஸிலாந்தும் மேற்கிந்தியத்தீவுகளும் மோதல். மார்ச் 13 ஆரம்பம். தீவுகளுக்கு சொந்த மண். லாராவுக்கு இறுதித் தொடர். இதனால் நியூஸிலாந்துக்கு வாய்பை வழங்க வில்லை தீவுகள். 54 ஓட்டங்களால் வெற்றியுடன் தொடங்கியது மேற்கிந்தியத்தீவுகளின் ஆட்டம்.

இலங்கைக்கு பெர்முடாவுடன் ஆட்டம். 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி. இலகு வெற்றியுடன் தொடரைத் தொடங்கியது. மார்ச் 17 ஆம் திகதி. அதிர்ச்சி. இந்தியா – பாகிஸ்தான் அணிகளை கத்துக்குட்டிகள் கவிழ்த்துப் போட்டன. முதல் சுற்றுடன் மூடை கட்டின.

இந்தியா – பங்களாதேஷ் முதல் மோதல். நாணயச் சுழற்சியில் மாத்திரம், வென்றது இந்தியா. பங்களாதேஷ் கத்துக்குட்டி என்ற கணிப்பு. களத்திற்கு வந்ததும் போட்டுத் தாக்கின வங்கப் புலிகள். கங்குலி 66, யுவராஜ் 47 ஏனையோர் ஒற்றை ஓட்டங்கள். டோனி டக் அவுட். பதிலுக்கு விரட்டிய பங்களாதேஷுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசம். 5 இலக்கை இழந்து பெற்றது வெற்றியை. அயர்லாந்து – பாகிஸ்தானிடையே மற்றைய ஆட்டம். முதலில் ஆடியது பாகிஸ்தான். 132 ஓட்டங்களுக்குள் சுருட்டியது அயர்லாந்து. 7 இலக்குகளைப் பறிகொடுத்து வெற்றியைப் பெற்றுக் கொண்டது. ஏமாற்றம். இந்தியா – இலங்கை அணிகளிடையே நடந்தது லீக் ஆட்டம். அடுத்த சுற்றுக்குள் நுழைய இந்தியாவுக்கு வேண்டும் வெற்றி. மோதிப் பார்த்தது இலங்கையுடன். முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை. 6 இலக்குகளை இழந்து 254 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது. தரங்கவின் சிறப்பான ஆரம்பம். சாமர சில்வாவின் சிறப்பான மத்திய வரிசை ஆட்டம். பதிலுக்குத் தொடங்கியது இந்தியா. சமிந்தவாஸ் ஆரம்ப இணைப்பை வழியனுப்பினார். சச்சின் – டோனி டக் ஆகினர். இறுதியில் 185 ஓட்டங்களுக்குள் முடங்கியது இந்தியா. இலங்கை அடுத்த சுற்றுக்குள் நுழைய இந்தியா, பாகிஸ்தான் வீட்டுக்குப் புறப்பட்டன.

### 2007 உலகக்கிண்ணம்

**அதிகூடிய ஓட்டங்கள்**

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | ஓட்டங்கள் | கூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|
| எம்.ஹைடன் (அவுஸ்திரேலியா) | 11 | 659 | 158 |
| எம்.ஜெயவர்தன (இலங்கை) | 11 | 548 | 115 |
| ஆர்.பொன்டிங் (அவுஸ்திரேலியா) | 11 | 539 | 113 |

**அதிகூடிய இலக்குகள்**

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | இலக்குகள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| ஜி.மெக்ராத் (அவுஸ்திரேலியா) | 11 | 26 | 3/14 |
| எம்.முரளிதரன் (இலங்கை) | 10 | 23 | 4/19 |
| எஸ்.டெய்ட் (அவுஸ்திரேலியா) | 11 | 23 | 4/19 |

## சுப்பர் எட்டு

அயர்லாந்து, பங்களாதேஷ் உள்ளிட்ட கத்துக்குட்டி அணிகளுடன் இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து நுழைந்தன. ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் ஒவ்வொரு தடவை மோத வேண்டும். இதுதான் நிபந்தனை. ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் மோதலுடன் தொடங்கியது ஆட்டம். ஆஸி. இலகுவாக 103 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இலங்கைக்கு முதல் மோதல் தென்னாபிரிக்காவுடன். முதலில் ஆடியது இலங்கை. பெற்றுக்கொண்டது 209 ஓட்டங்கள். முன் வரிசை கைவிட், டில்சான் – ஆர்னல்ட் மத்திய வரிசையில் அணியை நிமிர்த்தி விட்டனர்.

பதிலுக்கு ஆடத் தொடங்கியது ஆபிரிக்கா. இலகுவாக வெற்றியை நோக்கி முன்னேறியது. 32 பந்துகளில் 7 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை. கைவசம் இருந்தது 5 இலக்குகள். ஆட்டத்தின் திடீர் திருப்புமுனை. மலிங்க வீசினார் பந்தை. 44.5 ஆவது பந்தில் பொலக்கின் இலக்கு நேராகத் தகர்க்கப்பட்டது. தொடர்ந்து நுழைந்த அன்ரூ ஹோல் வந்த வேகத்தில் தரங்க விடம் பிடிகொடுத்து டக்அவுட்டானார்.

இரு பந்தில் இரு இலக்கு. ஆனாலும் மறுமுனையில் கலிஸ் நிலைத்திருக்கின்றார்.

அடுத்த பந்து பரி மாற்றத்தில் பெறப் பட்டது ஓர் ஓட்டம். மீண்டும் 46 ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீச வந்தார் மலிங்க. முதல் பந்தில் கலிஸ், சங் காவிடம் பிடிகொடுத்தார். 'ஹற்றிக்' சாதனை படைத்தார் மலிங்க. அடுத்த பந்தில், நிற் னியை வந்த வேகத்தில் வெளியேற்றினார் மலிங்க. 4 பந்துகளில் 4 இலக்கு கள். உலக சாதனைக்கு சொந்தக் காரானார் மலிங்க. தென்னா பிரிக்காவின் வெற்றி கேள்விக் குறியானது. ஆனாலும் சமாளித்து இறுதி நேரத்தில் ஒரு இலக்கினால் தத்தளித்து வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இங்கிலாந்துடனான ஆட்டமும் இலங்கைக்கு சவாலாகியது. முதலில் ஆடியது இலங்கை. தரங்கவின் நீண்ட நிதான ஆட்டத்துடன் 235 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் தொடங்கியது இங்கிலாந்து. 133 ஓட்டங்களுக்குள் 6 இலக்குகளைச் சரித்தது. இலங்கையின் வெற்றி நெருங்கியது. அதைக் குழப்பினார் போப்பரா. நிக்ஸன் – போப்பரா ஜோடி 7 ஆவது இலக்குக்கு பகிர்ந்தது 87 ஓட்டங்கள். மீண்டெழுந்தது. 19 ஓட்டங்கள் 12 பந்துகளில். மலிங்க வீசினார். நிக்ஸனின் இலக்கை வீழ்த்தினார். இருப்பினும் அடுத்த பந்திலேயே போப்பரா 4 ஓட்டம் விளாசினார். 6 பந்தில் 12 ஓட்டங்கள். நிலைமை இறுக்கம். நீண்ட நேர யோசனையின் பின்னர் டில்ஹார பெர்னாண்டோ அழைக்கப்பட்டார் பந்து வீச. போப்பரா நான்கு ஓட்டம் விளாசினார். கடைசிப் பந்தில் வெற்றிக்கு 3 ஓட்டங்கள் தேவை. பெர்னாண்டோ வீச ஓடி வந்தார். போப்பரா முன்னோக்கி அடிக்க வந்தார். கையைச் சுழற்றினார் பெர்னான்டோ. ஆனால் பந்தை வீசவில்லை. பதற்றத்தின் உச்சியிலிருந்த எல்லோரும் பெர்னாண்டோவைப் பார்த்தனர். தந்திரமாக பின் வாங்கிய பெர்னாண்டோ, போப்ராவின் மனநிலையை புரிந்து இறுதிப் பந்தை வீச மீண்டும் வந்தார். இந்தத் தடவை பந்து வீசினார். நேரே சென்று இலக்கை தகர்த்தது இலங்கை மயிரிழையில் வென்றது.

ஆபிரிக்கா, ஆஸியுடன் மாத்திரம் இலங்கைக்கு தோல்வி. ஏனைய ஆட்டங்கள் சாதகம். இதனால் அரையிறுதி உறுதியானது. இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகளுடன் கத்துக் குட்டிகளான அயர்லாந்து, பங்களாதேஷ் அடிவாங்கியது. சொதப்பலாக முடிந்தது சுப்பர் எட்டுச் சுற்று.


ஹற்றிக் நாயகன் மலிங்கா

# அரையிறுதி

ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, இலங்கை, நியூஸிலாந்து அணிகள் தகுதி பெற்றன. நியூஸிலாந்து - இலங்கை முதல் அரையிறுதி மோதல். சுப்பர் எட்டு சுற்றில் நியூஸியை இலங்கை சரித்திருந்தது. இதனால் இலங்கை இலகுவாக ஆடியது.

முதலில் ஆடிய இலங்கைக்கு தரங்க - மஹேல இணைப்பு பலமாக அமைந்தது. 5இலக்குகளைப் பறிகொடுத்து 289 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் தொடங்கியது நியூஸிலாந்து. பலமான பதிலளிப்பு இல்லை. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிந்தது. 209 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இரண்டாவது தடவையாக இறுதிக்குள் நுழைந்தது இலங்கை.

அரையிறுதி என்றாலே ஆட்டம் காணும் ஆபிரிக்கா இந்த முறையும் தடுமாறியது. பிரமை பிடித்த அணியாகியது தென்னாபிரிக்கா. அரையிறுதி என்றாலே ஒவ்வாமைக்கான அணியாகியது ஆபிரிக்கா. ஆஸியுடன் மோதியது. முதலில் ஆடியது. 5 இலக் குகளை 27 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. பின்வரிசையின் சுமாரான சமாளிப்புடன் 149 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டது. ஆஸிக்கு அலாதி யான இலக்கு. முப்பத்தொரு பந்துப் பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளைப் பறிகொடுத்து வெற்றியைப் பெற்றுக் கொண்டது. ஐந்தாவது தடவையாக இறுதிக்கு தகுதி பெற்றது.






## கொசுறுத் தகவல்

இலங்கைக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் கில்கிறிஸ், கையுறைக்குள் கோல்ப் பந்தை வைத்துக் கொண்டு துடுப்பெடுத்தாடினார். இதனாலேயே இவரால் அதிரடியாக ஆட முடிந்தது. இது சர்ச்சையை கிளப்பியிருந்தது.

அயர்லாந்துடனான ஆட்டத்தில் பாகிஸ்தான் தோற்றது. இதன் பின்னர் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர், ஹோட்டல் அறையில் சுய நினைவின்றி மயங்கிக் கிடந்த நிலையில் மீட்கப்பட்டார். இதன் பின்னர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்ததாகத் தெரி விக்கப்பட்டது. இயற்கை மரணம் என்று பொலிஸ் அறி வித்தது. ஆனாலும் இன்னமும் பொப்வூல்மர் மரணத்துக்குகாரணம்கண்டறியப்படவில்லை.

மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டிக்கெட் கட்டணத்தை தாறுமாறாக நிர்ணயித்ததால் பெரும்பாலான அரங்குகள் வெறிச்சோடிக் கிடந்தன. இசைக் கருவிகளை எடுத்து வர ரசிகர்களுக்கு தடை விதிக்கப்பட்டதால், ஆட்டங்கள் சோபிக்கவில்லை.

# இறுதி ஆட்டம்

மழையால் பாதிக்கப்பட்டது. கைவிடப்பட்டு மறுநாள் ஆட்டம் நடக்கும் என்று எதிர்பார்க்கையில் நடந்தது நாணயச் சுழற்சி. வென்றார் பொன்டிங். ஆட்டம் 38 பந்துப் பரிமாற்றங்கள். ஆஸி.தொடங்கியது. கில்கிறிஸ்ட் - ஹைடன் ஆரம்ப இணை. கில்கிறிஸ் நொறுக்கித் தள்ளினார். மூன்றாவது பந்துப் பரிமாற்றத்தில் தொடங்கியது கில்லி வேட்டை. 31 ஓட்டங்களை கில்லி எட்டியிருந்தார். கொடுத்த பிடியை தவறவிட்டார் பெர்னாண்டோ. ஆட்டத்தின் போக்கை மாற்றியது. அதன் பின்னர் ஈவு இரக்கமற்று நொறுக்கித் தள்ளினார். இலங்கையால் எட்டிப்பிடிக்க முடியாத இமாலய இலக்கை நோக்கி ஆட்டம் நகர்ந்தது. 104 பந்துகளில் 149 ஓட்டங்கள் விளாசினார். 38 பந்துப் பரிமாற்றங்களில் 281 ஓட்டங்கள் 4 இலக்குகள் இழப்புக்குப் பெறப்பட்டது. பதிலுக்குத் தொடங்கியது இலங்கை. தரங்க ஆரம்பத்திலேயே வெளியேற்றம். ஜெயசூர்யா - சங்கா பொறுப்பான ஆட்டம். முடிந்தவரை முயன்றனர். மழையின் குறுக்கீடு இருந்தும் தொடர்ந்தது ஆட்டம். இலங்கை அதிரடியால் மாத்திரமே வெற்றி சாத்தியம். வந்தவர்கள் எல்லாம் அடிக்கு ஆசைப்பட இலக்குகள் தொடர்ந்து சரிந்தது. இறுதியில் 215 ஓட்டங்கள். 36 பந்துப் பரிமாற்றங்களில். 8 இலக்குகள் மாத்திரமே இழப்பு. மழை மீண்டும் வந்து விளையாட தோற்றது இலங்கை.இதனால் 'ஹற்றிக்' உலகக்கிண்ணம் ஆஸிக்கு.




## தினம் ஒரு பரிசுப் போட்டி

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (14.02.2015) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

..........................................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ......................................

முகவரி : ..........................................

..........................................

தொலைபேசி இல.: ...................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (13.02.2015) பிற்பகல் 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியலோ சேர்க்கலாம்.

### போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

### பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கன்ன் போட்டோ**
165 பிரதான வீதி.பருத்தித்துறை
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி
**நகுலன்**
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி கெருடாவில்
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி
**கூலைச்சேலை**
இல 3 நவீன சந்தை
வல்வெட்டிதுறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்தி வீதி ஊர்காவற்துறை
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி வட்டுக்கோட்டை
**தயாளன் ஸ்ரோஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி.
**சிவன் ஸ்ரோஸ்**
பரமேஸ்வரா
சந்தி,திருநெல்வெலி.
**தாஸ் ஸ்ரோஸ்**
திருநெல்வேலி
**ஓம் கணேசா**
இல1, புல்கயிரத வீதி,
கொக்குவில் கிழக்கு
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை
வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி
யாழ்ப்பாணம்
**திருநீலகண்டன் ஸ்ரோஸ்**
14. விதானையார் வீதி
சுண்டுக்குளி
**சுரேஸ் ஸ்ரோஸ்**
இல. 376 பிரதான வீதி
யாழ்ப்பாணம்
**அன்ரனீஸ் ஸ்ரோஸ்**
19 புதுமை மாதா
கோவில் கிழக்கு
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்
**ஸ்ரீமுருகன் ஸ்ரோஸ்**
சித்தங்கேணி வீதி
பண்டத்தரிப்பு
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி
சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்
**குலம் ஸ்ரோஸ்**
சந்தையடி மானிப்பாய்
**துர்க்கா புத்தகசலை**
பஸ் நிலையம் சுன்னாகம்
**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் வீதி மல்லாகம்
**பாக்கியா**
கொக்குவில்
**சிறிறாம்**
கைதடி சந்தி
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி
**மணியம்**
ஏ9 வீதி சாவகச்சேரி
**அருள்நாயகி**
ஏ 9 வீதி கொடிகாமம்
**கஜானன்**
அல்லாரை வீதி மீசாலை சந்தி
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டிசுட்டான்
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்**
55 ஏ மன்னார் வீதி
குருமன்காடு வவுனியா
**சோமசுந்தரம்**
ஏ 9 வீதி மாங்குளம்
**மோகன்**
பளை
**நகுலேந்திரன்**
31 ஆம் கட்டை
முழங்காவில்
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை
மன்னார்
**சிவசாந்தி உணவகம்**
தாழ்வுபாடு வீதி
மன்னார்
**நிரஞ்சனா**
தலமன்னார்
**பூநகரி ( எம்.பி.சி.எஸ்)**
பூநகரி
**டிலசிகா**
124 கட்சன் வீதி
வட்டகச்சி
**மகிழன் களஞ்சியம்**
தர்மபுரம்
**பொதிகை புக்சொப்**
2 ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு
**தாயண்பு**
உடையார் கட்டு
**சஜி புக் சொப்**
விசுவமடு
**வரணா புக்சொப்**
755 கனகராச வீதி
திருநகர் கிளிநொச்சி
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்
**ராஜாதேனீரகம்**
உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி
முல்லைத்தீவு



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போதும் ஆயுதங்களைக் கையாளும் போதும் கூடுதல் கவனம் தேவை. முன் கோபம் ஏற்பட்டு அதனால் வீண்தகராறு ஏற்படலாம்.

**இடபம்:** செலவைக் குறைப்பதன் மூலம் பண தட்டுப் பாடு குறையலாம். பேச்சில் கடுமையை காட்டாமல் இருப்பது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணி புரியும் இடங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**மிதுனம்:** நண்பர்கள் உறவினர்களுடன் கவனமாக பேசிப் பழகுவது நல்லது. மனதில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். முன்கோபத்தைக் குறைப்பது நன்மையைத் தரும்.

**கடகம்:** பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேரலாம். சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த முட்டுக் கட்டைகள் நீங்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம்.

**சிங்கம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். அதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகம் தொடர்பான இடமாற்றம் ஏற்படலாம்.

**கன்னி:** சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் தேடி வரலாம். மற்றவர்களை திருப்தியடையச் செய்யும் வகையில் உங்களது செயல்கள் இருக்கும்.

**துலாம்:** முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். விடா முயற்சியுடன் ஈடுபட்டு காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். அடுத்தவரை அதிகாரம் செய்யும் போது கவனம் தேவை. வீண்பகை ஏற்படலாம்.

**விருச்சிகம்:** மற்றவர்களுக்காக பொறுப்புக்களை ஏற்காமல் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புக்கள் கூடும்.

**தனுசு:** திறமை வெளிப்படும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். மரியாதையும் அந்தஸ்தும் கூடும்.

**மகரம்:** விடா முயற்சியுடன் காரியங்களைச் செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். எதிலும் முழு முயற்சியுடன் ஈடுபடுவீர்கள். எவரையும் கண்டு அஞ்சாமல் மனம் போன போக்கில் காரியங்களைச் செய்வீர்கள்.

**கும்பம்:** எல்லாவற்றிலும் சாதகமான பயன் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். புத்தி தெளிவு ஏற்படும். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மனகுழப்பம் நீங்கும்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து ஆகியவை உயரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும்.







## நாய்களின் கோலாகலம்

இரு நாய்களுக்கு சுமார் 100 விருந்தினர்கள் முன்பாக கோலாகலமாக திருமணம் செய்து வைக்கப்பட்ட சம்பவம் இந்தோனேசியாவில் இடம்பெற்றுள்ளது. பல்ஸ் என்ற ஆண் நாய்க்கும் யிப்பா என்ற பெண் நாய்க்கும் மனடோ நகரிலுள்ள மெகா டிரேட் நிலையத்தில் திருமணம் செய்துவைக் கப்பட்டது. மணமகளான யிப்பா வெள்ளை நிற திருமண ஆடையையும் மலர்களாலான கிரீடத்தையும் அணிந்திருந்த அதேசமயம், மணமகனான பல்ஸ் திருமண மேலாடையையும் மூக்குக் கண்ணாடி யையும் அணிந் திருந்தமை குறிப் பிடத்தக்கது. இந்த திருமணத்தின் போது நாய்களுக் காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட திருமண கேக் வெட்டப்பட்டு பரிமாறப்பட்டது.







## நமீதாவுக்கும் திருமணமாம்!!

எங்கள் அண்ணா' படம் மூலம் தமிழில் அறிமுகமானார். 2004 இல் இந்தப் படம் வந்தது. தொடர்ந்து பல படங்களில் நடித்தார். தெலுங்கிலும் முன்னணி நடிகையாக இருக்கிறார். தற்போது பார்வதி புறா' என்ற கன்னட படத்தில் நடிக்கிறார். நமீதா விரைவில் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் பரவி உள்ளன. கைவசம் உள்ள படங்களை முடித்து விட்டு திருமணம் செய்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது. இது குறித்து நமீதாவிடம் கேட்டபோது, நான் படங்களில் 'பிசியாக' நடித்துக் கொண்டு இருக்கிறேன். எனக்கு எப்போது படவாய்ப்புக்கள் இல்லாமல் போகிறதோ அப்போதுதான் திருமணம் செய்து கொள்வேன், என்கின்றார்.

## ரிலாக்ஸா வாசியுங்க...



இப்படியும் சில பழமொழிகள்... சீசீ இல்லைப் புதுமொழிகள்.

சைக்கிளுக்குத் தெரியுமா பெட்ரோல் வாசனை.

தான் ஓடாவிட்டாலும் தம் கடிகாரம் ஓடும்.

தீக்குச்சி தன் தலைக்கனத்தால் கெடும்.

துப்பாக்கி முனையைவிட பிரிண்டர் முனை பெரியது.

பந்தை காத்து கோல் கீப்பரிடம் கொடுத்தாற்போல.

மிதிக்க மிதிக்க சைக்கிளும் நகரும்

முடியுள்ள போதே சீவிக்கொள்.

பழகின செருப்பு காலை கடிக்காது.

மாத நாட்காட்டிக்கு ஒருமுறை கிழி தினநாள்காட்டிக்கு தினம்தினம் கிழி.

ஹெல்மெட் இல்லாதவன் பின்னே, எமன் வருவான் முன்னே.

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.12

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதா னத்தில் அதிபர் வே.ஞான காந்தன் தலைமையில் நடை பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாண வனும் கனடா ஓட்டோ மொபைல் பணிப்பாளருமான வெ.இராஜகுலேந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் அதிமேற்தரக்கிளை பிரதான முகாமையாளருமான எஸ்.பிறேம குமார் அவரது பாரி யார் ராதா மணி பிறேமகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (வ)

◆ ◆ ◆

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தி யாலய மைதானத் தில் அதிபர் செல்லையா இளங்கோ தலை மையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் பரமு ரவிச்சந்திரன் கலந்து கொள்வார். (வ)

◆ ◆ ◆

கம்பர்மலை வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதா னத்தில் வித்தியாலய அதிபர் மு.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீரவீராங் கனைகளுக்கான பரிசில்களை வழங்குவார். (வ)

◆ ◆ ◆

கைதடி விக்கினேஸ்வரா வித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய முதல்வர் சுந்தர மூர்த்தி சிவானந்தன் தலை மையில் வித்தியாலய மைதா னத்தில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை சாவகச் சேரி கோட்டக் கல்விப் பணிப் பாளர் குமாரசாமி சிவா னந்தனும் கௌரவ விருந்தின ராக விக்கினேஸ்வரா வித் தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் சின் னத்தம்பி சுப்பிரமணியமும் கலந்து கொள்வர். (வ-288)

◆ ◆ ◆

யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன் மைப் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாட சாலை மைதானத்தில் அதிபர் எஸ்.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள் ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக சம்பத் வங்கியின் பிராந் திய முகாமையாளர் பஞ்சலிங் கம் சங்கர் கலந்து கொள்வார். (வ)

◆ ◆ ◆

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள் ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல் லூரி மைதானத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும் சிறப்பு விருந்தினராக வட மாகாண உதவிப் பிரதம செயலாளர் திருமதி வனஜா செல் வரட்ணமும் கலந்து கொள்வர். (வ)

◆ ◆ ◆

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாட சாலை மைதானத்தில் அதிபர் நா.தனபால சிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிரா சாவும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப் பினர்களான அ.பரஞ்சோதி, இ.ஆர்னோல்ட் ஆகியோரும் கௌரவ உறுப்பினர்களாக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோ கரனும் துறைசார் விருந்தி னராக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோசலை குலபால சிங்கமும் கலந்து கொள்வர். (வ)

◆ ◆ ◆

அல்வாய் வடக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை வெள் ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளை யாட்டு மைதானத் தில் அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வட மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் மற்றும் சிறப்பு விருந்தினராக கர வெட்டி பிரதேச சபை உறுப் பினரும் கிராம அலுவலரு மான க.பரஞ்சோதி ஆகியோர் கலந்துகொள்வர். (வ)

◆ ◆ ◆

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியின் ஆரம் பப் பிரிவு வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு பிக்னல் மைதானத்தில் அதிபர் தலைமையில் நடை பெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தி னர்களாக இடைநிலை பாடசா லையின் முன்னாள் மேற்பார் வையாளரும் திருச்சபை மருத்துவமனையின் செய லாள ருமான அ.ஜெயராஜனும் அவரது பாரியாரான கனிஷ்ட பாடசாலை உப அதிபர் திருமதி ஈ.வி.ஜெயராஜனும் கலந்து கொள்வர். (வ-50)


## வடக்கு மாகாணசபை.

### சிங்களத் தட்டெழுத்தாளர் பதவி (பகுதி நேரம்)

வடக்கு மாகாணசபை அமர்வுகளின் போது கௌரவ உறுப்பினர்களினால் ஆற்றப்படும் சிங்கள மொழியிலான உரைகளை ஒலிப் பதிவுக் கருவியிலிருந்து அதே மொழியில் தட்டச்சு செய்வதற்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் அலுவலகக் கடமை நேரத்தில் A-9 வீதி, கைதடி, வடக்கு மாகாணசபை பேரவைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும். கொடுப்பனவுகள் பற்றி நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

(சி 1971)(3.7.8)



## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணப் பெறுகைகளுக்கான அழைப்பு
## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளுக்கான உலர் உணவு விநியோகம் - 2015/16

01. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைகளிற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல. | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்தரவாதவைப்புப்பணம் ரூபா |
|---|---|---|---|
| 01 | D/KN/2014/01 | பொது வைத்தியசாலை, கிளிநொச்சி | 100,000 |
| 02 | D/KN/2014/02 | பிரதேச வைத்தியசாலை, அக்கராயன்குளம் | 20,000. |
| 03 | D/KN/2014/03 | ஆதார வைத்தியசாலை, முழங்காவில் | 20,000 |

02. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவினை யுடையவராக இருத்தல் வேண்டும்

03. பொது வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களும், ஆதார வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது ஒரு வருடமும் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.

04. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியாக பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

05. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், கிளிநொச்சியில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **12.02.2015 தொடக்கம் 04.03.2015** வரையான காலப்பகுதியில் 0900 மணி தொடக்கம் 1500 மணிவரை (1230 தொடக்கம் 1300 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

06. விலைக்கேள்விகள் **06.03.2015**ஆம் திகதி 1000 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி இன் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.

07. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (தொலைபேசி இல. 021-228-5932) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

08. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

வைத்திய கலாநிதி (திருமதி). S. R. யூட்,
தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைகள் குழு,
வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், சுகாதார கிராமம்,
பண்ணை, யாழ்ப்பாணம்.

(சி.19594) (45.3.7)



## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணப் பெறுகைகளுக்கான அழைப்பு
## முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கான உலர் உணவு விநியோகம் - 2015/16

01. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைகளிற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றார்.

| தொடர் இல. | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்தரவாதவைப்புப்பணம் ரூபா |
|---|---|---|---|
| 01 | D/MT/2015/01 | பொது வைத்தியசாலை,முல்லைத்தீவு | 100,000 |
| 02 | D/MT/2015/02 | ஆதார வைத்தியசாலை, மல்லாவி | 50,000 |

02. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும்

03. பொது வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களும், ஆதார வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது ஒரு வருடமும் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.

04. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியாக பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

05. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **16.02.2015 தொடக்கம் 04.03.2015** வரையான காலப்பகுதியில் 0900 மணி தொடக்கம் 1500 மணிவரை (1230 தொடக்கம் 1300 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

06. விலைக்கேள்விகள் **06.03.2015ஆம்** திகதி 1000 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு இன் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.

07. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு (தொலைபேசி இல. 021-229-0111) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்

08. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி (திருமதி). S. R. யூட்,**
**தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைகள் குழு,**
**வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**சுகாதார கிராமம்,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**

(சி.19786) (45.3.7)

# போதையில் இடையூறு: 80 மணி நேர சமூகப்பணி

தென்மராட்சி, பெப். 12

பொது இடத்தில் பொது மக்களுக்கு இடைஞ்சல் விளை விக்கும் வகையில் மது போதையில் குழப் பம் விளை வித்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 80 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுமாறு உத்தரவிட்ட நீதி வான் 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்லவும் அனுமதித்தார்.

சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசார ணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண் டதையடுத்து 80 மணித்தியா லங்கள் சமூகப்பணியில் ஈடு படுத்த நீதிமன்ற சமுதாயங்கள் சீர் திருத்தப்பிரிவில் ஒப்ப டைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டு நபரை 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்லவும் உத்தர விட்டார். (வ-9)

# திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட போக்குவரத்து

## சிவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட கலந்துரையாடலில் ஆராய்வு

மன்னார், பெப்.12

மஹா சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ் வர ஆலயத்துக்கு மாவட்டத் தில் பல கிராமங்களிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந் தும் சுமார் ஐந்து இலட் சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தரு வர் என்று எதிர்பார்ப்ப தால் விசேட போக்கு வரத்து சேவையை நடத் துவது தொடர்பில் ஆரா யப்பட்டது.

மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீஸ வர ஆலய மஹா சிவராத் திரி உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் மன் னார் மாவட்ட அரச அதி பர் எம்.வை.எஸ். தேசப் பிரிய தலைமையில் திருக் கேதீஸ்வர ஆலய வசந்த மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை நடைபெற் றது. இதன்போதே இவ் விடயம் தொடர்பில் வலி யுறுத்தப்பட்டது.

இதற்கமைய இலங்கை போக்கு வரத்துச் சபை 45 பஸ் களையும், த[illegible] யார் போக்குவரத்து சங் கம் 50 பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்துவ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின் றன.

அத்துடன் இரு சேவை களும் ஒரே இடத்திலிருந்து 20 நிமிடங்களுக்கு ஒன் றாக சேவை யில் ஈடுபடுத் தப்படும் என்றும் தெரி விக்கப்பட்டது.

மேலும் ஆலய வீதி மற் றும் உள்ளக வீதிகள் சீர் செய்யப்பட வேண்டிய அவசியம் வலியுறுத் தப் பட்டதுடன் சுத்திகரிப்பு, மின்சாரம், உணவு, குடி தண்ணீர், சாரணியர் [illegible] மற்றும் பல விடயங்கள் தொடர்பிலும் கலந்துரை யாடப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் திருக் கேதீஸ்வர ஆலய முக்கியஸ்தர்களான தவ யோகராஜா, புலவர் திரு நாவுக்கரசு, எஸ்.எஸ். இராமகிருஷ்ணன், வீ.கந்த சாமி, திருமதி கைலாசப் பிள்ளை, எஸ்.ராகவன், மருத்துவகலாநிதி மு.கதிர் காமநாதன் உட்பட காவல் துறை அதிகாரிகள் மற் றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதி காரி கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-56)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**முருகேசு ஆறுமுகம்**

(தேசிய சிறுகைத்தொழில் கூட்டுத்தாபன பாரஊர்திச்சாரதி S.A.S லொறிஉரிமையாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.04.1925 | 22.02.2014 |

ஆண்டொன்று மறைந்து விட்டது
ஆனாலும் அகலுமா
உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிருள்ள வரை உங்கள் நினைவுகள்
என்றும் எம் மனதை விட்டு நீங்காது.

அன்னாரின் ஒருவருட நினைவாக இன்று (12.02.2015) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(C/19597)(3,5,7)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சிவஞானம் சாந்தி**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 12.09.1968 | 12.02.2009 |

எங்கள் குலவிளக்கே! நீங்கள் எம்முடன் வாழ்ந்த காலங்கள் பொன்னானவை நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கினாலும் எங்கள் உள்ளங்களை விட்டு நீங்கவில்லை. என்றும் பசுமையானவை உங்கள் நினைவுகள்.

(51356)(3.8)

நீங்காமல் நினைவுகூரும் -
கணவர்- சிவஞானம். பிள்ளைகள்- கௌசிகா, தர்சிகா, கௌசிகன், தர்சிகன், பௌசிகன். பேர்த்திமார்- அபிஷா, ஜர்ஷா.

60, புகையிரத நிலையவீதி. கிளிநொச்சி. குடும்பத்தினர்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கந்தையா மேரிலூர்து**

(மணியம்மா)


| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27.09.1948 | 12.02.2009 |

எங்கள் குடும்பத்தின்
குலவிளக்காக வாழ்ந்தவரே!
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த
காலங்கள்
பொன்னானவை என்றுமே
மறக்க முடியாதவை
அன்பு, பண்பு, அரவணைப்பு, உறவுபேணுதல்,
தெய்வநம்பிக்கை போன்ற நற்பண்புகளை
எமக்குக் கற்பித்தீர்கள்.
ஆறு ஆண்டுகள் என்ன ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும்
உங்களை மறக்கவே முடியாது.

மணியம்மா உணவகம், பாழ் வீதி, கிளிநொச்சி.

பிள்ளைகள்: கலா, ஈசன்

## நீங்காத நினைவுகளில் ஓராண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27.12.1946 | 23.01.2014 |

**அமரர் தாமோதரம்பிள்ளை மருதயனார்**

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் கொள்கைக்கு இலக்கணமாய் வாழ்ந்து வழிகாட்டிய எங்கள் குலவிளக்கே - நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும் - உங்கள் பசுமையான நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது

வாழும் காலம் வரை உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும் அன்புத் தாய் இராசம்மா, மனைவி புஷ்பராணி, பிள்ளைகள், மருமக்கள், பேரக் குழந்தைகள் அத்துடன் திரு திரு.திருமதி நித்தியானந்தன் குடும்பம், திரு.திருமதி ரவீந்திரன் குடும்பம், திரு.திருமதி இராஜரட்ணம் குடும்பம், திரு.திருமதி புவீந்திரன் குடும்பம், திரு.திருமதி அரசரட்ணம் குடும்பம், திரு.திருமதி விக்னேஸ்வரன் குடும்பம், திரு.திருமதி அருணகிரி குடும்பம் திரு.திருமதி பாலசிங்கம் குடும்பம், அமரர் சண்முகநாதன், அமரர் ரகுநாதன், திரு.திருமதி ராஜினிதேவி காந்தன் குடும்பம், அமரர் மகேஸ்வரி கந்தசாமி குடும்பம், மைத்துனிமார் அமரர் கந்தையா, திருமதி புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி குடும்பம், மைத்துனன் சிவசுப்பிரமணியம் குடும்பம் இத்துடன் நினைவுகூருகிறார்கள்.

தகவல்: வி.சிவசோதி,

லண்டன் தொலைபேசி: 00441708861036, 00447886510119

18/1, பாமன்கடை வீதி, கொழும்பு 06, இலங்கை.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் (12.02.2015)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.12.1946 | 30.12.2014 |

அமரர் **கனகசபை அரியநாயகம்** (சாமி)

[முன்னாள் யாழ். சிறிலங்கா அச்சக, யாழ்.ப.நோ.கூ.சங்க அச்சக பணியாளரும், இச் சங்கத்தின் பொது சபை உறுப்பினரும், 07ஆம் கிளைக்குழு உறுப்பினரும்]

அன்பெனும் விழுதினை ஆல மரம் போல் பரப்பி
பண்பெனும் பாடத்தை பகலவன் போல் ஒளி பரப்பி
தித்திக்கும் இனிய இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்க்கைப்
பாதையில் இறுதிப் பயணத்தையும் இன்பமாகக் கடந்து
உள்ளத்தில் கள்ளமில்லா குழந்தைபோல்
உத்தமனாய் உறவுகளை அரவணைத்து
காலத்தை வென்று நின்ற குல விளக்கே அப்பா!
உங்கள் ஆத்மா வண்ணார்பண்ணை
சிவன் பாதார விந்தத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!!

30.12.2014 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எம் பாசமிகு குடும்பத்தலைவரின் மரணச் சடங்கில் இறுதிவரை கலந்து கொண்டவர்கள், உள்நாடு வெளிநாடுகளில் இருந்து தொலை பேசியில், பத்திரிகையில் அனுதாபம் தெரிவித்த மற்றும் துண்டுப் பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்திய, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய மற்றும் அந்தியேட்டிக்கிரியைகளில், வீட் டுக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(56686)(10.7.3)

# நயினாதீவு மயானத்தில் மின் இணைப்பு பணிகள் ஆரம்பம்

நயினாதீவு மயானத்தில் சடலங்களை மின்சாரத் தின் மூலம் எரியூட்டக் கூடியதாக மின் இணைப்பு வழங் குவதற்கான நட வடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. தற் போது மயான வீதி யில் மின்கம்பங்கள் நடும்பணி கள் இடம்பெறு கின்றன. விரைவில் மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது குறிப் பிடத்தக்கது. (வ-7)

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்வேன்

## கடமைகளைப் பொறுப்பேற்று உரையாற்றிய கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மூதூர், பெப்.12

எமது ஆட்சிக்காலத்தில் தாம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு முயற்சி செய்வேன். எனது செயற்பாடுகளில் எவ் வித மத, இன பாகுபாடுகளும் இன்றி மூவின மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் சமத்துவ மான சேவையை நாம் வழங்கு வோம்.

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண சபையின் புதிய முதல மைச்சர் காபிஸ் நசீர்.

முன்னாள் விவசாய அமைச் சரும் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினரு மான காபிஸ் நசீர் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை காலை 8 மணியளவில் திரு கோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள



முதலமைச்சர் அலுவலகத்துக்குச் சென்று தமது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார். அதன் பின்னர் மாகாண சபை வளா கத்தில் உள்ள கொடிக்கம்பத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு தனதுரையில் மேலும் தெரி வித்ததாவது:

இளைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வரு கையை அதிகரிக்கச் செய்து கிழக்கு மாகாணத்தை வளம் பொருந் திய மாகாணமாக மாற்றப் பாடுபடு வேன்.

முதலமைச்சர் பதவியை வழங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் முஸ்லிம் காங்கிர ஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகி யோருக்கு இந்த வேளையில் நன் றிக ளையும் கூறிக் கொள்வதாகத் தெரிவித்தார். (வ–40)

# மேர்வினுக்கு எதிரான முறைப்பாடு

கொழும்பு, பெப்.12

முறையற்ற விதத்தில் பணம் சம்பா தித்தல் உள்ளிட்ட பல மோசடிச் செயல் கள் தொடர் பாக முன்னாள் அமைச் சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

மேல்மாகாண சபையின் ஆளும் தரப்பின் தலைமை அமைப்பாள ரான சட்டத்தரணி சிசிர ஜயகொடி உட்பட்ட காணி யைப் பாதுகாக்கும் சட்டத் தரணிகள் ஒன்றியத்தால் கடந்த 6ஆம் திகதி லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே அடுத்த வாரத்தில் குற்ற விசாரணை திணைக்களத்துக் கும் வேறு மொரு முறைப்பாடு முன் வைக்கப்படும் என்றும் சட்டத் தரணி சிசிரஜயகொடி தெரிவித்தார். (வ–22)


பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை

## முல்லைத்தீவு கேள்வி அறிவித்தல்

பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு
2015/16 ஆம் ஆண்டுக்கு
தேவையான வழங்கல்கள்/சேவைகள்

01. முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2015/16 ஆம் ஆண்டுக்கானபின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
    அ. சமைத்த உணவு வழங்கல்கள்
    ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
    இ. வாகன சுத்திகரிப்புசெய்தல்.

    2015ஏப்ரல் முதலாம் திகதிமுதல் 2016 மார்ச் 31ஆம் திகதிவரையான ஒரு வருடகாலப் பகுதிக்கு வழங்கல்கள், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 16.02.2015 தொடக்கம் 04.03.2015ஆம் திகதி பி.ப.3.30 மணிவரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல்/ சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.
02. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
03. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ள லாம். கேள்விப்பத்திரங்கள் 06.03.2015ஆம்திகதி மு.ப.10.00 மணிக்கு முன்கிடைக்க கூடியவாறு **தலைவர், கேள்விச் சபை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு** எனும் முகவரிக்குப்பதிவு தபாலிலோ அல்லதுநேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 06.03.2015மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும்.
04. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

A) சமைத்த உணவு வழங்கல்

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம்(ரூபா) |
|---|---|---|---|
| ஆதாரவைத்தியசாலை,மாங்குளம் | சமைத்தஉணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,புதுக்குடியிருப்பு | சமைத்தஉணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,நட்டான்கண்டல். | சமைத்தஉணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,ஒட்டுசுட்டான் | சமைத்தஉணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,உண்ணாப்பிலவு | சமைத்தஉணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,சம்பத்நுவர | சமைத்தஉணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,அளம்பில் | சமைத்தஉணவு | 250.00 | 20,000.00 |
| பிரதேசவைத்தியசாலை, கொக்குளாய் | சமைத்தஉணவு | 250.00 | 20,000.00 |
| பிரதேசவைத்தியசாலை, மூங்கிலாறு | சமைத்தஉணவு | 250.00 | 20,000.00 |

B) அழுக்குத்துணிசலவை செய்தல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாதவைப்புத் தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம்(ரூபா) |
|---|---|---|
| மாவட்டபொதுவைத்தியசாலை,முல்லைத்தீவு | 200.00 | 5,000.00 |
| ஆதாரவைத்தியசாலை,மல்லாவி | 200.00 | 2,000.00 |
| ஆதாரவைத்தியசாலை,மாங்குளம் | 200.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,புதுக்குடியிருப்பு | 200.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,நட்டான்கண்டல். | 200.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,ஒட்டுசுட்டான் | 200.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,உண்ணாப்பிலவு | 200.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,சம்பத்நுவர | 200.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை, அளம்பில் | 200.00 | 2,000.00 |

C) வாகனசுத்திகரிப்பு

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதிஆவணம் (ரூபா) |
|---|---|---|
| பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர்பணிமனை,முல்லைத்தீவு. | 500.00 | 50,000.00 |

**ஆவணங்கள்**

1. 01.01.2015ஆம் திகதிக்குபின் அந்தந்த பிரதேச செயலாளர்களிடமிருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதிஉறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201,பொது 170 படிவம்) அல்லது வங்கி உத்தரவாதகடிதம்
2. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர்எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
3. கேள்விநேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
4. கேள்விதொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
5. மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இல.0212290111

**வைத்திய கலாநிதி திருமதி த. பூங்கோதை,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பி.சு.சே.ப.பணிமனை,**
**முல்லைத்தீவு.** (சி.119705) (45.7.3)



## கேள்வி அறிவித்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
பணிமனை – கிளிநொச்சி
2015ஆம் வருடத்திற்கு தேவையான வழங்கல்கள் சேவைகள்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குட்பட்ட வைத்தியசாலைகளிற்கு 2015 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
அ. சமைத்த உணவு வழங்கல்கள்
ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
இ. குடிநீர் விநியோகம்
ஈ. வாகன சுத்திகரிப்பு செய்தல்.

2015 ஏப்ரல் முதலாம் திகதி முதல் 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான இவ் வழங்கல் சேவைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விலைக்கேள்விதாரர்கள் உணவு, சேவை விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவுடையவராக இருத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 12.02.2015 தொடக்கம் 04.03.2015ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரையும் கிளிநொச்சியில் இயங்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு அல்லது தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
3. விண்ணப்பிக்கத்தகுதியானோர் கீழ்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள்/ சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் கிளிநொச்சியில் இயங்கும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 06.03.2015ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர் கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப்பெட்டியிலோ இட முடியும். கேள்விகள் யாவும் மு.ப 10.30 மணிக்கு திறக்கப்படும்.
4. வைப்புத்தொகைகளும் ஆவணங்களும்

அ. சமைத்த உணவு

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம்(ரூபா) |
|---|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை பூநகரி | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை பளை | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி. | சமைத்த உணவு | 1000.00 | 40000.00 |

ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்.

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூ.பா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூ.பா |
|---|---|---|
| மாவட்டப் பொது வைத்தியசாலை கிளிநொச்சி. | 1000.00 | 50000.00 |
| ஆதார வைத்தியசாலை முழங்காவில் | 500.00 | 10000.00 |
| பிரதேச வைத்தியசாலை தர்மபுரம். | 500.00 | 10000.00 |
| பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை பூநகரி | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை பளை | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி. | 500.00 | 5000.00 |

இ. குடிநீர் விநியோகம்.

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூ.பா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூ.பா |
|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | 500.00 | 5000.00 |

ஈ. வாகன சுத்திகரிப்பு

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூ.பா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூ.பா |
|---|---|---|
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி | 1000.00 | 30000.00 |

**ஆவணங்கள்:**

1. 31.01.2015 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப்பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அல்லது வங்கி உத்தரவாதக்கடிதம்.
2. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
3. கேள்விநேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
4. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும்.
5. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**Dr.P.கார்த்திகேயன்,**
தலைவர் பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 10 . 1948 — மறைவு 16 . 01 . 2012

திதி: 12.02.2015 தை அமாவாசை அட்டமி

அமரர் **கனகராயர் சிவபாலன் (துரை)**

ஓய்வு பெற்ற கணக்காளர் - இலங்கை போக்குவரத்து சபை (C.T.B) கோண்டாவில்

பாசத்தை சுமந்து வழிகாட்டியாக
எம்மை வழிநடத்திய தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"அருணாலயம்" அம்பனைச்சந்தி, பண்ணாலை, தெல்லிப்பழை. — என்றும் உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்.

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சின்னையா பாஸ்கரலிங்கம்**

(முன்னாள் தபாலதிபர் - வவுனியா)

தோற்றம் 20.04.1946 — மறைவு 27.01.2000

திதி: அட்டமி (12.02.2015)

எங்கள் குடும்பத்தின் கோபுரமே
எம்மைப் பாசத்துடன் காத்த அன்புத்தெய்வமே!
நினையாத நொடிப்பொழுதில் எமைவிட்டு நீங்கி
ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும்
நீங்காத உங்கள் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

"சாளம்பன்" கரணவாய் மத்தி, கரவெட்டி. — மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு ★ 06 ★ 07 ★ 1929 — இறப்பு ★ 14 ★ 01 ★ 2015

**திருமதி அன்னம் சித்தர்**

[பிரபல வெங்காய வியாபாரி]

பாரம் தலை சுமந்து
நல்வாழ்வு சமைத்தளித்து-உடல்
தளர்ந்து முகம் மறைத்தீர்கள்!
எங்கள் உயிர் நெஞ்சினிலே
உங்கள் நினைவு பாரம் தான்...

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (13.02.2015) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு, அச்சுவேலி. — குடும்பத்தினர்.

# திட்டமிட்டு செயற்படுத்தப்படும் கலாசாரச் சீரழிவுகள்

## புனித.சாள்ஸ் ம. வி. விளையாட்டு விழாவில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.12
மதுபான பாவனையில் வட மாகாணம் முன்னிலையில் உள்ளது. போதைப்பொருள் தொடர்பில் பிள்ளைகளை மிகக் கவனமாகப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு பெற்றோர்களுக்கே உண்டு. கலாசார சீரழிவுகள் திட்டமிட்டு செயற்படுத் தப்படுகின்றன.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
யாழ்.புனித.சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தனதுரையில் தெரிவித்ததாவது:
கலாசார சீரழிவை குறுகிய காலத்துக்குள் செயற்படுத்த தமிழர் அல்லாதவர்கள். இராணுவம் போன்ற சக்திகள் முழுமூச்சாகச் செயற்படுகின்றன"– என்றார்.
போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணம், பரிசில்களையும் மற்றும் வெற்றியீட்டிய இல்லங் களுக்கு வெற்றிக் கேடயத் தையும் வழங்கினார். (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



எங்கள் மடியில் 20 . 04 . 2009 — இறைவன் அணைப்பில் 24 . 01 . 2014

திதி: 12.02.2015

செல்வன் **சசிகரன் கோபிஷன்**

இமை மூடித்திறப்பதற்குள்.
ஆறாத்துயர் ஓயமுன்
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகள் எங்களுடனே.

தனங்கிளப்பு, சாவகச்சேரி. (58669)(3.6) — குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் நீண்ட காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர் திருமதி **சியாமளா முத்துக்கிட்டினர்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி . காயத்திரி ராஜா அவர்களின் அன்புத் தந்தை

**துரையர் ராஜா**

அவர்கள் 10.02.2015 அன்று அமரத்துவம் அடைந்த செய்தியைக் கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்கள்
மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 08.10.1952
உதிர்வு : 12.01.2015

**திருமதி யோகராணி சிவசுப்பிரமணியம்**

கடந்த 12.01.2015 இல் இறைபதம் எய்திய எமது அன்புத் தாயார் திருமதி யோகராணி சிவசுப்பிரமணியம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (12.02.2015) வியாழக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் (இராமநாதன் வீதி, ராஜா கிறீம்ஹவுஸ்) மதியம் 12 மணியளவில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது தாயாரின் பிரிவுத் துயரில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

1010/34, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்.

# கங்கையில் மூழ்கிய சிறுவனை காப்பாற்றிய கூ.ச.பணியாளர்கள்

யாழ்ப்பாணம், பெப். 12
கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்த 11 வயதுச் சிறுவன் திடீரென நீரில் மூழ்கி உயிருக்குப் போராடி தத்தளித்துக் கொண்டிருந்த போது பனை தென்னை வள கூட்டுறவு சங்க பணியாளர்களால் காப்பாற்றப்பட்ட சம்பவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.
பனை தென்னை வள அபிவி ருத்தி கூட்டுறவுச் சங் கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் உள்ள பனை தென்னைவள கூட்டுறவு சங்க பணியாளர்கள் மேற்கொண்ட தென்பகுதிக்கான சுற்றுலாவின் போது நேற்று கதிர்காமத் துக்குச் சென்றனர். அங்கு மாணிக்க கங்கையில் நீராடு வதற்காக சென்றபோது இரத்தினபுரியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் தமது பிள்ளைகளுடன் நீராடிக்கொண் டிருந்தனர்.
அப்போது அந்தக்குடும்பத்தில் 11 வயதுச் சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி யதை அவதானித்த வேலணை பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமை யாளர் இராமச்சந்திரன் கங்கையில் நீந்தி சுழியோடி மூழ்கிய சிறுவனை உயிருடன் மீட்டு கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். நீரில் மூழ்கிய சிறுவனுக்கு உடனடியாக முதலு தவி சிகிச்சை வழங்கப்பட்டு அவனின் உயிர் காப்பாற்றப்பட்டது.
சிறுவனை காப்பாற்றிய வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் மற்றும் ஏனைய சங்கங்களின் பணி யாளர்கள் அனைவரையும் அங்கு கூடியிருந்த மக்கள் பாராட்டி மகிழ்ச்சி தெரி வித்தனர்.
அதனைவிட உடனடியாக வாகனம் மூலம் ஒலி பெருக்கி ஊடாக யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்க பணியாளர்களால் மாணிக்க கங்கையில் நீரில் மூழ்கிய சிறுவனை காப் பாற்றிய சம்பவம் தொடர்பா[illegible] பாராட்டும் அறிவிக்கப்பட்டது.
பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தலைமையில் சென்ற 32 வரையிலான சங்கங்களின் பணியாளர்கள் இந்த சுற்றுலாவை மேற்கொண்டனர். (வ–17)

# பாண்டியன் தாழ்வில் வைரவருக்கு உற்சவம்

பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் பூசை வழிபாடுகளும் நடைபெற்று மாலை 5 மணிக்கு விசேட பூசையுடன் திருவூஞ்சல் இடம் பெற்று திருவீதி உலாவும் நடைபெறும்.
மறுநாள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கி[illegible]ம காலை 9.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்று நண்பகல் அன்னதானமும் இடம்பெறும். (ஓ–135)

# நாய் குறுக்கே பாய்ந்ததால் தடம் புரண்டது ஓட்டோ

கலிகை சந்தியிலிருந்து நெல் லியடி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவுக்கு குறுக்கே நாய் பாய்ந்ததால் ஓட்டோ வீதியருகேயுள்ள வாய்க்காலினுள் தலைகீழாக தடம்புரண்டது. இந்தச் சம்வம் நேற்று முன்தினம் மாலை நெல்லியடி, அரசடிச் சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.
ஓட்டோவில் பயணித்த வயோதிபப் பெண்ணும் அவரின் மகளும் அதிர்ஷ்ட வசமாக காயங்கள் இன்றி ஓட்டோவிலிருந்து மீட்கப்பட்டனர். எனினும் ஓட்டோச் சாரதி படுகாயங்களுக்கு உள்ளானார். (வ–105)

# ஐந்துக்கு பத்து %

*உங்கள் 5 வருட நிலையான வைப்புக்கு ஆகக்கூடிய 10% வட்டி (நிறைவடையும் போது)
வ.நி.வீ. 8.45%

வேறு நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

மேலதிக விபரத்துக்கு அருகில் உள்ள சனச அபிவிருத்தி வங்கியை நாடுங்கள் அல்லது அழையுங்கள் 0112 832 577
Fitch Rating BB+(lka)(Stable) RAM Rating BBB Reg. No: PB62PQ

SDBL சனச அபிவிருத்தி வங்கி
நேசத்தின் முன்னோடி


## அம்மாடியோவ்

இத்தனை பரிசுகளும்

# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு ..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

30 அகவையில் உதயன்



# மீண்டும் முதல்வரானார் ஆம் ஆத்மி கெஜ்ரிவால்

புதுடில்லி,பெப்.12
டில்லியில் வரலாறு காணாத பெரு வெற்றியைச் சந்தித்து, மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்கவுள்ள கெஜ்ரிவால், மக்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.
70 தொகுதிகள் கொண்ட டில்லி சட்டசபையில், 67தொகுதிகளில் அதிஉச்ச வெற்றியைப் பெற்றுக் கொண்ட கெஜ்ரிவாலுக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமுள்ளன.
தமது வெற்றி பற்றி ஆம் ஆத்மியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவிக்கையில்;
இந்தவெற்றியால் நாங்கள் உணர்ச்சி வசப்படவில்லை,மக்கள் எங்களுடன் தான் இருக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். தேர்தல் வாக்குறுதியில் கூறியதுபோல், ஊழலுக்கும், வி.ஐ.பி., கலாசாரத்துக்கும் முடிவு கட்டுவோம் என்று தெரிவித்துள்ளார்.



டில்லி சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய அமைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால். (ரி)

## எகிப்திய பத்திரிகையாளரை விடுவிக்க முயலாத கனேடிய அரசு

ஒட்டவா,பெப்.12
எகிப்திய சிறையில் வைக்கப்பட்டுள்ள கனேடியப் பத்திரிகையாளர்களின் வழக்கை, கனடிய அரசு கையாளும் முறை குறித்து தாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.
கனேடியப் பத்திரிகையாளர் மொகமட் வாஹ்மி கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக எகிப்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு மீண்டும் மறுவிசாரணைக்கு திகதி குறிக்கப்பட்டிருந்தது.
அந்தச்செய்தியைக் கேட்ட அவரது குடும்பத்தினர் கனேடிய அரசு அந்த வழக்கைக் கையாளும் முறையினால் தாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.
அந்த வழக்கை கையாள்வதில் கனடிய அரசின் பழைமைவாத அணுகுமுறை எங்களை நம்பிக்கையிழக்கச் செய்துள்ளது என குடும்பத்தினர் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர். (ரி)



## கமரூனில் பயணிகளை கடத்திய தீவிரவாதிகள்

கோசா, பெப்.12
கமரூன் நாட்டுக்குள் புகுந்த போகாஹராம்தீவிரவாதிகள் பயணிகள் பஸ் ஒன்றைக் கடத்திச் சென்றுள்ளனர். பஸ்ஸில் 30 பயணிகள் இருந்துள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு கமரூனில் உள்ள உள்ளூர் சந்தைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய பயணிகள் அவ்வேளை அந்த பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பஸ்ஸை வழிமறித்த தீவிரவாதிகள் பயணிகளைப் பஸ்ஸுடன் கடத்திச் சென்றுள்ளனர்.
அதன் பின்னர்நைஜீரியா எல்லையில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் அந்த பஸ்ஸைக் கைவிட்டு விட்டுச்சென்றுள்ளனர். ஆனால் பயணிகளைத் தம்முடன் கடத்திச் சென்றுள்ளனர். அவர்களை தீவிரவாதிகள் நைஜீரியா நாட்டுக்குள் கடத்திச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ரி)

## அமெ.பெண்மணியின் கொலையை உறுதி செய்தார் அதிபர் ஒபாமா

வொஷிங்டன், பெப்.12
சிரியாவில் இஸ்லாமிய அரசு தீவிரவாதக்குழுவால் பிடித்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் பெண்மணி கைலா ஜீன் முல்லர் கொல்லப்பட்டுள்ளதை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உறுதிசெய்திருக்கிறார்.



அந்த 26 வயதானதொண்டு நிறுவன ஊழியரது கொலைக்கு காரணமானவர்களை அமெரிக்கா நீதியின் முன்நிறுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அவர் ஜோர்தானின் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தீவிரவாதிகள் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தனர். (ரி)

# டில்லியில் 46ஆவது ஆளுநர்கள் மாநாடு ஆரம்பம்

### தலைமை தாங்குகிறார் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி



புதுடில்லி, பெப். 12
டில்லியில் 46ஆவது ஆளுநர்கள் மாநாடு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தலைமையில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் 21 மாநில ஆளுநர்கள், 2 துணைநிலை ஆளுநர்கள் கலந்து கொண்டுள்ளனர். மேலும், குடியரசுத் துணைத்தலைவர் அமீத் அன்சாரி, பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு உட்பட மத்திய அமைச்சர்கள் பலரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.
உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் எல்லைப்பாதுகாப்புகுறித்துமாநாட்டில் சிறப்பு கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நிதி மற்றும் வேலை வாய்ப்புக்களைப்பெருக்குதல்,திறன் மேம்பாட்டுத்திட்டங்களைநிறைவேற்றுதல் ஆகியவை குறித்தும் மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குடியரசுத் தலைவராக பிரணாப் முகர்ஜி பதவியேற்ற பின்னர் நடைபெறும் 3ஆவது ஆளுநர்கள் மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## அமர்த்தியா சென்னுக்கு பிரிட்டனின் சர்வதேச விருது



சென்னை,பெப். 12
நோபல் பரிசு பெற்ற இந்தியர் அமர்த்தியா சென், பிரிட்டனின் முதல் 'ஜோன் மேனார்ட் கேன்ஸ்' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
பிரிட்டனின் புகழ்பெற்ற பொருளாதார நிபுணரான 'ஜோன் மேனார்ட் கேன்ஸ்' நினைவாக சாள்ஸுடன் அறக்கட்டளை 'ஜோன் மேனார்ட் கேன்ஸ்' என்ற பெயரில் சர்வதேச விருது ஒன்றை உருவாக்கியுள்ளது.
முதல்முறையாக அந்த விருதுக்கு அமர்த்தியா சென் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இதுகுறித்து தெரிவுக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், பொருளாதாரத் துறைக்கு மாபெரும் தொண்டுஆற்றிய ஜோன்மேனார்டு கேன்ஸ் நினைவாக வழங்கப்படும் இந்த விருதுக்கு, சமுதாயத்துக்கு மிகச்சிறந்த பணியாற்றியுள்ள அமர்த்தியா சென்னை தெரிவு செய்துள்ளோம் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த விருதுடன்.பரிசுத் தொகையாக7 லட்சம் இந்திய ரூபா அமர்த்தியா சென்னுக்குவழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ரி)

# பாகிஸ்தான் தாக்குதலில் 15 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், பெப். 12
பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.
பலுசிஸ்தானின் கரன் மாவட்டத்தில் தீவிரவாதிகளைக் கண்டு பிடிக்க மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையில் எல்லைப்புற இராணுவப் படையினர் ஈடுபட்டிருந்தனர். அதன் போது ஓரிடத்தில் பதுங்கியிருந்த தீவிரவாதிகள், இராணுவத்தினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர். இதனையடுத்து, இராணுவ வீரர்கள் பதில் தாக்குதல் நடத்தியதில் 15 தீவிரவாதிகள் சாவடைந்துள்ளனர். இராணுவ வீரரொருவர் அந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (ரி)



# ஸ்கை டைவிங் ஜோடியின் திகிலான தருணங்கள்

பாங்கொக், பெப். 12
தாய்லாந்தில்ஸ்கைடைவிங்விளையாட்டில்ஈடுபட்டிருந்தஜோடியொன்று அதிர்ஷ்டவசமாக விபத்திலிருந்து உயிர் தப்பிய சம்பவம் குறித்த வீடியோ வெளியாகியுள்ளது.
தாய்லாந்தின் பட்டாயாநகரில் மிகவும் பிரசித்தி பெற்ற விளையாட்டான ஸ்கை டைவிங்கில், 13 ஆயிரம் அடிகள் உயரப் பறந்து அங்கிருந்து குதிப்பது வழக்கம்.
அந்த விளையாட்டில் 15 வருடங்கள் அனுபவம்வாய்ந்த பயிற்சியாளரொருவர் அதே பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவருடன் ஸ்கை டைவ் செய்ய விமானத்தில் பறந்துள்ளார்.இந்தநிலையில்அவ்விருவரும் விமானத்திலிருந்து குதித்த சில



நொடிகளில், விமானம் அவர்களை நோக்கி வெகுவிரைவாக கீழிறங்கியுள்ளது. அதன்போது விமானத்தின் முன் புறத்தில்முன் இறக்கைகள், திடீரென அவர்களின்தலையை வெட்டுவது போல் வந்து நூலிழையில் விலகிச் சென்றுள்ளது.
கண் இமைக்கும் நேரத்தில் உயிர் பிழைத்த இருவரும் மிகுந்த கவனத்துடன் பாதுகாப்பாக தரையிறங்கியுள்ளனர். (ரி)




சீனாவின் பீஜிங்கில் நடைபெற்றுவரும் பனித்திருவிழாவில் சிறுவர்கள் மகிழ்வுடன் கலந்து கொண்டுள்ளார்கள். சிறுவன் ஒருவன் ரோபோ போன்று வடிவமைக்கப்பட்டுள்ள வண்டியில் சவாரி செய்வதும் சிறுமியொருவர் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ள பென்குயின்களுடன் மகிழ்வதுமான காட்சி.

## தீவிரவாதிகளின் வீடியோவில் ஐ.எஸ்.தலைவர் அல்பாக்தாதி

அபுஜா, பெப்.12



நைஜீரியாவில் அட்டூழியம் செய்து வரும் போகோ ஹராம் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள வீடியோவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல்பாக்தாதியும் காணப்படுகிறார்.

நைஜீரியாவில் தனி நாடு கோரி வரும் போகோ ஹராம் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராகத் தொடர்ந்து பல குண்டுவெடிப்புக்களையும், மனிதவெடிகுண்டுத் தாக்குதலையும் நிகழ்த்தியதில் பலர் சாவடைந்துள்ளனர்.

மேலும், நைஜீரியாவின் மத்திய வடக்கு, வடகிழக்கு ஆகிய பகுதிகளில் தீவிரவாதத் தாக்குதல்களுக்குப் பயந்து இதுவரை 1.5 மில்லியன் பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்தநிலையில் போகோஹராம் தீவிரவாதிகள் வெளியிட்ட வீடியோவில் முதன்முறையாக ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பின்தலைவர் அல்பாக்தாதியைக் காண்பித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து நைஜீரியாவின் யோப் மாநிலத்தில் உள்ள தமாதாரு பகுதி மீது அவர்கள் மேற் கொண்ட தாக்குதல்களும் அந்த வீடியோ காட்சியில் இடம்பெற்றுள்ளன. (ரி)

## ஐரோப்பாவின் அமைதியை குலைக்க முனையாதீர்கள்

### எச்சரிக்கிறார் ஜேர்மன் அதிபர்

வொஷிங்டன், பெப். 12



அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்கெல், ஐரோப்பாவின் அமைதிக்கு அச்சுறுத்தலாக விளங்காதீர்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வொஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் ஒபாமாவைச் சந்தித்து பேசிய அவர், உக்ரைன் உள்நாட்டுப் பிரச்சினைகள் விடயத்தில் தீர்வு காணும் வகையில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

பின்னர் நிருபர்களிடம் மெர்கெல் பேசுகையில்; பிராந்திய ஒருமைப்பாடுகளை பின்பற்றாவிட்டால் ஐரோப்பிய நாடுகளில் அமைதியை நிலைநாட்ட முடியாது என்றும், ஆயுதங்களின் வலிமையைக் காட்டி ஐரோப்பாவின் அமைதியைச் சீர்குலைக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மேற்கத்தைய நாடுகள் கண்டிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைன் நாட்டில் உள்நாட்டு தாக்குதல்களில் 5,400 பேர் கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்த மெர்கெல், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் உக்ரைன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதுபற்றி ஒபாமா தெரிவிக்கையில்; ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளில் ரஷ்யா தனது இராணுவ பலத்தை வெளிக்காட்ட முயற்சி செய்து வருவதைக் கண்டித்ததோடு, ரஷ்யாவின் இந்த நடவடிக்கைகளை மேற்கத்திய நாடுகள் ஒருபோதும் அனுமதிக்காது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைன் நாட்டுக்கு ஆயுதங்கள் வழங்குவது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும், ஆனால் அது தொடர்பாக எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

## சீனாவில் மனித முகத்துடன் அதிசயப் பன்றிக்குட்டி

நன்னிங், பெப்.12

சீனாவின் நன்னிங் நகரத்தில் உள்ள யனான் நகர்ப்புறத்தில் பன்றிப் பண்ணையொன்றை டாலு என்பவர் நடத்திவருகிறார்.



பண்ணையில் வளர்ந்து வரும் இனக் கலப்புச் செய்யப்பட்ட ஒரு பன்றி சில தினங்களுக்கு முன்னர் ஒரே தடவையில் 19 குட்டிகளைப் ஈன்றது. அவற்றைப் பார்வையிட்ட டாலு, கடைசியாகப் பிறந்த குட்டி இதர குட்டிகளை விட பெரிய அளவில் இருந்ததால் ஆச்சரியத்தில் மூழ்கினார்.

அந்தப் பன்றிக் குட்டியைக் கையில் எடுத்துப் பார்த்தபோது அந்தக் குட்டிக்கு மனிதனின் முகமும், நெற்றிப்பகுதியில் ஆண்குறியும் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

சில தினங்களுக்குள் அது தொடர்பான செய்தி நன்னிங் நகரம் முழுவதும் பரவியது.

இதையறிந்த ஒரு சீன நாளிதழ் அந்தக் குட்டிப் பன்றியின் புகைப் படத்தோடு சிறப்பு செய்திக் கட்டுரையொன்று வெளியிட்டுள்ளது. (ரி)

## பாதுகாப்பாக கடலில் இறங்கியது தனியார் விண்கலம் ஸ்பேஸ் எக்ஸ்

நியூயோர்க், பெப். 12



சர்வதேச விண்வெளி ஆய்வகத்தில் இருந்து புறப்பட்ட தனியார் விண்கலம் பாதுகாப்பாகக் கடலில் இறங்கியுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா ஆகியநாடுகள்இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வகத்தை அமைத்து வருகின்றன. அதற்குத் தேவையானஉபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், கட்டுமானப் பொருள்கள், தனியாருக்கு சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் என்ற விண்கலம் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஏற்கனவே விண்வெளி ஆய்வகத்துக்குப் பொருள்களை ஏற்றிச் சென்ற தனியார் விண்கலம், தரை இறங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சர்வதேச விண்வெளி ஆய்வகத்தில் இருந்து புறப்பட்ட ஸ்பேஸ் எக்ஸ் என்ற தனியார் விண்கலம் பாதுகாப்பாக தரை இறங்கியுள்ளது. அதுகலிபோர்னியாவில்இருந்து 418 கி.மீற்றர் தொலைவிலுள்ள லாங்பீச் என்ற இடத்தில் பாரா சூட் மூலம் பசுபிக் கடலில் இறக்கப்பட்டுள்ளது.

1814 கிலோ நிறையுள்ள அறிவியல் உபகரணங்கள் மற்றும் விண்வெளி வீரர்களின் உடைகள் போன்ற பொருள்களைச் சுமந்து வந்துள்ளது. இதற்கிடையே பால்கன் 9 ரொக்கெட் நேற்று விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. (ரி)



## பங்களாதேஷில் 32 பேர் மர்மச்சாவு

டாக்கா, பெப்.12

பங்களாதேஷில் வடகிழக்கு நகரமான சில்லட்டிலுள்ள உஸ்மானி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 32பேர் மர்மமாக உயிரிழந்துள்ளனர்.

அந்த மருத்துவமனையில் நேற்று முன்தினம் பிறந்த 5 குழந்தைகள் மர்மமான முறையில் சாவடைந்துள்ளன. ஒன்றரை நாள்களுக்கு முன் பிறந்த மேலும் 5 குழந்தைகளும் இறந்திருக்கின்றன. இதே போன்று பெரியவர்கள் 22 பேரும் இறந்துள்ளனர்.

ஒரு நாளில் 32 பேர் அடுத்தடுத்து மர்மமாக இறந்திருப்பது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. (ரி)

## முதல் காதலை ம[illegible]ப்பது கடினம் புதிய ஆய்வில் பி[illegible]ட்டனின் முடிவு

லண்டன், பெப். 12

முதல் காதலை மறப்பது மிகக் கடினம் என்று பிரிட்டனில் 'தி பெஸ்ட் ஒவ் மீ' என்ற திரைப்படத்துக்காக மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வு ஒன்றின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த முடிவானது, தமிழ் இலக்கியம், சினிமா போன்ற அனைத்து வடிவங்களிலும் பல்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு வழிகளில் சொல்லப்பட்ட பழைய விடயம்தான் என்பது கவனிக்கத்தக்கது.

பிரிட்டனில் இந்தப் புதிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தங்களது முதல் காதலையும்பழைய நினைவுகளையும் தற்போதும் நினைவில் கொண்டிருப்பதாக அந்த ஆய்வில் பதிலளித்துள்ளனர். (ரி)

# வற்றாத வாழ்வு தரும் வற்றாக்கை அம்மன்

***9.2.2015 அன்று கும்பாபிஷேகம் நடந்ததையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.***

**கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்**

“மந்த மாருதம் தவழும் கந்தரோடைப் பதியிலே, மருத நிலம், நெல் மணிகளாக விளைய, மாண்புடைய ஊர்மக்கள் திருவோடு பொலிய, விரதமோடு அடியார்கள் வெல்லும் சித்தி பெற, வேண்டும் வரம் பெற விரும்பியதை அடியார்கள் வாரி வழங்க, பெருநிதிதர வல்லோர் பெற்றதை நிவேதனம் செய்ய, பண்ணோடு இசை வல்லோர் பாலிக்கும் திருமுறை ஓத, பத்திரமாய் வேதவிற்பன்னர் பணிவுடன் மந்திரங்களை உச்சாடனம் செய்ய மங்கல வாத்தியங்கள் இசைமாரி பொழிய ஸ்ரீவிசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாதப் பெருமான் கோவிலாம் வற்றாக்கை அம்மன் திருப்பதி கும்பாபிஷேகம் இடம்பெற்றதால் வரமாகிறது. கும்பாபிஷேகமானது மூர்த்திகளுக்கு அபரிமிதமான கீர்த்திகளை உண்டுபண்ணுவதாகும். அத்துடன் தெய்வங்களுக்கு அளவிறந்த சந்தோஷத்தையும் ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. தெய்வங்கள் மகிழ்ந்தால் அது நாட்டுக்கு நன்மைபயக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆதலால் வீடும் சரி, ஊரும் சரி, நாடும் சரி இனிவருங் காலம் யாவுமே நலமாக அமையும் என்பது திண்ணமே.

ஆகம விதிப்படி அமைந்த இந்த ஆலயம் கந்தரோடை வாழ் மக்களா லும் உள்ளூர்– வெளியூர் வாழ்மக்களாலும் குறிப்பாக விவசாய மக்களாலும் உளமாரப் போற்றி வணங்கப்படுகிறது. இதனாலன்றோ இங்கு வற்றாத கையுடைய பலர் வாழ்ந்து இருக்கிறார்கள். வாழ்ந்தும் வருகிறார்கள். வாழவும் இனிப் பிறப்பார்கள். இலங்கையிலும் சரி, உலகிலும் சரி இது போன்ற பேறுடைய பெயர் கொண்ட ஆலயம் வேறெங்கிலும் இல்லையெனலாம்.

இந்த ஆலயத்தின் மூலமூர்த்தி சிவலிங்கம், அம்பாள், நடராஜர், தெட்சணாமூர்த்தி, பிள்ளையார், முருகன், சனீஸ்வரன், நவக்கிரக நாயகர்கள், சூரிய மூர்த்தி, வைரவர் ஆகிய தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஒழுங்கான பூஜைகளோடு கூட்டுப்பிரார்த்தனையும், மஹோற்சவ, விஷேட தினங்களும் நேர்த்தியாக நிறைவேற்றப்படுகிறது. நித்திய– நைமித்திய பூஜைகளுக்கு எந்தவிதக் குறையுமின்றி அருள்பாலிப்பதனால் கந்தரோடை ஒருபோதும் தோற்றதில்லை. இனிமேல் தோற்பதுமில்லை.

சேர,சோழ, பாண்டிய கால வரலாறுகளோடு இந்த ஆலயம் தொடர்புடையதாக அறியப்படுகிறது. அல்லாமலும் கந்தரோடையானது புராதன வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டதாக மிளிர்கிறது. கன்னிகைப்பெண்கள் வாழ்ந்தமைக்கும் அவர்களுக்கான குளமும், நடனமாதுக்களின் இருப்பிடமாக கயற்கண்ணியும், மன்னர்களுக்கும் அவர்களின் பிரதானிகளுக்குமான கற்பொக்கணையும், மாருதப்புரவீகவல்லியின் சமகால வழிபாடுகளைக் கொண்டதான விநாயக, முருக, அம்பிகை, சிவவழிபாடுகளையும் வற்றாக்கை ஆலயம் ஞாபகம் செய்கிறது. மற்றும் சோழமன்னர்களின் சின்னங்களாகச் சிற்பக் கலையும் உடலமைப்பை ஒத்த கோயிலமைப்பும் கேணிகளும் ஆவுரஞ்சிக் கல்லும் ஆற்று வடிகாலமைப்பும் கோடிட்டுக் காட்டி, கோயிலை வணங்க வைக்கின்றது. மேலும் சுன்னாகம், உடுவில், சங்குவேலி, சண்டிலிப்பாய்,அளவெட்டி, மல்லாகம் ஆகிய கிராமநகர்மையங்களை வளமாக்குகின்ற ஒரு பிரபல்யமான ஆலயமாக இந்த ஆலயம் வாலாயம் பெற்றிருக்கிறதென்பதை யாருமே எளிதிலே மறந்துவிடலாகாது. இதனாலன்றோ, இதையண்டிய பகுதிகளில் எதை எடுத்து முயற்சித்தாலும் தோற்றுப் போவதில்லை. எல்லாம் இறைவன் செயல் என்று வாழ்ந்து வருபவர்கள் கந்தரோடை வாழ் அடியவர்கள். வற்றாத கை உடைய எம்பிரானும், எம்பிராட்டியும் அருள்தரக் காத்திருப்பதனால் 'நான்'என்று ஆட்சி செய்வதற்கு யாருக்கும் இடம் வாய்ப்பதில்லை. வேத விற்பன்னர்கள், கல்விமான்கள், ஆன்மிக வாதிகள், அரசியல் விற்பன்னர்கள், வைத்திய கலாநிதிகள், தலைவர்கள் எனப் பல்கலை நிபுணர்களை இந்த ஆலயம் ஆளுமைப்படுத்தி, ஆற்றுப்படுத்தியுள்ளது. இதன் மகிமையினாலன்றோ, மூன்று பிரதான பாடசாலைகள் ஒளிமயமான நல்ல பிரஜைகளை உருவாக்கியவண்ணம் கல்விப்பணியாற்றி வருகின்றன. கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயமும், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் கந்தரோடை ஸ்கந்தா ஆரம்ப பாடசாலையும் வற்றாத கல்விப் பேற்றை அள்ளித் தந்தவண்ணமுள்ளன. கல்வியே கருந்தனம் என்பதற்கிணங்க, கந்தரோடை இலங்கை முழுவதுமாக வற்றாத கல்வியை வார்த்துத் தந்ததெனலாம். அதன் பிரகாரமே கந்தையா உபாத்தியாயர்களை நாம் கல்வித் தெய்வங்களாகப் பூப்போட்டு வணங்குகின்றோம். இதெல்லாம் வற்றாக்கையின்சிறப்பல்லவோ! இன்று உலகெங்கணும் வற்றாத கல்வியால் பெரிய பதவிகளை அலங்கரிப்பவர்கள்கந்தரோடை மண்ணிலே பிறந்தோ, வளர்ந்தோ, கலந்தோ,பயின்றோ அல்லது உலாவியோ திரிந்த நுகர்வாளர்களாகவே இருப்பார்கள் என்பது வற்றாக்கையின்சிறப்பாகும். ஆதலால்தான் கந்தரோடை, சுகந்தமாக நீண்ட ஆயுளோடு தன்னைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறது.



**இன்று உலகெங்கனும் வற்றாத கல்வியால் பெரிய பதவி களை அலங்கரிப்பவர்கள் கந்த ரோடை மண்ணிலே பிறந்தோ, வளர்ந்தோ, கலந்தோ,பயின்றோ அல்லது உலாவியோ திரிந்த நுகர்வாளர் களாகவே இருப்பார்கள் என்பது வற்றாக்கையின் சிறப்பாகும்.**

கலியுகம், நவீனம் எதுவந்தாலும்பயமோ, கவலையோ படாதிருக்க,நவக்கிரகதோஷங்களினால் தோன்றும் அச்சங்களில் இருந்து விடுபட, வறுமை மற்றும் வாட்டும் நோய்களிலிருந்து விடுதலை பெற, தானியப் பயிர்வகைகள் செழித்தோங்கி வளம் கொழிக்க,குழந்தைகள்,பெண்கள்,முதியவர்கள் யாவருமே சஞ்சலமின்றி நலமோடு பாதுகாப்பாக வாழ, மாணவர்கள், ஆசான்கள், கல்விச் செல்வமதில் கசடறத்திளைக்க வாருங்கள். வற்றாக்கைக்கு வந்து வரம்பெறுங்கள் வாழ்வு சிறக்க மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதாக திருவருள் உங்கள் வசம் நிறைவதாக இணுவில்,மாவிட்டபுரம்,கீரிமலை, அளவெட்டி,சந்நிதி,நல்லூர்,பொன்னாலை, சீரணி, மருதடி, கந்தவனம், இன்னும் பல ஆலயங்களும் நேரம் தவறாத பூஜைகளை அந்தந்த சம்பந்தப்பட்ட ஆலயக் குருக்களினால் நேர்த்தியாக ஆற்றப்படுவதனாலன்றோ வேதநெறியும் மிகுசைவத்துறையும்,பூதபரம்பரையும்– தழைத்து, நேற்று இன்றுநாளை என்றுமே பொலிந்து நிமிர்ந்து நிற்பதை யாம் உணருகின்ற இந்த வேளையிலே, வற்றாக்கை வாழ் அந்தண பிரதம சிவாச்சாரியார்களை மனதாரப் போற்றி வணங்கி, அவர்களது ஆசியைப் பெறுவதென்பது நாம் செய்த பாக்கியமேயாகும். எமது ஊருக்கும் நாட்டுக்கும் நல்லகாலம்பிறக்கும்என்றநம்பிக்கையை வற்றாக்கை அம்மன் ஆலய கும்பாபிஷேகம் ஸ்ரீவிசாலாட்சி அம்பிகா சமேத விசுவநாதப் பொருமான் திருவருளால் வரமாக்குகின்றது.

இப்பேறானது எல்லோருக்கும் கிடைப்பதாக.

# உயர் பதவிகளை வகிக்க உதவியளிக்கிறது ‘சீமா’

**அரச துறையில் உயர் பதவிகளை வகிப்பதற்கும் தனியார் துறையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் 'சீமா' (Cima) பெரிதும் உதவி அளிக்கிறது என்கிறார் 19 வயதில் சீமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள பென் டிலைற்ரன் பறிங்டன்.**



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர், கல்கிசை சென்.தோமஸ் கல்லூரியின் மாணவர் ஆவார்.ஜி.சி.ஈ.சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற இவர், உயர் தரக் கல்வியைத் தொடர்ந்த அதே வேளை, சமகாலத்தில் சீமா கற்கை நெறியையும் மேற்கொண்டார். அதன் மூலம் மிகக் குறைந்த வயதிலேயே சீமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்துகொண்டார்.

தனது கல்லூரி ஆசிரியரான எஸ்.ஏ.சத்தியநேசனின் வழிகாட்டலை அடுத்தே இந்தக் கற்கை நெறியை இளம் வயதில் மேற்கொள்வதற்குத் தான் முன்வந்ததாக அவர் கூறினார்.

ஐந்து படிமுறைகளைக் கொண்ட சீமா கற்கை நெறியை இரண்டரை வருடங்களில் பூர்த்தி செய்ய முடியும் என்று கூறும் டிலைற்ரன், இந்தக்கற்கை நெறியைப் பயில்வதற்கு சராசரி ஆங்கில அறிவு அவசியம் என்றும், கற்கை காலத்தின் போது அந்த அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளலாம் என்றும் கூறுகிறார்.

சீமா கற்கை நெறியைத் தொடர்வதற்கு வயது ஒரு பொருட்டல்ல என்று கூறும் அவர், சரியான அவதானம், கவனிப்பு ஆகியவற்றின் மூலம் கற்கை நெறியை இலகுவாகப் பூர்த்திசெய்யமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

அரச துறையில் உயர் பதவிகளை வகிப்பதற்கும் தனியார் துறையில் வேலைவாய்ப்புக்களைப்பெறுவதற்கும் சீமா பெரிதும் உதவியளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

சீமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த ஒருவரால் மாதாந்தம் மிகக் கூடிய வருமானத்தை ஈட்டமுடியும் என்றும், தனியார் துறையில் வேலை வாய்ப்புக்கள் அதிகம் உள்ளமையால் சீமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த ஒருவர் அதி கூடிய சம்பளத்துடன் இலகுவில் வேலை ஒன்றைப் பெறமுடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கற்கைநெறி தொடர்பான விரிவுரைகளுக்கு ஒழுங்காக சமுகம் அளிப்பதன் மூலம் அதில் ஒரு சிறப்பான சித்தியை எய்தமுடியும் என்று கூறிய அவர், இளம் வயதில் இதனைப் பூர்த்தி செய்ததன் மூலம் எதிர்காலத்தில் ஒரு சிறப்பான திட்டமிடல் மூலம் சிறந்த தொழில்வாய்ப்பைப் பெறுவதுடன் வாழ்க்கையையும் சிறப்பாக நகர்த்த முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இளைஞர்கள் உயர்தரக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது – உயர் தரப் பெறுபேற்றை மட்டும் நம்பியிராது சீமா கற்கை நெறியைத் தடையின்றித் தொடர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

COMMERCIAL BANK

# கொமர்ஷல் வங்கி கிளைகள் சிவராத்திரியன்று திறக்கும்

பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி பொது வங்கி விடுமுறை தினமான சிவராத்திரி தினத்தன்று கொமர்ஷல் வங்கியின் 64 கிளைகள் சாதாரண வங்கி நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்கும் என்று கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

வங்கியின் 28 சுப்பர் மார்க்கெட் வங்கி நிலையங்கள், மற்றும் 365 நாள்களும் திறந்திருக்கும் 19 கிளைகள் என்பன வழமையான வங்கி அலுவலக நேரங்களில் திறந்திருக்கும். ஏனைய 17 கிளைகள் காலை 9 மணிமுதல் 1 மணிவரை திறந்திருக்கும் என்று வங்கி அறிவித்துள்ளது.

அவிஸ்ஸாவெல்ல, பத்தரமுல்ல, பொரல்ல, தெஹிவல, வெளிநாட்டு கிளை கிரிபத்கொட, கொள்பிட்டிய, கொட்டாஞ்சேனை, மஹரகம, புறக்கோட்டை பிரதான வீதி, நாரஹென்பிட்டிய, நுகேகொட, பஞ்சிகாவத்தை, பிலியந்தலை, யூனியன் பிளேஸ், வத்தளை, மற்றும் வெள்ளவத்தை ஆகிய கிளைகளே அன்றைய தினம் திறந்திருக்கும்.

கொமர்ஷல் வங்கி உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக(2011–14) இடம்பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகும். அது நாடு முழுவதும் 241 கிளைகளுடனும், 609 ஏ.ரி.எம் வலையமைப்புக்களுடனும் செயற்படுகின்றது. கடந்த பல வருடங்களாக இலங்கையின் மிகச் சிறந்த வங்கி என்ற ரீதியில் பல விருதுகளையும் வென்றுள்ளது.

அத்தோடு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் மிகச் சிறந்த பத்து கூட்டாண்மை பிரஜைகளில் ஒன்றாகவும் இலங்கை வர்த்தகச் சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. (த)

# வாசகர் திருமுகம்



## கூட்டுறவு ஊழியர்களுக்கு 30 வீத கொடுப்பனவில் தாமதம் ஏன்?

கூட்டுறவுஊழியர்களுக்குதைமாதம் ஓர் இனிப்பான செய்தி என வடமாகாணகூட்டுறவுஊழியர்தொழிற்சங்க மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. வடமாகாண சபையின் விதந்துரைப்பின்பிரகாரம்50வீதசம்பள அதிகரிப்பு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அது 30 வீதமாகக் குறைக்கப்பட்டது. ஆனால் அது கூட இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இது விடயமாக வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க உறுப்பினர்கள், வடமாகாண கூட்டுறவுத்துறை அமைச்சருடன் கலந்துரையாடினார்கள். அவரது வேண்டுகோளின் பிரகாரம் இரண்டு வாரங்களுக்குள் நல்லமுடிவு கிடைக்குமென உறுதியளிக்கப்பட்டது. இந்த வேதன அதிகரிப்புத் தொடர்பான அறிக்கை ஆணைக்குழுவுக்கு முறைப்படி கிடைக்கப்பெற்றும், அதனைச் சங்கங்களுக்கு விடுவிப்பதற்கு கால தாமதமாக்குவது மிகவும்வேதனைக்குரியதாகும். இதனை வடமாகாண முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்குத்தங்களின் பத்திரிகை மூலம் கொண்டுவருவதோடுஇந்தக்கொடுப்பனவு கூட்டுறவு ஊழி யர்களுக்குக் கிடைக்கவழி செய்ய வேண்டும் என கூட்டுறவு ஊழியர் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

*பூநகரி நாதன்*

## பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மீண்டும் இயங்க வைக்கப்பட வேண்டும்

தலைசிறந்த கல்விமான்களான, பேராசிரியர்கள், எலியாசர், மயில்வாகனம் , துரைராசா போன்றவர்களைத் தவப் புதல்வர்களாக பெற்ற பெருமை கொண்ட சமூகம், பின்னர் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக கல்வியில் வீழ்ச்சி கண்டு, மீண்டும் கல்வித்துறையில் புத்துயிர் பெற்றுள்ளது என்பதை அண்மைய க.பொ.த. சாதாரணதர, உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன.

கடந்த காலங்களில் சிறப்பாகச் செயற்பட்ட பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் போர்க்கால சூழ்நிலை காரணமாக செயலிழந்து ஸ்தம்பிதமடைந்து பின்னர் முற்று முழுதாக மூடப்பட்டுள்ளது. இன்று வடமாகாணப் பாடசாலைகள் பலவற்றில், உயர்வகுப்பில் கல்வி கற்பித்தலுக்கு கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக் குறை நிலவுகின்றது. தற்பொழுது புலர்ந்துள்ள அரசியல் சூழலில் பலாலி ஆசிரிய் பயிற்சிக் கலாசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு வடமாகாண அமைச்சு முன்னுரிமை அளிக்க முன்வர வேண்டும்.

அத்துடன் க.பொ.த. உயர்தர வகுப்பில் தொழில்நுட்பக் கல்வியைக் கற்பிப்பதற்கு ஆசிரிய பற்றாக் குறை காணப்படுவது கண்கூடு. அதனை நிவர்த்தி செய்வதற்கு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மீண்டும் இயங்கவைப்பதன் மூலம் இதற்கென ஒரு துறையை ஏற்படுத்தலாம். தொழில் நுட்ப , தொடர்பாடலில் அபரிமித வளர்ச்சியைக்கண்டுள்ளஉலகுக்கு ஈடுகொடுப்பதற்கு தொழில் நுட்பக் கல்விக்கு முன்னுரிமை அளித்தால், எதிர்கால இளந்தலை முறை சகல துறைகளிலும்சிறந்து மிளிர முடியும். அமெரிக்கா எமக்கு அண்டை வீடாகி விட்டது என்று ஏட்டளவில் கூறுவதுடன் நின்று விடாது அதற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்குகல்விசார் சமூகம் முன்னின்று உழைக்கவேண்டும்.

*வின்சென்ட் டலிமா*
*கரம்பொன் கிழக்கு,*
*ஊர்காவற்றுறை*

> தொழில் நுட்ப , தொடர்பாடலில் அபரிமித வளர்ச்சியைக் கண்டுள்ள உலகுக்கு ஈடுகொடுப்பதற்கு தொழில் நுட்பக் கல்விக்கு முன்னுரிமை அளித்தால் எதிர்கால இளந்தலைமுறை சகல துறை களிலும் சிறந்து மிளிர முடியும். ❜❜

### கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

## நடக்கும் என்பார் நடக்காது நடக்காது என்பார் நடந்துவிடும்

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு ஒன்றரை வருடங்களின் பின்னர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த – தமிழ் மக்களின் எதிர்கால இருப்பாக – சிறப்பு வாய்ந்த பிரேரணையை நிறைவேற்றியுள்ளது. இந்தப் பிரேரணை கடந்த வருடம் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அந்தப் பிரேரணை நீண்ட இழுபறியின் பின்னர், சாலப் பொருத்தமான – தக்க தருணத்தில் – தேவையான வடிவத்தில் நிறைவேறியிருக்கின்றது.

இந்தப் பிரேரணையை முதலமைச்சர் மற்றும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆகியோர் நிறைவேற்ற விடமாட்டார்கள். காலத்தை இழுதடித்து பிரேரணையையே நீர்த்துப் போகச் செய்வார்கள் என்று பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் வடக்கு முதலமைச்சர், மிகச் சரியான நேரத்தில் அந்தப் பிரேரணையை வடக்கு மாகாணசபையில் முன்வைத்திருக்கின்றார்.

அவர் அந்தப் பிரேரணையை முன்வைப்பதற்கும் தெளிவான – நீண்ட – வியாக்கியானத்தைக் கொடுத்துள்ளார். இலங்கையின் புதிய அரசுக்கு கால அவகாசம் வழங்கி, ஐ.நா மனித உரிமைகள் சபையில் இந்த மார்ச் மாதம் சமர்பிக்கப்பட வேண்டிய இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற அறிக்கையை பிற்போடுவதற்கு அமெரிக்கா முஸ்தீபு செய்துள்ள நிலையில், வடக்கு மாகாணசபை மிக முக்கியமான பிரேரணையை நிறைவேற்றியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் – அந்த மக்களின் சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட அரசு, தங்கள் மீது இதுவரை நடத்தப்பட்ட இனப்படுகொலை சர்வதேச சட்டத்தின்பால் பட்டியலிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் சரியான தளத்திலிருந்து, சரியான வடிவத்தில், இனப்படுகொலைக் கான விசாரணை வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

எனவே அமெரிக்கா, எடுத்துள்ள நடவடிக்கையை சவாலுக்கு உட்படுத்தும் வகையில், குறிப்பாக இந்தியாவையும் பகைத்துக் கொண்டு வடக்கு மாகாணசபை மிக தீர்க்கமான முடிவை எடுத்திருக்கின்றது. பூகோள அரசியலின் சுயநலப் போக்கை முதலமைச்சர், தனது உரையில் புட்டுப் புட்டு வைத்திருக்கின்றார். எனவே, தங்கள் சுயநல – பூகோள நலனுக்காக – தமிழர் தரப்புப் பிரச்சினைகளைக் கையாள முற்பட்டவர்களுக்கு முதலமைச்சர் சாட்டையடி கொடுத்திருக்கின்றார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு உலகம், ஏன் சிங்கள மக்களும் தயங்கக் கூடாது என்று முதலமைச்சர் நீட்டிய கரத்துக்கு, வழமை போன்று சிங்களம் தனது பதிலை வழங்கியிருக்கின்றது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன, வடக்கு மாகாண்சபையின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதில், ஓர் அரசாக இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்திருக்கின்றார். அப்படியானால், தனி மனிதனாக அதனை அவர் ஏற்றுக் கொள்கின்றார் என்றுதான் அர்த்தம்.

வடக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கும் – எதிர்க் கட்சியினர், குறிப்பாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இரு பெரும்பான்மை உறுப்பினர்களும், தமிழர்கள் மீதான இனப்படுகொலை பிரேரணைக்கு சர்வதேச விசாரணை கோரும் தீர்மானத்தை ஆதரித்திருக்கின்றார்கள்.

தமிழர் பிரச்சினையை உலகத்தவர்கள் அறிந்த அளவுக்கு, சிங்கள மக்கள் அறியவில்லை என்று குறிப்பிட்ட முதலமைச்சர், அவர்களுக்கு தெரியப்படுத்த இந்தப் பிரேரணை சரியான – உண்மையான ஆவணம் என்றும் குறிப்பிட்டிருந் தார்.

இந்தப் பிரேரணையின் வெற்றி என்பது அங்குதான் தங்கியிருக்கின்றது.

**பத்தி எழுத்து**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களின் உரிமைகள்; கீச்சுமாச்சுத் தம்பளம் வேண்டாம்

எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?

ஐம்பதுகளில் வெளிவந்த தமிழ்ச் சினிமாப் படப்பாடல் ஒன்றின் முதல் வரி இது.

இலங்கையில் தமிழர்கள் மீதான இனப்படுகொலை நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்று இந்த நாட்டின் அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரத்ன கடச்சுட வெளியிட்ட கருத்தைப் படித்ததும், மேற்காட்டப்பட்ட சினிமாப் பாடல் வரியே காதுகளில் ரீங்காரமிட்டது!

இறுதிக்கட்டப் போரின்போது, தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரால் காப்பாற்றப்பட்டார்கள். அவ்வேளையில் சிலர் அட்டூழியங்களைச் செய்திருந்தாலும் அவற்றை இனப்படுகொலை என்று சொல்லமுடியாது - என்றும் அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சரின் மேற்சொன்ன வியாக்கியானம், வடக்கு மாகாணசபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட, சரித்திரப் பிரசித்தம் வாய்ந்த "தமிழர்களுக்கு எதிரான சிறிலங்காவின் இனப்படுகொலை" என்ற தீர்மானத்தை அனைத்துலக நாடுகள் கண்டு கொள்ளக்கூடாது என்பதற்கான எதிர்மறைப் பரப்புரையே அன்றி வேறல்ல....

அத்தோடு அமைச்சர் தமது தளம்பலை நிறுத்தவில்லை. இறுதிக் கட்டப் போரின்போது பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் காப்பாற்றப் பட்டார்கள் என்றும் முத்தாய்ப்பு வைத்திருக்கிறார்.

இத்தனைக்கும், வடமாகாணசபையில் எதிர்ப்பு எதுவும் இன்றி - ஏகமனதாக - நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கண்டு (கேட்டு) உண்டான அரசியல் பதற்றத்தினால் (Tension) அமைச்சர் மேற்கண்டவாறு விளம்பினார் என்றே கொள்ள இயலும்.

தமிழ் மக்களின் மொழி உரிமையை, பதவி ஏறும் அரசுகளின் காலில் கசக்கிப்போடும் தோரணையில், 1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தில் ஆரம்பித்த இனஒடுக்கலே போரின் அத்திபாரம் என்பதை தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் வசதியாக மறந்து விடுகிறார்கள்........!!

வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் (10.02.2015இல்) நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கடந்த ஐம்பத்தொன்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனத்துவேஷத் தாக்குதல்களை அ முதல் ஃ வரை பூரண புள்ளி விவரங்களுடன் மிக விஸ்தாரமாக எடுத்து இயம்புகின்றது.

பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்த எட்டு ஆண்டுகளிலேயே, தமிழர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினர் என்பதால், அவர்களை அடக்கி, ஒடுக்கிவிட வேண்டும் என்ற ஓர்மம் சிங்கள அரசியல் தலைவர்களிடம் நெருப்பாறாய் பாயத்தொடங்கியது.

அதன் விளைவே தனிச்சிங்களச் சட்டம். அதன் தொடரியாக தமிழ் மக்களுக்கு சில சில்லறைகளைப் போடும் போக்குத் தொடர்ந்தது. அதன் விளைவே தமிழ் இளைஞர்களை ஆயுதங்களை ஏந்தத் தூண்டியது.

அந்தச் சகாப்தத்தில், காலத்துக்குக் காலம் பதவியைப் பிடித்த ஆட்சியாளர்கள், தமிழர்களை இனச் சுத்திகரிப்புச் செய்வதற்கு, பல அரசியல் தந்திரங்களைக் கையாண்டு வந்தனர். அவற்றை ஆதியோடு அந்தமாக வடக்கின் முதலமைச்சர் தமது உரையில் வெளிப்படுத்திப் பதிவு செய்துள்ளார்.

வடக்கு முதல்வர் முன்வைத்த காத்திரமான கருத்து விம்பங்களில் சிலவற்றை தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் முன்னர் மேலெடுத்ததும் உண்டு. ஆனால், அவர்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததும், அரசியல் தர்மத்தை அடியோடு வேர்சாய்த்து விடுவதே இலங்கைத் தீவின் சாபக்கேடாகிவிட்டது.

இப்போது கூட, நாம் ஸ்ரீலங்காவினர் என்ற மனப்பாங்குடன், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் மட்டுமன்றி, இனச் சுத்திகரிப்புக் கொடுமைகளை மூடி மறைத்து, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் மீது ஏறி குதிரை விடவும் திட்டமிடும் முன்னோட்டமான காட்சிகள் நுண்ணியதாக வெளிப்படுகின்றன, மேலெழும்புகின்றன!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த நிறுவிய விசாரணைக் குழுவைப் பலப்படுத்தி, காலம் கடத்தும் உத்தியைக் கைக்கொள்ளும் போக்கு மேலோங்கி, நெடிதுயர்கிறது.

ஐந்து தசாப்தங்களாக, தமிழ் மக்களுக்கு விளைவித்த அரசியல், வாழ்வியல் பொல்லாப்புகள் குறித்துத் தெற்கின் அரசியல் தலைமைகள் கழிவிரக்கம் கொள்வதால் எந்தவித பயனும் கிடைக்கப் போவதில்லை.

அந்த நிலை மாற்றப்பட்டுச் செயல்வடிவம் முன்வைக்கப்பட வேண்டும். புதிய அரசிடம் இருந்தும் அதனை எதிர்பார்க்க முடியவில்லையே. வெறும் கீச்சு மாச்சுத் தம்பளம் விளையாடும் போக்கு நிறுத்தப்பட வேண்டும்.

# அரசு மாறினாலும் தமிழர் தலைவிதி மாறப்போவதில்லை

சேரலாதன்



பொதுமக்களின்பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கான தேவை எழவில்லை.' இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கமும் எம்மிடமில்லை. இவ்வாறு உறுதியாகத் தெரிவித்துள்ளார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன. கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள 22ஆவது படைப்பிரிவின்தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும், முப்படையினரின் அர்ப்பணிப்பான நடவடிக்கைகள் காரணமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அமைதியாகவும், சமாதானத்துடனும் வாழ்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மஹிந்த அரசைப்போன்று மைத்திரி அரசும் படையினருக்குமுன்னுரிமைவழங்குவதை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் இந்தக் கருத்துக்கள் எடுத் துக்காட்டுகின்றன.

ஆனால் எந்தச் சக்தியிடமிருந்து படையினர் பொதுமக்களைப் பாதுகாத்து வருகின்றனர் என்பதையும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தால் மக்களிடையே எழுகின்ற சந்தேகங்கள் ஓரளவாவது தீர்ந்திருக்கும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷகூட புலிகளிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பதற்கான மனிதாபிமானப் போர் ஒன்றையே தமது அரசு நடத்தியதாகத் தெரிவித்து வந்துள்ளார். மனிதாபிமானம் என்பதற்கான அர்த்தத்தை அவர் சரிவரப் புரிந்துகொண்டிருந்தால் இவ்வாறு கூறியிருக்கமாட்டார். இறுதிப்போரின் போது இலங்கை அரசும், படையினரும் காட்டிய மனிதாபிமானச் செயற்பாடுகளை இந்த முழுஉலகமும் அறியும். பொதுமக்களை ஈவிரக்கமின்றிக் கொலை செய்ததும், சரணடைந்தவர்களை குரூரமான முறையில் கொன்றழித்ததும், கைது செய்தவர்களைக் காணாமற்போகச் செய்த பின்னர் மரணச் சான்றிதழ் வழங்குவதும்தான் இலங்கை அரசின் அகராதியில் மனிதாபிமானம் எனக் குறிக்கப்பட்டிருக்கின்றதா? என்ற வினா தானாகவே எழுகின்றது. பெண்கள் கூட தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக சிதைக்கப்பட்டதும், சீரழிக்கப்பட்டதும் கூட மனிதாபிமானத்தின் அடிப்படையில்தானா என்பதையும் இலங்கை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

> "தமிழ் மக்களின் வாழ்விடங்களைப் படையினர் அபகரித்து வைத்திருப்பதும், இராணுவக் குடியிருப்புக்கள் என்ற பெயரில் பெரும்பான்மையின மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதும் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன.

இஸ்ரேல் அரசு பலஸ்தீனத்தில் நடந்து கொள்வதுபோன்று தமிழர் பிரதேசத்தில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. தமிழ் மக்களின் வாழ்விடங்களைப் படையினர் அபகரித்து வைத்திருப்பதும், இராணுவக் குடியிருப்புக்கள் என்ற பெயரில் பெரும்பான்மையின மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதும் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன. ஆனால் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அரசு திரும்பத் திரும்பக்கூறி வருகின்றது. பொதுமக்கள் தமது பாதுகாப்புக்கு இராணுவத்தை நிறுத்துமாறு எந்தச் சந்தர்ப்பத்திலும் கோரிக்கை விடுக்கவில்லை. தமிழர்கள் எந்த வேளையிலும் தமது பாதுகாப்புக்கு இராணுவத்தினரை நம்பியிருக்கவுமில்லை.

புலிகளுடனான போர் இடம் பெற்றபோது இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தேவை இருந்தது. படை முகாம்களைப் பெரும் எண்ணிக்கையில் அமைக்கவேண்டிய அவசியமும் இருந்தது. ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதம் புலிகளை முழுமையாகத் தோற்கடித்த பின்னர் இவற்றைப் பேணி வருவதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மைத்திரி தலைமையிலான புதிய அரசு பதவி ஏற்றதன் பின்னர் படையினரால் அபகரிக்கப்பட்ட பொது மக்களது காணிகள் விடுவிக்கப்படுமெனவும், தமிழர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள படை முகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்படுமெனவும், இராணுவத்தினரின் எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சியடையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதுவுமே இடம் பெறவில்லை. தற்போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் கூற்று முந்தைய நிலையில் மாற்றம் ஏற்படுமென்பதற்கான எந்த சமிக்ஞையையும் காட்டவில்லை.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்த நாட்டில் அரசுகள் மாறினாலும் தமிழர்களின் தலைவிதி மாறப்போவதில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.



# இன அழிப்புக்கு நீதி வேண்டும்

க.அரவிந்தன்

பிரித்தானிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 29ஆம் திகதி தமிழர்களுக்கான நீதி கோரிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் அரசியல் சமயத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ் இனச் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இந்தச் சந்திப்பில் பாரம்பரியத்தைக் குறிக்கும் வகையில் பரத நாட்டிய நிகழ்வும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பிரித்தானிய தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் ரவி குமார் வரவேற்புரையை நிகழ்த்தினார். இலங்கையில் இடம்பெற்றிருப்பது ஆள் மாற்றமே அன்றி ஆட்சி மாற்றம் அல்ல, இலங்கையில் இனஅழிப்பு இடம்பெறும்போது ஆட்சியில் இருந்த சிங்கள இனவாத பிரதிநிதிகளே தற்போதைய ஆட்சியில் இடம்பெற்றிருப்பதால் இதை ஒரு ஆட்சி மாற்றமாக பார்க்க முடியாது என அவர் தனது உரையில் குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றிய அவர், ஒன்று கூடலுக்கு சமுகமளித்திருந்த ஊடகங்களுக்கு நன்றியைத் தெரிவித்ததுடன், குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை வெளி உலகுக்கு படம் பிடித்துக் காட்டிய சனல்-4 ஊடகவியலாளர் கெலும் மக்ரேக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மனித உரிமைக் கழகத்தின் விசாரணை அறிக்கையை இந்த ஆண்டு மார்ச் மாதம் வெளியிட வேண்டும் என்பது அவசியமானதாகும். இலங்கையின் அரசியல் நிறுவனங்களை முழுமையாக மறுசீரமைக்காமல் இலங்கையில் எதுவுமே முற்றுப்பெறாது என வலியுறுத்திய அவர் தமிழ் மக்களின் முழுமையான சுயநிர்ணய அங்கீகாரம் இல்லாமல் இது சாத்தியம் இல்லை எனவும் தெரிவித்தார். அதேநேரம் தமிழ் மக்களின் வாழ்விடங்கள், காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும், ஸ்ரீலங்கா அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென சர்வதேசத்தைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றத் தலைவரும், பிரித்தானிய பழைமைவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான லீஸ்கொட் தனது உரையின் ஆரம்பத்தில் 2009இல் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்ற போது அதைத் தடுக்கத் தவறிய ஒருவர் என்கின்ற ரீதியில் தானும் அங்கே கூடியிருந்தவர்கள் சார்பாக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துக்கொண்டார். அதுமட்டுமன்றி இலங்கையில் இன அழிப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க தாம் கட்டாயமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீதி அமைச்சர் கிறிஸ் கிறேலிங்க் தமிழ் மக்களுக்கும்– தமிழ் மக்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவுக்குமான உறவு முறையில் பெருமையடைவதாகக் குறிப்பிட்டார். அரசியல்வாதிகள், பிரித்தானிய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பலர் 2009இல் இலங்கையில் இடம்பெற்ற பெரியளவிலான இனப்படுகொலைக்கு தமது கவலையை வெளிப்படுத்தியதுடன், இனிவரும் காலத்தில் இது போன்ற செயற்பாடுகள் இடம்பெறாமல் இருக்க கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.








தொடர்ந்து இடம்பெற்ற இந்த நிகழ்வில், கலந்து கொண்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எரிசக்தி மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் எட் டேவி பாசெற்லோ, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மன், ஹார்லோ நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழு பிரதித்தலைவருமான சோபெயின் மக்டொனா, தொழிற் கட்சியின் வட அயர்லாந்துக்கான நிழல் அமைச்சர் இவான் லூயிஸ், நாடாளுமன்ற உறுப்பினரும், அனைத்துக்கட்சி தமிழ் நாடாளுமன்ற குழு பொருளாளர் மற்றும் செயலாளருமாகிய றொபேட் ஹாபொன், நாடாளுமன்ற உறுப்பினரும் கீழ்சபைப் பிரதித் தலைவருமான ரொம்பிறேக், அரச கொறடாவும் கிறேடன் மத்தி நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கேவின் பார்வெல் ஆகியோர் தொடர்ந்து உரை நிகழ்த்தினர். பிரித்தானியாவில் இருக்கும் தமிழர்களின் செயற்பாடுகளைப் பாராட்டும் வகையிலும், தமிழர்களுக்கான நீதியை வழங்க வலியுறுத்தும் பேச்சுக்களாகவும் அவர்களது உரைகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை –நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பிரித்தானிய எதிர்க் கட்சித் தலைவர் எட் மில்லிபான்ட்டின் செய்தி அடங்கிய காணொலி திரையிடப்பட்ட அதேவேளை, பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் செய்தி நாடாளுமன்ற உறுப்பினர் நிக்டி பொயிஸ் இனால் வாசிக்கப்பட்டது.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான், தமிழர்கள் அனைவரும் வன்முறைகளாலும், மனித உரிமை மீறல்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே உடனடியாக சர்வதேச விசாரணை நடத்தப்படுவதே சரியானது என வெளிப்படையாக தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

முன்னதாக ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியின் போதும், தமது பேச்சுக்களின் போதும் பலர் ஸ்ரீலங்காவில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியதுடன் சர்வதேசத்தின் கடமை முடிந்துவிடவில்லை என்பதை வலியுறுத்தினர். இதைக் கருத்தில் கொண்டு, இங்கிலாந்தில் வசிக்கும் தமிழ் சமூகம் தொடர்ந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் இவான் லூயிஸ் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தினார். ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் ரனொக் ஊடகங்களுக்கு தனது கருத்தை வெளிப்படுத்தினார். 2010இல் ஐரோப்பிய யூனியனால் கொண்டுவரப்பட்ட ஜி.எஸ். பிளஸ் சலுகை நிறுத்தம் தொடர வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

வட அயர்லாந்துக்கான அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரேசா வில்லியர்ஸ் உணவு மற்றும் சுற்றுச் சூழல் நிழல் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எல்.டேவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.சி.பிறவுண் , பொப் பிளாக்மென் , வீரேந்திர சர்மா , மைக் கேப்ஸ், ஸ் ரீபன் பவுண்ட்,ஸ்ரீபன் பேக்கர் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். லண்டன் சட்டசபை உறுப்பினர்கள் றோஜா இவென்ஸ், ஓங்கார், சகோட்டா, நாவின் ஷா போன்றோரும் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கினர்.

தமிழீழத்தில் பயின்று பயிற்சி பெற்ற மருத்துவர் தர்மரத்தினம் முள்ளிவாய்க்கால் இறுதி வரையான தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர் கடந்த 2009 இறுதிப் போரின் போது மக்கள் எப்படி வதைக்கப்பட்டனர் என்பதை விளக்கிப் பேசினார். போரின் வடுக்களின் சான்றாக தாமும் இருப்பதாகவும், போர் தனக்கு எவ்வாறான மன உடல் பாதிப்புக்களை கொடுத்தது என்பதையும் அவர் உணர்ச்சி பொங்க எடுத்துரைத்தார். மருத்துவமனை அமைந்திருந்த பகுதியில் இருந்து ஆயுதங்கள் மற்றும் விடுதலைப் புலிகள் போன்றோர் 'விலகி இருந்த போதும், வெளியில் செஞ்சிலுவைக் கொடிகள் மற்றும் செஞ்சிலுவை வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதும், ஸ்ரீ லங்கா இராணுவம் தொடர்ந்து ஷெல் வீச்சுத் தாக்குதலை நடத்தியது என்பதை வெளிப்படுத்தினார். இன்னமும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அட்டூழியம் தொடர்வதைச் சுட்டிக்காட்டிய அவர் அங்கே சுமுக நிலை திரும்ப பிரித்தானியா உதவி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

சந்திப்பில் கலந்து கொண்ட அனைவரது குரலும் தமிழ் மக்கள் மீது நடந்த இன அழிப்புக்கு நீதி வழங்குவதுடன் வடக்குகிழக்கில் தமிழர்கள் சுய நிர்ணய உரிமையுடன் நிம்மதியாக வாழ வழி ஏற்படுத்தப்பட வேண் டும் என்பதை வற்புறுத்துவதாகவே அமைந்திருந்தது.

# மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 80 | 40 | 60 | 20 | 40 | 40 | 40 |
| கத்தரி | 60 | 50 | 60 | 60 | 40 | 30 | 50 | 25 |
| கரட் | 120 | 160 | 100 | 120 | 120 | 200 | 130 | 140 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 60 | 40 | 60 | 45 | 25 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 120 | 120 | 160 | 120 | 120 |
| பாகல் | 90 | 120 | 120 | 140 | 120 | 200 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 50 | 80 | 80 | 35 |
| பெ.வெங்காயம் | 120 | 90 | 80 | 100 | 70 | 120 | 90 | 70 |
| சி.வெங்காயம் | 50 | 100 | 120 | 120 | 120 | 160 | 100 | 80 |
| பூசணி | 80 | 70 | 70 | 100 | 80 | 120 | 100 | 80 |
| தக்காளி | 200 | 200 | 180 | 200 | 180 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 90 | 70 | 80 | 100 | 80 | 100 | 120 | 70 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 30 | 35 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 40 | 25 | 20 | 20 | 15 |
| பச்சை மிளகாய் | 200 | 150 | 200 | 120 | 160 | 400 | 250 | 150 |
| புடோல் | 80 | 80 | 80 | 120 | 80 | 120 | 120 | 80 |
| கோவா | 100 | 90 | 100 | 120 | 80 | 140 | 120 | 90 |
| வெண்டி | 120 | 100 | 60 | 100 | 100 | 100 | 120 | 90 |
| போஞ்சி | 160 | 150 | 120 | 140 | 120 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 160 | 220 | 170 | 200 | 200 | 200 | 160 | 140 |
| தேங்காய் | 50 | 60 | 60 | 60 | 40 | 50 | 65 | 35 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 60 | 60 | 70 | 60 | 50 |
| தேசிக்காய் | 30 | 40 | 30 | 50 | 40 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 200 | 150 | 150 | 200 | 220 | 160 | 200 | 200 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பனங்கிழங்கு | 05 | 03 | 05 | 05 | 05 | 05 | 05 | 03 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 650 | 800 | 800 | 600 | 450 |
| நண்டு | 250 | 350 | 350 | 400 | 400 | 350 |
| கணவாய் | 450 | 600 | 500 | 500 | 600 | – |
| பாரை | 600 | 450 | 500 | 500 | 500 | 370 |
| சுறா | 500 | 500 | 600 | 500 | 1000 | – |
| சீலா | 350 | 400 | 350 | 400 | 400 | 350 |
| விளை | 600 | 450 | 400 | 450 | 600 | 450 |
| முரல் | 250 | 350 | 350 | 350 | 500 | – |
| கும்பிளா | 500 | 350 | 300 | 400 | 350 | – |
| கிழாக்கன் | 350 | 500 | 400 | 350 | – | 250 |
| ஒரா | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| திரளி | 150 | 250 | 240 | 200 | 200 | – |
| நகரை | 150 | 250 | 200 | 250 | – | 250 |
| சூடை | 120 | 150 | 150 | 80 | 80 | 60 |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 300 | 250 | 200 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 400 | – |
| கெழுறு | 100 | 100 | 60 | 120 | 100 | 80 |
| கொய் | 120 | 250 | 80 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 220 | – | 250 |
| வாழை | 150 | 150 | 160 | 300 | – | 250 |

## உத்தாலகர் தமது மகன் சுவேத கேதுவுக்கு விடுத்த வினா யாது?

தனது மகன் சுவேதகேதுவை வேறொரு குருவிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தீட்சைபெற அனுப்பி வைத்தார் உத்தாலகர். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், தனது பாண்டியத்தினால் பெருமையும் அதனால் பெருமிதமும் கொண்டு தந்தையாரிடம் வந்தான். சுவேதகேது எல்லாப் பெருமைகளிலும் கற்றதனால் ஏற்பட்ட பெரு மையே மிக மோசமானது. "மகனே! அதனை அறிந்தால் யாவற்றையும் அறியலாம் என்ற 'அதனை' அறிந்தாயா?" என்று கேட்டார். எவ்விதம் பதிலளிக்கலாமென அவனுக்கு விளங்காத இந்தக் கேள்வி அவனுக்கு மிகுந்த குழப்பத்தை உண்டு பண்ணியது. இது அவன் கொண்டிருந்த பெருமையையும் தகர்த்து விட்டது.



சாயி சிந்தனை


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## அமைதியற்ற நிலை

எவரையும் வெறுக்காதே. தீமையை எதிர்க்காதே என்று சொல்வது மிக எளிது. ஆனால் நடைமுறையில் பின்பற்றும்போது அது எவ்வளவு கடினமான காரியம் என்பது எமக்குத் தெரியும். சமுதாயம் முழுவதும் எம்மைப் பாராட்டும் பொழுது நாங்கள் பெரிய அகிம்சாவாதிகள் போல நடிக்கலாம். ஆனால் எமது உள் மனம் எம்மை அரித்துக்கொண்டேயிருக்கும். மனம் அமைதி இல்லாதிருப்பதை நாம் உணர்கிறோம். இதனைத் தவிர்க்க நாங்கள் போராடவேண்டும்.

## செல்போன் காது கேட்கும் திறனைப் பாதிக்குமா?



காது ஒரு நுட்பமான உறுப்பு. சாதாரணமாக 70 முதல் 75 டெசிபல் வரையுள்ள சத்தங்களைத்தான் எமது காதுகள் கேட்க வேண்டும். அதிகபட்சமாக 90 டெசிபல் வரை உள்ள சத்தங்களை கேட்கலாம். ஒரு நாளுக்கு அதிக பட்சம் நான்கு மணி நேரம் அப்படிக் கேட்டால் பரவாயில்லை. அதுவும் விட்டு விட்டுத்தான் கேட்க வேண்டும். தொடர்ச்சியாகக் கேட்கக் கூடாது. அப்படிக் கேட்பதால் காதின் கேட்கும் திறனில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், செல்போன் உபயோகிக்கும் போது என்ன நிகழ்கிறது தெரியுமா? சாதாரணமாகவே செல்போன் வழியாக 90 முதல் 100 டெசிபல் வரையுள்ள சத்தத்தைக் கேட்க வேண்டியுள்ளது. எமது காதுகளால் கேட்கக் கூடிய அதிகபட்ச ஒலி அளவை விட இது அதிகம். அதனால் காதுகளின் கேட்கும் திறன் நாளடைவில் குறையவும் வாய்ப்பு இருக்கிறது. செல்போனில் 15 முதல் 20 நிமிடங்கள் வரை பேசினால் அவ்வளவாக பாதிப்பு இருக்காது. ஆனால், தொடர்ச்சியாக அரை மணி நேரம், ஒரு மணி நேரம் என்று பேசுவதால் கண்டிப்பாகப் பாதிப்பு ஏற்படும். தவிர, செல்போனில் இருந்து வெப்பமும் வெப்பக் கதிர் வீச்சும் வெளிப்படுகிறது. நாம் செல்போனை காதுக்கு மிக அருகில் வைத்துப் பேசுவதால், இந்த வெப்பமும் கதிர்வீச்சும் எமது காதுக்கு உள்ளே இருக்கும். மிக நுண்ணிய நரம்புகளை பாதிக்க வாய்ப்புள்ளது. அதே போல செல்போனில் விட்டு விட்டு சிக்னல் கிடைப்பதால், கதிர்வீச்சின் அளவில் ஏற்ற இறக்கம் ஏற்படும். இந்த மாற்றத்தாலும் காது நரம்புகள் பாதிப்பு அடையலாம். செல்போனை நேரடியாக காதுக்கு அருகில் வைத்துப் பேசாமல் ஹேண்ட்ஸ் ப்ரீ உபயோகித்துப் பேசுவதன் மூலம் பாதிப்பை ஓரளவு தவிர்க்கலாம்.

## நாளை

**மாசி-01**
**வெள்ளிக்கிழமை**
**13.02.2015**

திதி: நவமி: பி.ப.04.36 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப.01.38
சுபநேரம்: 06.34-08.04 வரை
இராகுகாலம்:11.04-12.34 வரை

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | 3 | | | | |
| | 3 | | 4 | | | | 2 | |
| | | 2 | | 7 | 6 | 1 | | 3 |
| | 8 | | | 6 | 1 | 4 | | 5 |
| | 6 | | 3 | | 8 | | 7 | |
| 3 | | 4 | 9 | 2 | | | 6 | |
| 9 | | 5 | 6 | 8 | | 3 | | |
| | 2 | | | | 3 | | 8 | |
| | | | | 9 | | 6 | | 7 |

## எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 2 | 8 | 1 | 5 | 6 | 3 | 7 |
| 1 | 5 | 6 | 3 | 7 | 9 | 4 | 2 | 8 |
| 8 | 3 | 7 | 2 | 4 | 6 | 9 | 5 | 1 |
| 3 | 7 | 1 | 9 | 5 | 4 | 8 | 6 | 2 |
| 2 | 8 | 5 | 6 | 3 | 1 | 7 | 4 | 9 |
| 6 | 4 | 9 | 7 | 2 | 8 | 3 | 1 | 5 |
| 5 | 1 | 8 | 4 | 9 | 3 | 2 | 7 | 6 |
| 9 | 2 | 4 | 5 | 6 | 7 | 1 | 8 | 3 |
| 7 | 6 | 3 | 1 | 8 | 2 | 5 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நட்சத்திரங்களின் பொதுப் பலன்கள்



## ஆயிலியம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த நீங்கள் வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் கூட எளிமையாக இருப்பீர்கள் . உங்கள் தந்தை, தாய் அல்லது உங்கள் வயதுடைய மற்றவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் உதவிக்காக போய் நிற்க மாட்டீர்கள். மதுப்பழக்கம் வராமல் பார்த்துக் கொள்வது நல் லது. சில சில சிரமங்களை அனுபவித்தாலும் யாரிடமும் வெளியில் காட்டிக் கொள்ளமாட்டீர்கள்.

## மகம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த நல்ல செல்வந்தராகவும், புத்திசாலியாகவும், பிறரிடம் கருணை காட்டி உதவி செய்பவராகவும் இருப்பீர்கள். நீங்கள் வியாபாரத்தில் வெற்றி காண்பதுடன், சுகபோகமான வாழ்க்கையொன்றும் நடத்துவீர்கள். உங்களுக்கு பல பணியாள்கள் இருப்பார்கள். தெய்வ காரியங்களில் உங்களுக்கு ஈடுபாடு இருக்கும். உங்கள் மனைவியுடன் சுமுகமான உறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் பெற்றோர்களிடம், கடமைப்பற்றுடன் நடந்து கொண்டாலும், எதிலும் கண்டிப்பாக இருக்கக்கூடிய, ஒரு கடும் சுபாவம், உங்களிடம் குடி கொண்டிருக்கும். உங்கள் எண்ணமும் செயலும், தெளிவானதாய், திட்டவட்டமானதாக அமைந்திருக்கும்.

## பூரம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், மென்மையாக பேசும் குணம் உடையவராகவும் சமயப்பற்றும், துணிச்சலும், தாராள சிந்தையும், பகைவர்களை வெற்றி கொள்ளும் சாதுர்யமும், தந்திரபுத்தியும் கொண்டவராக இருப்பீர்கள். நீங்கள் காமவெறி உணர்ச்சியும், கர்வமும் கொண்டிருப்பீர்கள். நிதிநிலை, அவ்வளவு வசதியாக இராது.

## உத்தரம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், நீங்கள், கருணை உள்ளம் நிறைந்தவராகவும், பொறுமை மிக்கவராகவும், நல்ல பண்பாடான நடத்தை கொண்டவராகவும், பலராலும் விரும்பி நேசிக்கப்படுபவராகவும் விளங்குவீர்கள். நீங்கள், உங்கள் சொந்த சம்பாத்தியத்துடன், சுகபோகமாக வாழ்க்கை நடத்துவீர்கள். உங்கள் உடல் எடை அதிகரித்திடலாம்; கவனம் தேவை.

## அத்தம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், மிகுந்த விவேகியாகவும், தாராள மனம் கொண்டவராகவும், செல்வந்தராகவும், பலராலும் விரும்பி நேசிக்கப்படுபவராகவும் விளங்குவீர்கள். துறவிகளிடம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கும். 30–32 வயது வரையான காலத்தில் நீங்கள் முன்னேறுவீர்கள்

## சித்திரை

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், தர்ம சிந்தனை இருக்கும். அன்பான குணம் கொண்டவர்களை மிகவும் விரும்புவீர்கள். போர் உத்திகள் பற்றிய பல விடயங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். படிப்பும், அறிவும், பணமும் படைத்தவரான நீங்கள் சத்தியவாதியாக விளங்குவீர்கள். உங்கள் மனைவியும் குழந்தைகளும், உங்களுக்கு மன மகிழ்ச்சி தருவார்கள். நல்ல வசதியான வாழ்க்கை நடத்தப்போகும் நீங்கள் கடின உழைப்பாளியாகவும், துணிச்சல் மிக்கவராகவும், பொருள் ஆர்வம் கொண்டவராகவும் விளங்குவீர்கள். கட்டடங்கள் கட்டுவது, வைத்தியம், ஜோதிடம் ஆகியவற்றில் உங்களுக்கு நல்ல அறிவாற்றல் இருக்கும். நீங்கள் சமயப்பற்றும், தெய்வ பக்தியும் கொண்டிருப்பீர்கள். நீங்கள் பணம் சம்பாதித்தாலும் பணம் சேர்த்து வைக்க முடியாது.


## சுவாதி

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், நல்ல அழகிய தோற்றத்துடனும், மகிழ்ச்சியான சுபாவத்துடனும், விளங்குவீர்கள். உங்களுக்கு சமயப்பற்று இருக்கும். தர்ம காரியங்களுக்காக நன்கொடை அளிப்பீர்கள். நீங்கள், உங்கள் உணர்ச்சி வெறிகளைக் கட்டுப்படுத்தி வைத்திடும் ஆற்றல் பெறுவீர்கள். மனதில் ஏற்படும் காம எண்ணங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது. வியாபாரத்தில் தேர்ச்சி பெற்றவராக விளங்குவதுடன், நண்பர்கள் மற்றும் உறவினர்களுடனும் நல்லுறவுகளைப் பராமரிப்பீர்கள்.

## விசாகம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், சமயப்பற்றும், தெய்வ பக்தியும் கொண்டவராக இருப்பீர்கள் ஆனால் பொறாமையும், பகைமை உணர்வும் உங்களிடம் இருக்காது. இயற்கையிலேயே ஞானமும்,அறிவும் இருக்கும். உங்கள் மனநிலை சில நேரம் சஞ்சலம் கொண்டதாக இருந்தாலும் பின் தெளிவாகிவிடுவீர்கள்.

# மாமியாரை ஏமாற்றும் மருமகள்



விருப்பத்துடனோ அல்லது விருப்பம் இல்லாமலோ எனது அன்றாட வாழ்க்கையில் நாங்கள் பல பொய்களைக் கூறித் தான் வருகிறோம். யாரையும் பாதிக்காத வகையில் கூறப்படும் பொய்களில் எந்த ஒரு தவறும் இல்லை. திருமணமான பெண்கள் பலரும் தங்களது மாமி யாரிடம் தான் அடிக்கடி பொய் சொல்வதாகக் கூறப்படுகிறது. பொதுவாக பெண்களுக்கு ஒத்துப்போகாதவர்கள் எனப் பார்த்தால் கண்டிப்பாக அவர்களின் மாமியார் அந்தப் பட்டியலில் இருப்பார்கள். அதனால் அவர்களிடம் பெண்கள் பொய் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படத் தான் செய்யும். மாமியார்களிடம் பொய் சொல்லும் போது, பெண்கள் பகடைக் காயாய் பயன்படுத்துவது தங்கள் கணவன்மார்களைத் தான். சொல்லப்போனால், தங்கள் மாமியாரிடம் இருந்து அனுமதிகளைப் பெறு வதற்கு தங்கள் கணவரைப் பயன்படுத்திக் கொள்வதை சில பெண்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். பெண்கள் இரவு உணவுக்கு வெளியே செல்ல வேண்டுமானால், தனது கணவர்மாரைத் தான் ஆயுதமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். என் கணவர் வெளியில் செல்ல விரும்புகிறார் என்றும் என்னையும் உடன் அழைக்கிறார் என்றும் மாமியாரிடம் கூறுகிறார்கள். இதனால் மாமியார்கள் அதற்கு மறுப்புத் தெரிவிப்பதில்லை. அனைத்திலும் மூக்கை நுழைக்கும் மாமியாரை சந்திக்காமல் தவிர்க்க வேண்டுமானால், 'எனக்கு வேலையுள்ளது', 'எனக்கு உடம்பு சரியில்லை', 'எனக்கு நேரமில்லை' என்ற பொய்களை பொதுவாக பெண்கள் கூறி விடுவார்கள். சில நேரங்களில்அது உண்மையாக இருந்தாலும் கூட, இதனை ஒரு சாக்காக தான் பயன்படுத்துகிறோம் என பல பெண்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். மாமியார்கள் வாங்கித் தரும் பரிசுப் பொருள்கள் மருமகள்களுக்கு பிடிப்ப தில்லை. அந்த பரிசுகள் எப்படி இருக்கிறது என அவர்களிடம் கேட்கும் போது, 'இது மிக அழகிய ஆடை. ஆனால் இதை அணிவதற்கான சிறந்த நிகழ்வுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன்.', 'இந்த கப் மிக அழகாக உள்ளது, இதனை தினமும் பயன்படுத்தி இதன் அழகைக் கெடுக்க நான் விரும்பவில்லை' போன்ற பொய்களை கூறுவது இயல் பான ஒன்று தான். ஆனால் இதற்கு பின்னணியில் உள்ள உண்மை என்னவென்றால் இந்தப் பரிசுகள் உங்களுக்கு சுத்தமாக பிடிக்காது; அதனை வருங்காலத்தில் யாருக்காவது அப்படியே நீங்கள் பரிசாக கொடுத்து விடுவீர்கள். தங்கள் தோழிகளுடன் நேரத்தை செல வழிக்க மருமகள்கள் தங்கள் மாமியார்களிடம் கூறும் பொதுவான பொய் களில் இதுவும் ஒன்றாகும். வார இறு தியில் தோழியைச் சந்திக்க வேண்டும் என்றால் அப்படிப் பட்ட நேரங்களில் அவர்கள் மாமியாரிடம் அலு வலகத் தில் அவசர வேலை இருக்கிறது என்று கூறிவிடுவார்கள். விடுமுறை தினத்தில் திடீரென வேலை வருவது நடக்கக் கூடிய ஒன்று தான். ஆனால் அதையே ஒரு சாக்காக வைத்து உங்கள் நண்பர்களை சந்திக்க நீங்கள் செல்லலாம் தானே! குழந் தைகள் பிறந்து விட்டால், உங்களுக்கு பிடிக் காத மாமியார் கூட நல்ல விதமாக தோன்று வார்கள். குழந்தைகளை மிக அருமையாக பராமரிப்பதாக மாமியாரிடம் பெண்கள் கூறு வார்கள். பல நேரங்களில், குழந்தை களை மாமி யார்கள் பார்த்துக் கொள் வதற்காக பெண் கள் கூறும் பொய்கள் இவை. மாமியாருக்கும், தனது கணவனுக் கும் உள்ள நெருக்கத்தை ஒரு பெண் விரும்பா விட்டாலும் கூட, தனது குழந்தையை பார்த்துக் கொள்ள உதவி வேண் டும் என்பதால், மாமியாரோடு அனுசரித்துச் செல்வார்கள் பெண்கள். சமையல் செய்வதில் இருந்து பெண்கள் தப் பிக்கக் கூறும் பொய் இது. அதாவது மாமியார் செய்யும் சமையல் மிகவும் நன்றாக இருப்பதாகவும் இதே போல் வேறு எங்கும் சாப்பிட்டதில்லை என்றும் கூறு வார்கள். மேலும் காலையில் எழுந்த உடனேயோ அல்லது வேலையில் இருந்து மாலையில் வந்தவுடனேயோ உங்கள் கையால் போட்ட டீயை குடித்தால் தான் இன்றைய பொழுதே நன்றாக இருப்பதாக மாமியாரிடம் பொய் கூறுவார்கள். அதற்கு காரணம் சமையல் வேலை செய்வதில் இருந்து தப்பிக்கத் தான்.



# அழகுராணி



ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நட்பாகப் பழகி வந்தன. ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தனது பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும். நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!" குதித்து குதித்து நடன மாடியபடி சொல்லியது குரங்கு.


நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான்தான் அழகு தேவதை!" என்றது எலி. மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி. நான் இந்த அழகுப் போட்டிக்கே வர வில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது. அப்போது நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என்னுடைய இருப்பிடத்துக்கு வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்றது காகம். மறுநாள் அவை அனைத்தும் அழகிய அழகுராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன. அப்பொழுது வழியில் குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது.

ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பலவீனமாக உதவி கேட்டது. குருவியைப் பார்த்த குரங்கும் எலியும், வெட்டுக்கிளியும் முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் கொண்டு வந்து குருவியின் காலில் வைத்துக் கட்டி விட்டு அழகிப்போட்டிக்கு சென்றது. அழகிப் போட்டி தொடங்கியது. அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!" காகம் கூறியதும் குருவிக்கு உதவாத குரங்கும், எலியும், வெட்டுக்கிளியும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.

அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது. முயல்தான் அழகு ராணி! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றமை பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்! என்றது காகம்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





## வினாடி வினா


- செய்திப் பத்திரிகை இல்லாத , படிக்க தெரியாத மக்கள் உள்ள நாடு – காம்பியா
- உலகில் தட்டையான , சமதளமான நாடு – மாலைதீவு
- ஆட்சி மாற்றம் இல்லாத நாடு – மெக்ஸிக்கோ
- அந்தமான் தீவுகளின் எண்ணிக்கை – 204
- உலகில் மிக அதிகமாக மின்னலால் பாதிக்கப்படும் நாடு – பனாமா
- உலகில் மின் தடை இல்லாத நாடு – குவைத்
- மூன்று அடிப்படை நிறங்கள் – சிவப்பு , மஞ்சள் , நீலம்
- 365 நாள்கள் கொண்ட ஆண்டு முறையை ஏற்படுத்தியவர் – வாழசவா
- உலோக நாணயங்கள் புழக்கத்தில் இல்லாத நாடு – பராகுவே (தென்அமெரிக்கா )
- பூச்சியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய நாடு – இந்தியா

## ஆபிரிக்காவின் ஆச்சரியம்



- உலகின் இரண்டாவது மிகப்பெரிய கண்டம் ஆபிரிக்கா.
- உலகின் மிக நீளமான நதியான நைல் நதி ஆபிரிக்கக் கண்டத்தில்தான் ஓடுகிறது.
- சாய்ரே, நைஜர், சாம்பேசி என மூன்று பெரிய நதிகளும் இந்தக் கண்டத்தில்தான் இருக்கின்றன.
- உலகின் மிகப் பெரிய பாலைவனமான சகாரா இங்கு தான் உள்ளது. கலஹாரி, நமீபியா ஆகிய இரு பெரிய பாலைவனங்களும் ஆபிரிக்காவிலேயே உள்ளன.
- 14,300 வெவ்வேறு மொழி பேசும் மக்கள் ஆபிரிக்காவில் வசிக்கின்றனர்.
- இந்தக் கண்டத்தில் இஸ்லாம், கிறிஸ்தவ மக்களே அதிகம் உள்ளனர்.
- ஆபிரிக்காவின் மிகப் பெரிய சிகரம் 'கிளிமாஞ்சரோ'. இதன் உயரம் 5,895 மீற்றர்.
- இந்தக் கண்டத்தின் மிகப்பெரிய ஏரி 'விக்டோரியா'. இதன் பரப்பு 68,800 சதுர கிலோமீற்றர்.
- மக்கள்தொகை அடிப்படையில் இந்தக் கண்டத்தில் உள்ள பெரிய நாடு 'நைஜீரியா'.
- 11 கோடியே 50 லட்சம் பேர் நைஜீரியாவில் வசிக்கிறார்கள்.
- ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை, நீர் யானை போன்ற அரிய வகை விலங்குகள் இந்தக் கண்டத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

# வாழ்க்கை என்பது என்ன



வாழ்க்கையில் உயர்வும், தாழ்வும் மாறி மாறி வருவது சகஜம். வாழ்வில் எல்லோரும் முன்னேற வேண்டும் என்று ஆசைப்படுவது இயல்பு. உயர்வு வரும் இடத்தில் தோல்விகளும் கூடவே வரும். உயர்வும் தாழ்வும் நாணயத்தின் இரு பக்கங்களாகக் கருதப்பட வேண்டும். தோல்வியைக் கண்டு துவளக் கூடாது. வாழ்வில் ஒரு முறையேனும் தோல்வி ஏற்பட்டால் தான் வெற்றியின் அருமை புரியும். சாதாரணமாக ஒருவன் வெற்றியடைந்தால் அவனுக்கு அது பெரிய விடயமாகத் தெரியாது. பல முறை தோல்வி கண்டு, வெற்றியைத் தழுவும் ஒருவனால் தான் அந்த வெற்றியை முழுமையாக உணர முடியும். அவன் வெற்றியைக் கொண்டாடுவான். நமக்கு ஏற்பட்ட பல தோல்விகளும் எமது வெற்றிக்கு காரணமாக அமையும். அப்போது புதிய சிந்தனைகள் உருவாகி வெற்றி அடைய துணை புரியும். ஒருவர் பெற்ற வெற்றியைத் தாங்க முடியாதவர்கள், அவரை ஏதேனும் வகையில் தோற்கடிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். நாம் வெற்றி அடையும் போது மற்றவர்களைப் பற்றி முழுமையாக அறிய முடியாது. ஆனால், தோல்வி ஏற்படும் போது தான், எவர் நல்லவர், எவர் கெட்டவர் என்ற சுயரூபம் எமக்குத் தெரியும். பொதுவாக வெற்றி பெறும் போது எமது நண்பர்கள் கூட எதிரிகளாக மாறுவார்கள். ஆனால், தோல்வி அடையும் போது சில நண்பர்களே எமக்குக் கிடைப்பார்கள். இது எல்லாம் எமக்குக் கிடைக் கும் அனுபவப் பாடம் என்பதை உணர வேண் டும். இதையெல்லாம் வாழ்க்கையில் சகஜ மாக எடுத்துக் கொண்டு எல்லோரிடமும் நட்பு டன் பழக வேண்டும். சில தோல்விகள் தான் வேகமாக வளர வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். தோல்வி வரும் போது அதற்கா கத் துவண்டு போய் விடாமல் இதுவும் வெற் றிக்கான பாடமாக எடுத்துக் கொண்டு நேர் மறை யாக நமது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். தோல்வியின் முடிவு உயர்வின் ஆரம்பமாக இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

# தமிழ் - முஸ்லிம்களின் எதிர்பார்ப்பை சிதறடித்துள்ளது முஸ்லிம் காங்கிரஸ்

**சாடுகின்றார் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்**

அம்பாறை, பெப். 12

தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்த ஆட்சி கிழக்கு மாகாண சபையில் மலர வேண்டுமென்ற தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பும் அபிலாஷையையும் மீண்டும் எட்டாக்கனியாகியுள்ளது. இது கவலை தரும் விடயமாகும் – இவ்வாறு காரைதீவு பிரதேசசபை உறுப்பினரும் காரைதீவு புஸ்பா பொருளாதார கல்வி சமூக மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளருமான செல்லையா இராசையா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கிழக்கில் தேசிய அரசு அமைப்போம் என்ற போர்வையில், கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்புக்கு மீண்டும் வேட்டு வைக்கப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போதும் தமிழ் மக்கள் மட்டுமன்றி பெரும்பாலான முஸ்லிம் மக்களும் கிழக்கு மாகாண சபையில் தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்த ஆட்சி அமைய வேண்டுமென பெரிதும் எதிர்பார்த்தனர். அதற்காக முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியையே விட்டுக்கொடுப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வந்ததை எவரும் எளிதில் மறந்து விடமுடியாது.

ஆனால் அன்று முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பாகவும் அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்த விடயத்தை தூக்கி வீசிவிட்டு அன்றைய அரசுடன் சார்ந்து ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் துணைபோனது. அப்பொழுது முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி உறுதியளிக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் எந்தக் கோரிக்கையையும் அந்த அரசு நிறைவேற்றவில்லை என அண்மைய தேர்தல் காலத்தில் கூட முஸ்லிம் காங்கிரஸ் முழக்கமிட்டது.

இந்த வரலாற்றுத்தவறு மூலம் பாடம் படித்துக்கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தற்பொழுது தமிழ், முஸ்லிம் மக்களுக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தையும் நழுவ விட்டு முதலமைச்சர் பதவியென்று விடாப்பிடியுடன் செயற்பட்டுள்ளது. கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்த ஆட்சி விரைவில் மலரும் என்றெல்லாம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் யாழ்ப்பாணத்தில் ஒரு சமயம் ஆற்றிய உரை கூடப் பத்திரிகைகளில் வெளியானமையும் நினைவூட்டத்தக்கது. நல்ல சமிக்ஞைகளை தமிழ்த் தலைமைகள் வெளியிட்டிருந்தும் முஸ்லிம் காங்கிரஸின் முடிவுகள் வேறுபாதையிலேயே அமைந்துள்ளன."– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-30)


## பணியாளர் தேவை

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள ஸ்ரார் ஹோட்டலுக்கு றொட்டி வேலை, பிறைட் றைஸ், கொத்து தயாரிக்க கூடியவர்களும், சமையல் வேலைகளில் அனுபவம் வாய்ந்தவர்களும், உணவு பரிமாறக் கூடியவர்களும் (சப்ளையர்) உடன் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

**"ஸ்ரார் ஹோட்டல்"**
வைத்தியசாலை அருகில், சாவகச்சேரி.
0776491027, 0779400963

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி-கரடிப்போக்கு சந்தியில் இயங்கும் "தரணீஸ்" மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, திறமையானவர்கள் தேவைப்படுவதால் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். 0777722305

1. கணக்காளர்
2. கணக்காய்வாளர்
3. உதிரிப்பாக விற்பனையாளர்
4. மோட்டார் சைக்கிள் திருத்துனரும், சேவிஸ் செய்பவரும்.
5. வெளிக்கள வேலையாள்
6. சமையல்காரர்

★ ஆண்கள் மட்டும்

## WE WANT YOU !!
Jaffna Branch

**Trainee Marketing Executives &**
**Managment Trainee (Marketing Only)**

We offer exciting income potential and career opportunities. We are represented throughtout 21 countries in Asia.

- ★ Age 18 and above.
- ★ We provide Basic salary, Travelling & Commission.
- ★ Overseas travel for achievers.

**Call us to schedule an interview within 07 days.**

Mr. Anthony
Contact: 077 3566835
Email :jaffnapioneerhouse@gmail.com

Pioneer House,
2nd Floor, 100,
Manipay Road, Jaffna

## விநியோகஸ்தர்கள் தேவை

எமது நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களான

- குடிதண்ணீர் குடிநீர் போத்தல்
- மிக்சர் வகைகள்
- இனிப்பு வகைகள்

மற்றும் பல பொருள்களுக்கு கீழ்வரும் பிரதேசங்களுக்கான விநியோகஸ்தர்கள் தேவை.

**யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் வவுனியா**

**தேவையானவை**

வங்கி உத்தரவாதம்/ பண வைப்பு/களஞ்சிய, வாகன வசதிகள்

தொடர்பு : A.G.S.R Confectionares
Lanka (Pvt) Ltd.
No.22/3, Alwis Wathe,
Hekitha, Wattala.
Tel: 0113193731/0778250019

**f.b.taztre**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கைதடி கமநல சேவைகள் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அமிர்தலிங்கம்–சுமன் அவர்கள் கடந்த 19.01.2015 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையிட்டுப் பாராட்டுவதுடன், அவர்களின் பணி மேலும் தொடர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்,
உத்தியோகத்தர்களும்.
கமநல சேவைகள் நிலையம், கைதடி.

(36671)(8.8)

## மணி விழாக் காணும் நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்.



**உயர்திரு. குமாரசாமி சிவானந்தம் அவர்கள்**
**(கோட்டக் கல்விப் பணிப்பாளர்- சாவகச்சேரி)**
(B.A, PGDE, SLPS I, SLEAS III)

தேன் மதுரத் தமிழோங்கும் தென்மராட்சியில்
வந்துதித்த தெய்வீகப் புதல்வனே
அமைதியின் சிகரமாய் ஆளுமையின் ஊற்றாய்
பண்புக்கோர் இலக்கணமாய் பரிணமித்து
ஏற்றம் காணும் எழுதுனராய் தோற்றம் கண்டு -பின்
ஆசிரியம் எனும் அழகான துறைக்குள் அடியெடுத்து
ஆரம்ப சேவைதனை பாரோங்கும் பச்சிலைப்பள்ளிதனில்
பக்குவமாய் செய்திட பளையூரின் மகாவித்தியாலயமதில்
படியெடுத்து பாங்குடனே பணியாற்றி
உழைப்பின் உள்ளத்தால் உதவி அதிபராகி உயர்வுகண்டு
உவகையுடன் ஊர்திரும்பி இடைக்குறிச்சியில்
ஆரம்ப அதிபர் சேவைதனை அலங்கரித்து -பின்
வீரசிங்கம் மகாவித்தியாலயமதனை விருப்புடனேற்று
வீறுநடைபோடச்செய்து நல்லதிபர் எனும் நாமங்கொண்டு
ஆற்றலின் பால் கோட்டக்கல்விப் பணிப்பாளராய்
கல்விச் சேவையின் உச்சமதாம் நிர்வாக சேவைதனில் உயர்வுகண்டு
முழுமதிபோல் மூன்று தசாப்தங்கள் கல்விப் பணியாற்றி
மகத்தான மனிதராய் மணி விழாக் காணும் தாங்கள்
இல்லாளோடும் இனிதே பெற்ற மகவுகளுடனும்
பன்னெடுங்காலமாய் பலமுடன் வாழ
பளையூரில் சேர்ந்து பள்ளியில் பயணித்தவர்கள் சார்பில்
வாழ்த்துவதில் நிறைவடைகின்றோம்.

**அதிபர்கள்**

திரு. அ. கயிலாயபிள்ளை, திரு. ந. அம்பலவாணர், திருமதி வ. முகுந்தன், திரு. ஆ. தங்கவேலு, திருமதி. ஆ. இராசரட்ணம், திரு. போ. ஜெயகாந்தன் திருமதி . ம. கரியோர்பிள்ளை, திரு. பொ. நடேசலிங்கம் திரு. க. சண்முகநாதன், திரு. சு. ரவீந்திரன், திருமதி . பு. மங்களேஸ்வரன், திரு. க. உதயகுமாரன்.

## சீட்டுக்குலுக்கல் ஒத்திவைப்பு

சுன்னாகம், கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் கோயில் நிதி சேகரிப்புக்கான அதிர்ஷ்ரலாபச் சீட்டுக் குலுக்கல் தவிர்க்கமுடியாத காரணத்தால் 09.02.2015 அன்று நடைபெறவில்லை. அந்நிகழ்வு எதிர்வரும் 20.02.2015 அன்று மேற்படி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி நிகழ்வின்போது நடைபெறும் என்பதை அன்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

**ஆலய தர்மகர்த்தாவும்,**
**திருப்பணிச்சபையினரும்**

## தவறிவிட்டது

தெல்லிப்பழை, தையிட்டி, காங்கேசன்துறையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் டர்சன் என்பவருடைய தே.அ.அட்டை (881973383v), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரிப்பத்திரம், என்பன யாழ் நகரப்பகுதிக்குள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

ரட்ணா ஸ்ரோர்ஸ்,
பூநகரி கன்னார்.

தொடர்பு - 077 646 8682

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்

40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**அஜீத் நடிக்கும் என்னை அறிந்தால்**



**காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30**

முற்றிலும் குளிரூட்டப்பட்டது


## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு
## மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான உலர் உணவு விநியோகம்- 2015/16

1. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைகளிற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 1. | D/MN/2014/01 | பொது வைத்தியசாலை, மன்னார் | 100,000 |

2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கேற்ற வகையிலான வியாபார பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும்
3. பொது வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது இரண்டு வருடங்கள் அரசாங்க நிறுவனத்திற்கு இடையூறின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.
4. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியாக பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 16.02.2015 தொடக்கம் 09.03.2015 வரையான காலப்பகுதியில் 0900 மணி தொடக்கம் 1500 மணிவரை (1230 தொடக்கம் 1300 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் 10.03.2015 திகதி 1000 மணிக்கு முன்பதாக மன்னார் பொது வைத்தியசாலை கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
7. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பொது வைத்தியசாலை, மன்னார் (தொலைபேசி இல. 023-222-2261) என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

வைத்திய கலாநிதி (திருமதி). S. R. யூட்,
தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைகள் குழு,
வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
சுகாதார கிராமம்,
பண்ணை,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்



### குமாரவேலு சிவநேசன்

டச்சு வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், அல்லாரை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட குமாரவேலு சிவநேசன் 10.02.2015 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு மற்றும் மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், பசுபதி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தீபா, பானுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2015) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி செல்வநாயகதேவி விக்னேஸ்வரன்

மட்டுவில் தெற்கு வாகையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகதேவி விக்னேஸ்வரன் நேற்று (11.02.2015) புதன்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா வாத்தியார் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-பத்மேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், விக்னேஸ்வரனின் (ஓய்வு நிலை இலங்கை வங்கி உத்தி யோகத்தர்) அன்பு மனைவியும், நடேஸ்வரன், பகீரதி, கண்ணன், இன்பரதி, விஜயரதி (பிரதேசசெயலகம், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், Dr. செல்வ நாயகராஜா, செல்வநாயகமலர், செல்வநாயகசோதி, செல்வநாயகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வள்ளிநாயகி, கைலை நாயகி, செல்வநாயகி, இராஜேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கவிதா, கணேசநாதன், நிலாந்தி, தவராசா, துவாரகன் (வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்பு மாமியும், நவீனா, டெசிகா, சகானா, சயீனா, பிரவீன், அபிரீராஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (13.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குச்சுப்பிட்டி இந்து மயானத்துக்குளடுத்துச்செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாகையடிவீதி,
மட்டுவில்தெற்கு, சாவகச்சேரி.
021 205 7637 077 7259105

தகவல்
குடும்பத்தினர்.



### மயில்வாகனம் தெய்வேந்திரம்

(முன்னாள் சாரதி, இ.போ.ச)


மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தெய்வேந்திரம் நேற்று (11.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-இளையபிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-நாகம்மா தம்பதியரின் மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், தேவராஜனி (ஜேர்மனி), சிவாஜினி (ராதா-டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவனேசராசா (ஜேர்மனி) ரவீந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும், பிரியங்கா, பிரவீன், பிருத்வீ, லினோஜ், சதுஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பரிமளம், அன்னபூரணம், ராஜசுந்தரம் மற்றும் கனகாம்பிகை, பரராஜசேகரம், அற்புதசேகரம் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் கணேசநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2015) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.



### வீரசிங்கம் சகாதேவசங்கரி

(ஓய்வுபெற்ற பதில் முகாமையாளர் மக்கள் வங்கி-கன்னாதிட்டி கிளை, யாழ்ப்பாணம்.)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி சிவன் கோயிலடி தெற்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சகாதேவசங்கரி 10.02.2015 செவ்வாய்க்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம்-இரத்தினம் தம்பதியரின் மகனும், கமலநேத்திராவின் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியை-சங்கரி மிஸ்) பாசமிகு கணவரும், கஜதேவசங்கரி (லண்டன்), யாதவசங்கரி (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், Dr. காவேரி (லண்டன்), தர்சினிமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வீரசிங்கம் ஆனந்தசங்கரி
(சகோதரன்) Tel:021222 2289

## மாணவர் பிரச்சினைகளை ஆராய 15 பேர் கொண்ட குழு

யாழ்ப்பாணம், பெப். 12

வடக்கில் பாடசாலை மாணவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கவென 15 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, வடமாகாண கல்வி அமைச்சு என்பன இணைந்து இந்தக் குழுவை உருவாக்கியுள்ளன என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம் ஆகிய இரண்டு துறைகளையும் சேர்ந்த 15 பேர் இந்தக் குழுவில் உள்ளடங்கியுள்ளனர். அவர்கள் அறிக்கை சமர்ப்பித்த பின்னர், கல்வி அதிகாரிகள் ஊடாக அது நடைமுறைப்படுத்தப்படும். இந்தத் திட்டம் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் சில காரணங்களால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது என்று கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

கல்வி, சுகாதாரத்துறையைச் சேர்ந்த அமைச்சர்களான மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம், த.குருகுலராஜா, இரண்டு அமைச்சுக்களினதும் செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-4)


## மானிய ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலகினார்

யாழ்ப்பாணம், பெப். 12

ஆர்ப்பாட்டங்கள், கண்டன அறிக்கைகள் வெளியிடப்பட்ட நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சானிகா ஹிரும்புரேகம பதவியிலிருந்து விலகியுள்ளார் என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து உரிய முறைப்படி செயற்பட்டிருக்காத, நீதியான முறையில் நியமனம் பெற்றிருக்காதவர்களை விலக்குமாறு பல திணைக்களங்களிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டதோடு கண்டன அறிக்கையும் மனுக்களும் விடுக்கப்பட்டன.

அவ்வாறே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் பதவி விலகவேண்டும் என்று அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமும் கோரிக்கை விடுத்திருந்தது. அவர் விரைவில் பதவி விலகுவார் என்று உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் உறுதியளித்திருந்த நிலையில் ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலகியுள்ளார். அவ்வாறே யாழ்.பல்கலைக்கழக பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் உட்பட அனைத்துப் பல்கலைக்கழகங்களிதும் பேரவையின் வெளி வாரி உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்று அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் அவர்கள் இன்னும் பதவி விலகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)



## மரண அறிவித்தல்

### செல்லையா இராயப்பு

கோப்பாய் தெற்கு இருபாலையைப் பிறப்பிடமாகவும் யாழ். கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராயப்பு கடந்த 08.02.2015 ஞாயிறு அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சிதம்பர மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிங்கராசா, யோசேப் (கனடா) காலஞ்சென்ற அருளப்பு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யூயின் சவுல் (கனடா) யூயின் வளன் (பின்லாண்ட்) யூயின் அஜித் (கனடா) ஜெனிபா, ஜெறின் (லண்டன்) யூயின் லக்ஷன் யூயின் நிக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விலோசினின் அன்பு மாமனும், இராசாத்தி, யேசுநேசி (கனடா), தவராசா (கனடா) கனோசலிங்கம் (ஜேர்மனி), யோகரத்தினம் (கனடா), யோகம்மா (கனடா), இராஜேஸ்வரி, நாகேஸ்வரி (நோர்வே) காலஞ்சென்ற ரஞ்சிதலீலா ஆகி யோரின் அன்பு மைத்துனரும், வடிவேல் (கனடா) விஜயரத்தினம், ஐயாத்துரை (நோர்வே) ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதி பிரார்த்தனைகள் இன்று (12.02.2015) வியாழக்கிழமை அவரது கலட்டி இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பிற்பகல் 2.00 மணியளவில் கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித மரியன்னை ஆலய சேமக் காலைக்கு (இராஜவீதி) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யோசப் (கனடா) SriLanka No 0768465752 (சகோதரர்)
யூயின் (கனடா) SriLanka No 0778088065 (மகன்)
அஜித் (கனடா) 00647484048 (மகன்)
செல்வி ஜெறின் (லண்டன்) + 447438441798 (மகள்)
வளன் (பின்லாந்.) + 358401387676 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

5ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

## பிணையில்

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்று அவர் வெளியிட்டிருந்த ஆவணத்தில் காணப்பட்ட கையொப்பங்கள் போலியானவை என்று இனங்காணப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கொழும்பு நீதிவான் முன்னிலையில் நேற்று அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது பிணை வழங்கப்பட்டது.

(ந-10)

## நல்லிணக்கம்

அதனடிப்படையில், நல்லிணக்க செயலணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கும் பொருட்டே, இந்த நல்லிணக்க செயலணி அமைக்கப்பட்டுள்ளது. மீள்குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்படவுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக – எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக, வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நல்லிணக்க செயலணியால், அதனை முன்னெடுப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னதாக அந்த மீள்குடியமர்வு நடவடிக்கைள் இடம்பெறும்.

இதேவேளை, புதிய அரசின் மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவர் ஹரின் பீரிஸ் கடந்த வாரம், யாழ்.மாவட்டத்துக்கு திடீர் பயணம் மேற்கொண்டு வந்து சென்றுள்ளார். யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், இராணுவ அதிகாரிகளை மாவட்டச் செயலகத்தில் சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார்.

வலி.வடக்கு மீள்குடியேற்றத்தில் இதுவரை செய்த நடடிக்கைகள், இனி மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் என்பன தொடர்பில் விரிவாக ஆராய்ந்தார் என்று கூறப்படுகின்றது.

(ந-5)

## விபூஸிகாவின்

கடந்த வருடம் மார்ச் மாதம், தமிழீழ விடுதலைப் புலிகள் மீள உருவாகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டு இராணுவத்தினரால் கிளிநொச்சிப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது. அதன்போது, இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதுடன், அதன் தொடர்ச்சியாக 13 வயது சிறுமி விபூசிகா மற்றும் அவரது தயார் ஜெயக்குமாரி ஆகியோர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும், காணாமற் போன தமது மகனைத் தேடி தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தியதுடன், பிரிட்டன் பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நேரத்தில், சனல் – 4 ஊடகம் ஊடாக தமது பிரச்சினையையும் தெரியப்படுத்தியிருந்தனர்.

ஜனாதிபதியும் – பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த மஹிந்த ராஜபக்ஷனால், ஜெயக்குமாரி மீது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை, தடுப்புக் காவல் உத்தரவு நீடிக்கப்பட்டு வந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர், புதிய ஜனாதிபதியால் – புதிய பாதுகாப்பு அமைச்சரால் தடுப்புக் காவல் உத்தரவு நீடிக்கப்படவில்லை. இதேவேளை ஜெயக்குமாரி மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழக்கு எடுக்கப்பட்டது. இதன் போது பொலிஸார் விசாரணை முடியவில்லை என்று தெரிவித்தமைக்கு அமைய, வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதனையடுத்து அவர் மகசின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதே போன்று பல்வேறு தமிழ் அரசியல் கைதிகளும், பூஸா தடுப்பு முகாமிலிருந்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மகஸின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## இந்திய மீனவர்

"புதிய அரசு ஆட்சி அமைத்த பின்னர், தமிழக மீனவர்களின் அத்துமீறல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இதனால் மன்னார், யாழ்ப்பாண மீனவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். கடந்த காலங்களில் ஏற்பட்ட சொத்தழிவுகளிலும் பார்க்க அதிகளவிலான சொத்தழிவுகளை இப்போது இந்திய மீனவர்கள் ஏற்படுத்துகின்றனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கின்ற நிலையில் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, புதிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அத்துமீறி வந்த இந்திய மீனவர்களை விடுவித்ததுடன், அவர்களின் படகுகளையும் விடுவித்துள்ளது. இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது."– என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

"இந்தியாவுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால செல்லவுள்ளார். அவர் அங்கு தங்கியுள்ள சமயத்தில் – அதாவது 16 ஆம் திகதி திங்கட்கிழமை மன்னார் மீனவர்கள் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்னார் பாலத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் போராட்டம், மன்னார் நகரினூடாகச் சென்று மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மனுக் கையளித்தலுடன் நிறைவு பெறும்."– என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"தமிழக மீனவர்களின் அத்துமீறலுக்கு சரியானதொரு நடவடிக்கை எடுப்பதற்கு புதிய அரசு தவறுமானால், அடுத்த மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள தமிழக – இலங்கை மீனவர் சந்திப்பை, மன்னார் மாவட்ட பிரதிநிதிகள் புறக்கணிக்க நேரிடும்"– என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ந-5)

## பதவிக்கு

"நான் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு செல்வதற்கு இடமளிக்கும் வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து ஜெயந்த கோத்தாகொட விலகிக் கொள்ளாது போனால், உயர் நீதிமன்றத்துக்குச் செல்வேன். பகிரங்கமாக தாம் பதவி விலகுவதாக கூறிய அவர் தற்போது அதற்கு மறுத்து வருகிறார்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷ தம்மைப் பதவி விலகக் கூடாது என்று ஆலோசனை கூறியுள்ளதாக ஜெயந்த கோத்தாகொட தெரிவித்துள்ளார். தற்போதைய அரசில் உள்ள சில அமைச்சர்களும் அவருக்கு இதேபோன்ற ஆலோசனை கூறியுள்ளனர். நான் நாடாளுமன்றத்தில் மீண்டும் பிரவேசிப்பதை இப்போதைய அரசில் உள்ள சில அமைச்சர்களும் கூட விரும்பவில்லை."– என்றும் பொன்சேகா குறிப்பிட்டார்.

புலிகள் தலைதூக்க இடமில்லை

"புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், வடக்கு – கிழக்கில் விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுப்பதற்கான எந்த அறிகுறிகளும் தென்படவில்லை. எனது இராணுவ அறிவுக்கு எட்டிய வரையில். சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுவது போன்று, விடுதலைப் புலிகளால் செயற்பட முடியாது. ஆனால் எதையும் எதிர்கொள்ளத் தக்கவகையில் தயார் நிலையில் இருக்க வேண்டும்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ந-5)

## சிக்கினார்

குறித்த நபரைப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

வடமராட்சி கரவெட்டி கிழக்கு பகுதியை சேர்ந்த பெண் ஒருவருக்கும் சுவிஸ் நாட்டை சேர்ந்த புலம்பெயர்ந்த 58 வயதுடைய சந்தேக நபர் ஒருவருக்கும் நேற்றுமுன்தினம் வடமராட்சியில் உள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் திருமணம் நடைபெறவிருந்தது. அப்போது திரைப்படங்களில் வருவது போன்று வந்த பொலிஸார் அந்த நபரைக் கைது செய்தனர்.

'குறித்த சந்தேக நபர் கடந்த 12 ஆம் திகதி விமானம் ஒன்றின் மூலமாக இலங்கை வந்த போது விமானத்தில் பெண் ஒருவருடன் தவறாக நடக்க முயன்றதாக குற்றஞ்சாட்டி கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்றும் தற்போது வடமராட்சி கரவெட்டி கிழக்கு பகுதியை சேர்ந்த38 வயது பெண் ஒருவரைத் திருமணம் செய்யவிருந்தார்"– என்றும்பொலிஸார் தெரிவித்தனர்

இவர் மீது ஏற்கனவே திருமணம் செய்வ தாக ஏமாற்றினார் என்று திருகோண மலை நீதிமன்றில் வழக்கொன்று நிலுவையில் இருப்பது தெரியவந்துள் ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர். அதேபோன்று கைதடி பகுதியை சேர்ந்த பெண் ஒருவரையும் இவர் ஏமாற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் கரவெட்டி கிழக்கு பகுதியை சேர்ந்த பெண் ஒருவருடன் திருமணம் நடக்கவிருப்பதாக தமக்கு சிவில் பாதுகாப்பு குழுவால் தெரிவிக்கப்பட்டதால் அங்கு சென்று அவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யும் போது அவரிடம் கடவுச்சீட்டு அடையாள அட்டை எதுவும் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை திருமணம் நடக்கவிருந்த பெண் கடும் அதிர்ச்சி அடைந்த நிலையில் மயக்கமுற்று பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் பொலிஸஸார் தெரிவித்தனர்.

(ந-109)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.கந்தப்பு தயாளன் அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு சுந்தரம் கந்தப்பு**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன் புரிச்சங்கம்
பிரதேச செயலகம்
தென்மராட்சி

**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கணக்குக் கிளையில் பொதுமுகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
திருமதி .விஜயரதி துவாரகன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி விக்னேஸ்வரன் செல்வநாயகதேவி**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன் புரிச்சங்கம்
பிரதேச செயலகம்
தென்மராட்சி

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி விஜயமாலா சண்முகரத்தினம் அவர்களின்
அன்புத் தந்தை **இராசையா கனகரத்தினம்**
அவர்கள் 11.02.2015 அன்று இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிகழகம், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

**கண்ணீர் அஞ்சலி**



**அருள்ராஜா வசந்தன்**

எமது கடையில் பணியாற்றிய அருள்ராஜா வசந்தன் 09.02.2015 திங்கட்கிழமை காலமனார்.

அன்னாரின் பிரிவால் நாமும் மிகுந்த துயர் அடைவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆர்.கே.பேனிச்சர் அன்ட் மல்ரி சென்ரர்**
**322B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

உரிமையாளரும் ஊழியர்களும்.

**கண்ணீராய்க் கரைந்துபோனோம்**




அமரர் செல்வி மஞ்சுஷா தவராசா

மலர்வனந்தான் வாழ்வு
மலர்வளையம் என்றேன்நினைத்தாய்?
காவலுக்குத்தான் முட்கள்...
உனை முள்ளால் ஏன் கிழித்தாய்?
உன் கவிதைக்காயத்தில் வழிந்தது குருதிகண்டோம்!
தண்டனை நீ உனக்களித்தாய்
கண்ணீராய்க் கரைந்து போனோம்!

அக்கா தவநிஷா

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்



## S.P. அந்தோனிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற போலிஸ் இன்ஸ்பெக்டர்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிப்பிள்ளை பிலிப்பையா அந்தோனிப்பிள்ளை 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை பிலிப்பையா-தங்கமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், பிலோமினா கிருபைராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஜெஸ்லிநிமல் மற்றும் கிறேஸ்லி ஜெயா (பிரான்ஸ்), டொறின் (அமெரிக்கா), அஞ்சலின் ஞூட்டி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொலின் (பிரான்ஸ்), பிரான்சிஸ் பதமநாதன் (அமெரிக்கா), ஜோன் தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி செபஸ்ரியானா அரியமலரின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்புச் சகோதரனும், தனுஸ்டன் (பிரான்ஸ்), ஜெனுஸ்டன் (பிரான்ஸ்), ப்றியானா (அமெரிக்கா), யனிசா (அமெரிக்கா), நிரன் (பிரான்ஸ்), அடோசன் (பிரான்ஸ்), அடோலினி (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 14.02.2015 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் இடம்பெற்று, இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில். தகவல்: குடும்பத்தினர்.



## திருமதி பத்மாவதி மகாதேவா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி மகாதேவா 10.02.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மகாதேவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி- மனோன்மணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - திரவியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் மு.வேலாயுதபிள்ளை (ஓய்வு நிலை பிரதி அதிபர்- கொக்குவில் இந்துக் கல்லூரி,நிரு கல்வி நிலைய இயக்குனர்),யோகேஸ்வரி,செல்வராணி,செல்வகுமார் (லண்டன்) காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னலிங்கம், நாகரட்ணம், பூமணி காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, செல்லம்மா, மனோன்மணி, ஆகியோரின் மைத்துனியும் தர்சினி,' தயாளன், (லண்டன்), தயானந்தன் (லண்டன்), தனுசா, தர்சிகா(சுவிஸ்), தாட்சாஜினி, தர்மிலா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் மகாரூபன், சுபாசினி (லண்டன்), தாட்சாஜினி(லண்டன்), சுந்தரகுமார் (சுவிஸ்), கிரீசன், (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்- வேலணை), அருள் ஈசன் (குமரன் ஸ்ரோர்ஸ்-திருநெல்வேலி) டவல்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பானுசன் (கொ.இ.கல்லூரி), நிரோஜா(பெரியபுலம் மகாவித்தியாலயம்),வர்சிகா (கொ.இ. கல்லூரி) கிரிகேசன், சதுர்ரிகன்(கொ.இ.ஆரம்ப பாடசாலை),திவியன் (கொ.இ. கல்லூரி) , தீபிகன்(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), அபிசன், ஆரபி, அக்சயா(லண்டன்) சுதிர், சௌமி, சமீர்(சுவிஸ்), பிறிட்னன்(லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.02.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:-
குடும்பத்தினர்.
0776160349.

# யாழிலிருந்து 250 பொலிஸார் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றி வரும் சுமார் 250 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றம் பெற்று தென் பகுதிக்குச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்படும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸாருக்கும் இடமாற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் தமிழ் பொலிஸார் இடமாற்றம் செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. (த-4)

# மரண அறிவித்தல்கள்



## பாலன் சந்திரன்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலன் சந்திரன் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) நேற்று (11.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டியன் பாலன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், தவமலரின் அன்புக் கணவரும், ஜெயக்குமாரி, காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் தயாளி, சுதாளி, லலிதா, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சாவித்திரி, பராசக்தி, சறோசா, பானுமதி, காலஞ்சென்ற அம்பிகாவதி மற்றும் தனபாலசிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்ற பவளக்கொடி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்

தகவல்:
குடும்பத்தினர்.



## இராசையா கனகரத்தினம்

உரும்பிராய் கிழக்கு, ஞானவைரவர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகரத்தினம் நேற்று (11.02.2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா- இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவி யின் அன்புக் கணவரும், திருமதி விஜிதா மகேந்திரன், விஜயகாந்தன், விஜயரூபன் (சுவிஸ்), திருமதி விஜயமாலா சண்முகரத்தினம் (ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), திருமதி விஜயலதா பராபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், எஸ். வி. மகேந்திரன் (ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்), திருச்செல்வி, பாலகௌரி (சுவிஸ்), எஸ்.சண்முகரத்தினம் (காணி நிர்வாகத் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஆர். பராபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கதிரமலை நாதன், சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், லாவண்யா (கனடா), சுகன்யா, அருள்மாறன், ஆரண்யா, சிந்துஜன், அபிநயா, ரூபிகா (சுவிஸ்), கௌசிக் (சுவிஸ்), விதூசன், விஜோசன், ல்க்சியா, சாகித்தியா, கார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேரனும், மிதுனனின் அன் புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2015) வியாழக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்.
குடும்பத்தினர்.



மலர்வு 24.09.1937

உதிர்வு 11.02.2015

## திருமதி கணபதிப்பிள்ளை (சூடாமணி) தங்கம்

காங்கேசன் துறை தெற்கு, வீமன் காமம் வடக்கு (மயிலப்பை) பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை (சூடாமணி) தங்கம் நேற்று (11.02.2015) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள் ளையின் (பொதுவுடமைவாதி .இ.க. சூடாமணி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு-செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு, சின்னாச்சிப்பிள்ளை, தெய்வானை மற்றும் அம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வையந்திமாலா (ஆசிரியர் கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம்), காலஞ்சென்ற ஜெயகுணா மற்றும் ஜெயதாசன் (சூடா), மேஜெயா (மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், வவுனியா), ஜெயரத்தினா (ஆசிரியர், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தராஜ் (ஆசிரியர், பாவற்குளம் மகா வித்தியாலயம்), பவாந்தினி (சூ ட்டி), ஜெயரஞ்சினி (ஆசிரியர், சிவபுரம் அ.த.க. பாடசாலை), தமயந்தி (அதிபர், இளவேனில் பாலர் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெனனி, துவாரகா, யதுசன், திசாலினி, கனிமதி, மகிழ்மதி, சாதுரியன், சாதுரியா ஆகியோரின் அன்புப் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் 63/3, அண்ணா வீதி, தோணிக்கல், வவுனியா இல்லத்தில் நாளை (13.02.2015) வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்று பூந்தோட்டம் நகரசபை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

024 2221210, 0777585908,
0777589722.

தகவல்: குடும்பத்தினர்.

### உண்மைகளை

"ஒரு அரசு என்கிற வகையில் இனப் படுகொலை ஒன்று இலங்கையில் நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன பி.பி.சி. செய்திச் சேவைக்குக் கூறியிருந்தார். வடக்கு மாகாணசபையால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், நல்லிணக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள சூழலில் இது போன்ற பிரேரணைகள் குழப்பத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இது தொடர்பில் கேட்ட போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சபையின் தீர்மானம் – கடந்த காலங்களில் – சரித்திரபூர்வமாக நடந்த விடயங்களைக் கூறியுள்ளது. உண்மையில் கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பதை, எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளை அந்தப் பிரேரணை கூறியுள்ளது" என்று குறிப்பிட்ட சுமந்திரன், "நல்லிணக்கம் தொடர்பிலான முனைப்புக்கள் தற்போது இடம்பெறுவது என்றால், இதற்கு முன்னர் ஏதோ பிணக்குகள் இருந்திருந்திருக்க வேண்டும்" என்பதைச் சுட்டிக்காட்டினார்.

"பிணக்குகள் இருந்தால்தானே அவற்றைத் தீர்ப்பதற்கு – தணிப்பதற்கு – நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனடிப்படையில் தற்போது நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தால், அந்த நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமாக இருந்த பிணக்குகளின் உண்மைகண்டறியப்படவேண்டும். அந்தப் பிணக்குகளுக்கு என்ன காரணம் என்பது கண்டறியப்பட வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"அதைத்தான் வடக்கு மாகாணசபையின் பிரேரணை சொல்கின்றது. கடந்த காலங்களில் நடந்த உண்மைகளைச் சொல்கின்றது. நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாக இருந்தால், கசக்கும் உண்மைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கு, வடக்கு மாகாணசபையின் தீர்மானம் – உண்மைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனவே அந்தப் பிரேரணை சரியான – தகுந்த – நேரத்திலேயே வந்திருக்கின்றது."– என்று அவர் கூறினார்.

"கடந்த காலங்களில் நடந்த உண்மைகளை – சம்பவங்களை – சர்வதேச சட்டங்களின் பிரகாரம், இனப்படுகொலை என்று வடக்கு மாகாண சபை முதலமைச்சர் கூறியுள்ளார். அவர் அதில் விசேடமாக இறுதியில் முக்கியமான விடயத்தை குறிப்பிட்டுள்ளார். 'ஓர் இனத்தின் மீது 1948 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிட்ட ரீதியில் தொடர்ச்சியாக இனப்படுகொலை நடத்தப்பட்டிருக்கின்றது' என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இதனை சர்வதேச சமூகம் முதல் தடவையாக எதிர்கொள்கின்றது.

உலகில் எந்தவொரு நாடுகளிலும் இல்லாதவாறு, இங்கே முதல் தடவையாக இவ்வாறு இடம்பெற்றிருக்கின்றது. எனவே இதன்தாக்கம் என்ன என்பதை புரிந்த கொண்டு சர்வதேச சமூகம்தான் தீர்மானம் எடுக்க வேண்டும்."– என்று அவர் மேலும் கூறினார். (ந-5)

### இந்திய

அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படும் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.மரின்டா தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள முன்னர் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பதாகக் கூறியிருந்தார். இந்நிலையில் படகுகளை விடுவிக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ந-4)

### ஜோன்

அதையடுத்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, வெளிநாடுகளுக்கு தொடர் பயணத்தை மேற்கொண்டுள்ளார். பிரிட்டன் வெளிவிவகார அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார் மங்கள. அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியை இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின் பின்னர், ஐ.நா தலைமையகத்தில், ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்துப் பேசவுள்ளார். அதேவேளை, 2005 ஆம் ஆண்டின் பின்னர் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஒரு வரை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். (ந-5)

# 25 குடும்பங்களுக்கு காணிப் பத்திரங்கள்

## மகேந்திரபுரம் கிராமத்தில் வசிப்போருக்கு

கொழும்புத்துறை, பெப். 12

பாஷையூர், மகேந்திரபுரம் கிராமத்தில் வசித்து வரும் 25 குடும்பங்களுக்கான காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை மகேந்திரபுரம் பதுவையர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

யாழ். ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான குறித்த நிலப் பகுதியை தலா இரண்டு பரப்புக்கள் வீதம் 25 குடும்பத்துக்கு வழங்கும் நிகழ்வு சனசமூக நிலையத் தலைவர் வின்சன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணிகளுக்குப் பொறுப்பாளராகக் கடமையாற்றிவரும் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு காணிகளுக்கான உரிமங்களை உரியவர்களிடம் கையளித்தார்.



யாழ். ஆயர் இல்லத்துக்குச் சொந்த மான காணிகளுக்கு பொறுப்பாளராகக் கடமையாற்றிவரும் அருட் தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் காணிப் பத்திரத்தைக் கையளித்த போது....

பாஷையூர் பங்குத்தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் அடிகள், உதவிப் பங்குத் தந்தை அருட்திரு வசந்தன் அடிகள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை மகேந்திரன் அடிகள் பாஷையூர் பங்குத் தந்தையாக இருந்தபோது 1982 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் உள்ள காணிகளைப் பகிர்ந்தளித்து 25 குடும்பங்களைக் குடியமர்த்தியிருந்தார். மேற்படி 64 பரப்புக்காணியை யாழ். பிரதான வீதியில் வசித்து வந்த வன்னியசிங்கம் என்பவர் யாழ். ஆயர் இல்லத்துக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மகேந்திரன் அடிகளாரின் முயற்சியால் அப்போது வீட்டுத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் இடப்பெயர்வை அடுத்து சேதமடைந்த வீடுகளை கட்டி எழுப்பும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள காணி உறுதிகள் இன்றி மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

அதனையடுத்து யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் அனு மதியுடன் 32 வருடங்களின் பின்னர் உறுதிகள் கிடைத்தமையானது, பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொள்ள வழிகோலியுள்ளதாகப் பயனாளிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். அதே வேளை 7 பரப்புக்காணி பொதுத் தேவை களுக்கென சனசமூகநிலையப் பொறுப்பில் கையளிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ–135)

# 80 ஆவது பிறந்த நாள் கொண்டாடிய மூதாட்டி

யாழ்ப்பாணம், பெப். 12

இளவாலையைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் தனது எண் பதாவது பிறந்த தினத்தை முதியோர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் முதியோர்களுடன் சேர்ந்து கொண்டாடி மகிழ்ந்தார்.

தங்கவடிவேல் நாகம்மா என்ற இந்த மூதாட்டியின் விருப்பத்துக்கு ஏற்றவாறு அவரது எண்பதாவது பிறந்த தின நிகழ்வு கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

இளவாலையில் இருந்து தனது உறவினர்களுடன் அங்கு சென்ற அந்த மூதாட்டி அங்கு இல்ல முதியோர்களுடன் இணைந்து தனது பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

தனது பிறந்தநாள் பரிசாக முதியோர்களுக்குசிற்றுண்டிகள் இனிப்புகளையும் வழங் கினார்.

தொடர்ந்து அவரது விருப்பத்துக்கு ஏற்ப கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வின் போது இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்கள் பிறந்த நாள் கொண்டாடிய மூதாட்டிக்கு வாழ்த்துக்களைத் தெரி வித்து மகிழ்ந்தனர். (வ–17)



சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இருதயராஜ் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினரால் அரியாலை மாம்பழம் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பு நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமதி சுப்பிரமணியம் அவர்களால் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டு மக்கள் பவனைக்கு கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் அங்கத்தர்கள் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். (வ–23)

## தரம் 5 புலமைப் பரீட்சையில் வெற்றிபெற்றோருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், பெப். 12

தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்களை, யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் பாராட்டி அவர்களுக்குப் பரிசில்களை வழங்கியுள்ளது.



சமாசத்தில் தலைவர் எஸ். இலகுநாதன் தலைமையில் அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 106 மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின் பிள்ளைகளே இவ்வாறு பாராட்டிக் கௌர விக்கப்பட்டனர்.

மேற்படி சமாசம் வருடா வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் அங்கத்தவர்களின் பிள்ளைகளை பாராட்டிக் கௌரவிக்கும் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. (வ–17)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் விவரங்கள் திரட்டல் ஆரம்பம்

தென்மராட்சி, பெப். 12

வெளிமாவட்டங்களில் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்து இடமாற்றலை எதிர் பார்த்திருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் விவரங்களை, அரச சேவைகள் பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் திரட்டி வருகின்றனர்.

வெளி மாவட்டங்களில் ஐந்து வருடங்களுக்கு அதிகமான காலம் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளில் சங்கம் ஈடுபட்டுள்ளதால் 5 வருட சேவையைப் பூர்த்தி செய்து இடமாற்றலை எதிர்பார்த்திருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பதிவு செய்யுமாறு சங்கச் செயலாளர் அறி வித்துள்ளார். (வ–9)

# வடக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் தெரிவாகியோருக்கு வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், பெப்.12

வட மாகாண கிராம அபிவி ருத்தி திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டோருக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஓ.எல்.ஆர். தேவாலயத்தில் நடைபெற்றது.

வடமாகாண கிராம அபிவி ருத்திச் சங்கத்தின் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவி ருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சரின் செயலாளர் ஆ.வரதீஸ்வரன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் 3 சங்கங் களுக்கு பாத்திரங்களும், ஒரு சங்கத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகளும் 2 சங்கங்களுக்கு தளபாடத் தொகுதிகளும் வழங் கப்பட்டதுடன் மேலதிகமாக 25 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் பா.டெனீஸ்வரன்,

"கிராமங்கள் அபிவிருத்தி அடைய [illegible]ண்டும் என்பதே கிராமிய [illegible] விருத்தித் திட்டங்கள் முன்னெ[illegible]கப்படுவதன் நோக்கம். கிரா[illegible]ங்கள் தோறும் பாதிக்கப்பட்ட[illegible]லர் உள்ளனர். குறிப்பாக ஒரு வேளை உணவுக்கும் கல்விக்கும் கஷ்டப்படுவோர் உள்ளனர். இந்த நிலையில் வழங்கப்படும் உதவிகளைக் கொண்டு கிராமங்கள் முன்னேற்றம் அடைய வேண்டும்.



போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் வாழ்வாதார உதவி வழங்கியபோது....

சில சங்கங்கள் தங்கள் நிர்வாகக் கூட்டங்களை நடத்துவ தில்லை. எனது அமைச்சில் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு நான் கிராமங்களை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ளேன். நான் கட்சி ரீதியாகவோ அல்லது வேறு எந்த விதத்திலும் பாகுபாடு பார்ப்பதில்லை. விரைவில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சங்கங்களின் உறுப்பினர்களைச் சந்திக்கவுள்ளேன்" என்று தெரிவித்தார்.

நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி உரையாற்றுகையில்: "குறைந்தளவு நிதியீட்டுடன் ஓரளவு துயர் தீர்க்கும் நோக்கில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றன. கடந்த காலங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அரசியல் கட்சிகளின் இறுக்கமான பிடியில் இருந்தன. சங்கங்களால் ஒழுங்காக சுயாதீனமாக இயங்க முடியாத நிலையில் இருந்தன. ஆனால் தற்போது அந்த நெருக்கடிகளில் இருந்து அவை வெளி வந்துவிட்டன.

சங்கங்கள் அரசியல் கட்சிகளின் பிடியில் இருந்தபோது உண்மையான பயனாளிகள் இனங்காணப்படாமல் வாழ் வாதாரங்கள் வழங்கப்பட்டன. தேவை உணராதவர்களுக்கு அவற்றை வழங்கியதால் அவர் கள் வாழ்வாதாரப் பொருள்களை விற்ற சம்பவங்களும் இடம்பெற்றன.

இப்படியான சம்பவங்கள் இனி மேலும் இடம்பெறக்கூடாது. வழங்கப் படும் வாழ்வாதாரங்களை உரிய முறையில் பயன்படுத்தி அபிவிருத்தி அடைய வேண்டும்" என்று தெரிவித்தார். (வ–10–20)

# வடக்குக் கடலில் தெற்கு மீனவர்கள்

## தடை செய்யப்பட்ட தொழில் முறைகளும் தாராளம்

யாழ்ப்பாணம்.பெப்.12

வடக்கு மாகாணத்தின் பெரும் பாலான கடற்பகுதிகளுக்குள் தென்னிலங்கை மீனவர்களின் வருகை அதிகரித்திருப்பதுடன், தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளும் பயன்படுத்தப்பட்டு வடக்கு மாகாணத்தின் கடல்வளம் நாளாந்தம் அழிக்கப்பட்டுவருவதாக வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

**ஐரோப்பிய ஒன்றியத்தால் மீன் ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்கள் தமது தொழிலை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே இதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் மீன்பிடி தொடர்பில் பெரிய பிரச்சினைகளை மீனவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இந்திய மீனவர்களின் வருகை, தென்னிலங்கை மீனவர்களின் வருகை, தடை செய்யப்பட்ட தொழில் முறைமை என வடபகுதி மீனவர்களின் தொழில்முறைமையை அழிக்கும் வகையில் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

வடபகுதியின் கடல்வளத்தைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினரும் தொழில் செய்யக்கூடிய வகையில் மீனவர்கள் தமது தொழிலை மேற்கொண்டு வரும் நிலையில் தென்னிலங்கையில்இருந்துவருகை தரும் மீனவர்கள் தடைசெய்யப்பட்ட தொழில் முறைமைகள் ஊடாக மீன் வளத்தை அழித்துக் கொண்டு செல்கின்றனர்.

இந்த தொழில் முறைமையை உடனடியாக நிறுத்த வேண்டிய பொறுப்பு கடற்றொழில் அமைச்சுக்கு உள்ளது. நவீன முறையில் மீன்பிடிக்கக்கூடிய தொழில்முறைமைகளையும், மாற்றுத் திட்டங்களையும் கடற்றொழில் அமைச்சு நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் மீன் ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்கள் தமது தொழிலை மேலும் அபி விருத்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே இதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பாக இந்திய மீனவர்களின் வருகை, தென்னிலங்கை மீனவர்களின்வருகையைகட்டுப்படுத்திவடபகுதி மீனவர்கள் சுதந்திரமாக மீன் பிடிக்க வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்–என்றார். (த–14)

## தண்ணீர் கலந்த டீசலை விற்க முயன்ற ஆசாமிகள்

கிளிநொச்சி, பெப்.12

டீசல் என்று கூறித்தண்ணீர் கலந்த டீசலை விற்பனை செய்ய முயன்ற பெரும்பான்மை இனத்தவர்கள் மூவர் அதற்கான பணத்தைப் பெற முயன்றபோது

கடைக்காரர் உஷாரானதால் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் பரந்தன்–பூநகரி வீதியில் உள்ள ஓசியர் கடைச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் இரவு பரந்தன்– பூநகரி வீதியில் உள்ள கடை ஒன்றில் வாடிக்கையாளர்கள் இல்லாத சமயம் பார்த்து படி ரக வாகனத்தில் வந்த பெரும்பான்மை இனத்தவர் மூவர், பீப்பாக்களில் டீசல் உள்ளதாகவும், லீற்றர் 70 ரூபாவுக்குத் தருவதாகவும் கடைக்காரரிடம் கூறினர். கடைக்காரரும் சரி இறக்குங்கள் என்று கூற, 3 பீப்பாக்களை இறக்கிவிட்டுக் காசைத் தாருங்கள் என்று சிங்களத்தில் கூறியுள்ளனர்.

சந்தேகமடைந்த கடைக்காரர் பரலுக்குள் இருந்த டீசலைச் சோதிக்க முயன்றபோது மூன்று பீப்பாக்களையும் விட்டுவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அந்த பீப்பாக்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 2 அல்லது 3 லீற்றர் மாத்திரமே டீசல் இருப்பதாகவும் மீதி முழுவதும் தண்ணீர் கலந்திருப்பதாகவும் கடை உரிமையாளர் தெரிவித்தார்.

நெல் அறுவடை செய்யும் இந்தக் காலத்தில் மக்களை ஏமாற்றி ஆள்கள் இல்லாத நேரங்களிலும், இரவு வேளைகளிலும், அரிவி வெட்டும் இயந்திரம் நிற்கும் இடங்களிலும் தந்திரோபாயமான முறையில் நீர் கலந்த டீசல் விநியோகிக்கப்படுவதாகவும், அதை வாங்கி பலர் ஏமாந்து போயுள்ளதாகவும் உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக் கொண்டனர். (த–21)

## நெடுங்கேணி வீடொன்றில் தங்க நகை, பணம் திருட்டு

கிளிநொச்சி, பெப்.12



விசுவமடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணிப் பிரதேசத்தில் 4 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட பொருள்களும். பணமும் களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நெடுங்கேணியில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்திரராஜ் சுபாகி என்பவரது வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பகல் வேளையில் குறித்த வீட்டில் யாரும் இருக்கவில்லை. வீட்டுக்காரர்கள் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியில் சென்றிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீட்டின் பின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 4லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், 17 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டுப் பற்றி விசுவமடுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–21)

## துணுக்காய் வைத்திய சாலைக்கு வைத்தியர் நியமிக்கப்படவில்லை

மல்லாவி, பெப்.12

துணுக்காய் அரசினர் வைத்திய சாலைக்கு சுமார் ஒரு வருடத்துக்கு மேலாகியும் வைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை. வைத்திய சாலையை நாடிவருவோர் ஏமாற்றமடைந்த நிலை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துணுக்காய், கல்விளான், சிவபுரம், உயிலங்குளம், கோட்டை கட்டிய குளம் மக்கள் வைத்திய வசதியின்றி கஷ்டமுறும் நிலை காணப்படுகிறது. பல கிலோ மீற்றர் பயணம் செய்து மல்லாவி அரசினர் வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இது தொடர்பாக மக்கள் பல தடவைகள் உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இன்றுவரை வைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை.

மக்களின் கஷ்ட நிலையைப் புரிந்து கொண்டு வைத்திய அதிகாரியை நியமிக்க ஆவன செய்ய சுகாதாரத் திணைக்களம் முன்வரவேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (த)



## பனம் பொருள் பயிற்சி நிலையம் தர்மக்கேணியில் திறந்து வைப்பு

பளை, பெப். 12

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினரால் பளை தர்மக்கேணியில் அமைக்கப்பட்ட பனம் பொருள் பயிற்சி நிலையம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத் தலைவர் மு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர் தர்மகுலசிங்கம், போதனாசிரியர்கள்,கிராம அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மொதப்பயிற்சிக்காலத்தைக்கொண்ட பயிற்சிநெறியில் பெரும் எண்ணிக்கையான யுவதிகள் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த–9)

## மாசேரியில் இரு பசுக்கள் திருட்டு

வரணி, பெப். 12

வரணி, மாசேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு பசுக்கள் பட்டியில் இருந்து களவாடப்பட்டுள்ளன.

மாசேரி வே.திருச்செல்வம் என்பவருடைய இரண்டு பசுக்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

வேலிக் கம்பியை வெட்டி உட்புகுந்த திருடர்கள் பட்டியில் இருந்த இரண்டு பசுக்களைத் தி[illegible]க் கொண்டுசென்றதாகக்கூறப்பட்டது.

சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுக்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. (த–122)

## இளைஞர் மீது கடும் தாக்குதல்

தென்மராட்சி, பெப். 12

வீதியில் நடந்து வந்த இளைஞரை தந்தையும் மகனும் தாக்கிக் காயப்படுத்தினர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கு வாகையடியில் இடம்பெற்றது.

குறித்த இளைஞர் பொருள்கள் வாங்கக் கடைக்குச் சென்றவேளையில் பின் தொடர்ந்து வந்த தகப்பனும் மகனும் திடீரென அவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் பிரகாஸ் (வயது–25) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை, வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவ்வழியே சென்ற சைக்கிளை மோதிவிட்டுத் தப்பியோடியுள்ளது.

மோட்டார் சைக்கிளால் மோதுண்ட நபர் காயங்களுக்கு உள்ளானார். நேற்று முன்தினம் மீசாலையில் இடம்பெற்ற சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் பாலமுருகன்(வயது–29)என்பவரே காயமடைந்தவராவர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த–9)

## யாழ்.- கொழும்பு தபால் ரயிலில் இரவில் அடிக்கடி திருட்டுக்கள்

### அச்சத்துடன் பயணம் செய்யும் நிலை

கரணவாய், பெப். 12

கொழும்புக்கும்யாழ்ப்பாணத்துக்கும் இடையில் இடம்பெறும் இரவு நேரத் தபால்ரயிலில் அடிக்கடி திருட்டுச்சம்பவங்கள் இடம்பெறு வதால் இரவு வேளைகளில் பயணம் செய்வோர் பெரும் அச்சத் துடன் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பு – யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் – கொழும்புக்கு இடையில் தினமும் இரவு 7 மணிக்கு இரவு நேர தபால் ரயில் காட்டுப் பாதையினூடாகப் பயணம் செய்யும் போது அதில் பயணிக்கும் திருடர்கள் பயணிகளின் பொருள்களை அபகரித்துக் கொண்டு தப்பிவிடுகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கித் தபால் ரயில் சென்று கொண்டிருந்தபோது மாகோவுக்கு அண்மையில் உள்ள ரயில் நிலையத்தில் நிற்க முற்பட்டவேளை பயணி ஒருவரின் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பி ஓடுவதற்கு முயற்சித்த ஒருவர் அதில் பயணம் செய்த இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு ரயில் நிலையக் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அதேபோல கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவும் கொழும்பிலிருந்து வந்தரயிலில் பயணம் செய்த பயணி ஒருவரின்பயணப்பொதியைஅபகரித்துக் கொண்டு காட்டுப் பகுதிக்குள் திருடன் தப்பி ஓடிவிட்டான். குறிப்பாகரயில்காட்டுப்பகுதிகளில்உள்ள ரயில் நிலையங்களில் நிறுத்தப்படும் போதே இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகப் பயணிகள் தெரிவித்தனர். (த–108)

# யாழ்.குடாநாட்டில் கைதானோர் எங்கே?

## கண்டறியக் கோரிப் போராடத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப் 12
போர்க் காலத்தில் யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபொழுது படையினரால் பலவந்தமாகக் கைதுசெய்யப்பட்டவர்களைக் கண்டறிவது தொடர்பில் வட பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள், பெற்றோர், பாதுகாவலர்கள் சங்கம் முனைப்புக் காட்டி வருகின்றது.
கடந்த சில நாள்களாக வன்னிப் பெருநிலப்பரப்பில் இறுதிப் போர் வேளையில் காணாமற்போனவர்களை மீட்டுத் தருமாறு பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், 1996ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த போது படையினரால் பலவந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விடயங்கள் பெரிதாகக் கவனிக்கப்படாமல் இருந்தன.
இந்நிலையில் அவர்களை மீட்டுத் தருமாறும், அவர்கள் தொடர்பான நிலைப்பாடுகளின் உண்மைத் தன்மைகளைத் தெரிவிக்குமாறும் வலியுறுத்தி வட பகுதியில் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள், பெற்றோர், பாதுகாவலர் சங்கம் விரைவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.
குறித்த ஆர்ப்பாட்டத்துக்கு தகுந்த ஆதாரங்களைக் கொடுத்து வலிமை சேர்க்கும் வகையில், 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் தமது உறவுகளை தொலைத்தவர்கள், இலக்கம் 16, கச்சேரி கிழக்கு என்னும் முகவரியில் அமைந்துள்ள குறித்த அமைப்பின் செயலாளரின் இல்லத்துக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் சென்று ஆதாரங்களைப் பதிவு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
(த–ரி)



அண்மை நாள்களாக ஏ–9 வீதியில் கட்டாக்காலிக் கால்நடைகள் குறுக்கிடுவதால் விபத்துகள் அதிகரித்து வருகின்றன. அண்மையில் வவுனியா புளியங்குளம் பகுதியில் ஏ–9 வீதியின் குறுக்கே மாடுகளுடன் மோதி பாரவூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியது.
(த–421)

# வீட்டாரை கட்டிப்போட்டு 7 பவுண் நகை கொள்ளை

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, பெப் 12
வவுனியா சின்னப் புதுக்குளத்தில் வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்தவர்களைக் கட்டிப்போட்டு விட்டுச்சுமார் 7 பவுண் தங்கநகையை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.
வவுனியா உமாமகேஸ்வரன் வீதியில் அமைந்துள்ள சின்னப்புதுக்குளத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இது குறித்து தெரியவருவதாவது:–
நேற்று அதிகாலை சந்திரா ஞானப்பிரகாசம் என்பவரின் வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த தாயையும் மகனையும் கட்டிபோட்டு அவர்களிடம் இருந்த 7 பவுண் தங்க நகைகளை அபகரித்து சென்றுள்ளனர்.
இது குறித்து வீட்டு உரிமையாளர் சந்திரா ஞானப்பிரகாசம் தெரிவிக்கையில், திருடர்கள் 3 பேர் முகத்தை மூடித் துணியால் கட்டிக்கொண்டு கையில் கத்தி, வாள் போன்ற ஆயுதங்களுடன் வீட்டின் பின் கதவை உடைத்துக் கொண்டு உள்நுழைந்ததாகவும், தன்னையும் மகனையும் கட்டிபோட்டு நகைகளை கொள்ளையிட்டுச் சென்றதாகவும் தெரிவித்தார்.
இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.
(த–421)

# பொலிஸாரைக் கண்டித்து வவுனியாவில் போராட்டம்

## வவுனியா நகர சபையின் ஊழியர்கள் நேற்றுத் திரண்டு எதிர்ப்பு




வவுனியா, பெப். 12
வவுனியா நகர சபை உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டம் வவுனியா நகர சபையால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
நேற்று முன்தினம் வவுனியா சந்தையை அண்மித்த வீதியில் நடைபாதையில் சில வியாபாரிகள் வியாபாரம் செய்துள்ளனர்.
வவுனியா நகர சபையின் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட பல உத்தியோகத்தர்கள் இதனைத் தடுத்து நிறுத்தி அவர்களை அப்புறப்படுத்தியுள்ளனர். இதன்போது நகரசபை உத்தியோகத்தர்களுக்கும் நடைபாதை வியாபாரிகளுக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.
இதனை ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் படம் பிடித்துள்ளார். இதன்போது படம் பிடித்த இளைஞனை சிலர் தாக்கியுள்ளனர். நகர சபை உத்தியோகத்தர்கள் குறித்த இளைஞனை வாகனமொன்றில் ஏற்றிச் சென்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.
இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தகவல்கள் பெறப்பட்டு முறைப்பாடுகள் பொலிஸாரினால் பதியப்பட்டன. பின்னர் நகர சபை உத்தியோகத்தர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இதனைக்கண்டித்துப் பொலிஸாருக்கு எதிராக நகர சபை உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
(த–402)

# தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் இரத்ததானம்



யாழ்ப்பாணம், பெப் 12
தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் யாழ். இணைப்பாளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 9ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.
இந்த இரத்ததான முகாமுக்கு புளொட் அமைப்பின் தலைவரும், வட மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் ஸ்தாபகரும், வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகரபிதாவுமான க.சந்திரகுலசிங்கம் (மோகன்), தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் ஆலோசகர்களில் ஒருவரான முத்தையா கண்ணதாசன், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன், செயலாளர் ஸ்ரீகேசவன், பொருளாளர் த.நிகேதன், அமைப்பாளர் லி.கஜன், கல்வி அபிவிருத்திப் பிரிவின் ம.பிரதீஷ், ஊடக இணைப்பாளர் சஞ்சீவன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுரேந்தர், முல்லை மாவட்ட இணைப்பாளர் வி.சஜீவ்நாத், யாழ்.மாவட்ட இணைப்பாளர்களான தனுஷ், சிவா மற்றும் கழகத்தின் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.
(402)

# மீனவரிடம் மீண்டும் கடற்படை சோதனை

மன்னார், பெப் 12
மன்னார் பிரதான பாலத்தடிக் கடற்கரையில் அமைந்துள்ள கடற்படையினரின் சோதனைச் சாவடியில் மீண்டும் மீனவர்களின் படகுகள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும்,மீனவர்களின் விவரங்கள் பதிவு செய்யப்படுவதாகவும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.
இதனால் கடற்கரையில் நீண்ட நேரம் தாமதித்தே தொழிலுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் விவரங்கள் பதியப்பட்டுப் படகுகள் கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலே மீனவர்கள் தொழிலுக்குச் சென்று வந்தனர்.
ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுச் சில வாரங்களுக்கு பின்னர் கடற்படையினரின் கெடுபிடிகள் குறைந்த நிலையில் மீனவர்கள் சோதனையின்றித் தொழிலுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.
தற்போது மீண்டும் மீனவர்களின் விவரங்களைப் பதிவு செய்வது நடைமுறைக்கு வந்துள்ளது. அத்துடன் மன்னார் பிரதான பாலத்தடி ஊடாகத் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் படகுகள் கடற்படையினரால் சோதனை செய்யப்பட்டே தொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படுகின்றது.
அப்பகுதியில் இருந்து ஆற்றுவாய் பகுதியூடாகத் தென் கடலுக்குச் செல்லும் மீனவர்களின் படகுகள் ஆற்றுவாய் பகுதியில் கடற்படையால் மறிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தென்கடல் பகுதிக்குத் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.
கடற்கரையில் இருந்து தொழிலுக்குச் செல்லும்போதும்,தொழில் முடிவடைந்த பின் கரை வரும் போதும் குறித்த சோதனைகள் இடம்பெறுகின்றன.
இதனால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதோடு மீன்களை உரிய நேரத்துக்குச் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.
அது மட்டுமின்றிக் கரை திரும்பும் போது மீனவர்களின் படகுகளில் இருந்து கடமையில் உள்ள கடற்படையினர் கடல் உணவுகளைத் தமது தேவைக்கு ஏற்ற வகையில் பலவந்தமாக எடுப்பதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.
(த–56)

# திருக்கேதீஸ்வரம் அபிவிருத்திப் பணிக்கு 336 மில்லியன் ரூபா

மன்னார், பெப் 12
திருக்கேதீஸ்வரம் திருத்தலத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எதிர்வரும் சிவராத்திரி நிறைவின் பின் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென 336 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. இதற்கான நிதியை இந்திய அரசு வழங்கியுள்ளது.
திருக்கேதீஸ்வரம் மகா மணி மண்டபத்தின் நிர்மாணப் பணிகளுக்கென



இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு எதிர்வரும் சிவராத்திரி நிறைவின் பின்னர் இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இந்த அபிவிருத்திப் பணிக்கென மேலும் ஒரு தொகுதி கருங்கற் தூண்கள் தருவிக்கப்படவுள்ளன்.
கடந்த வருடம் இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் கற் தூண்கள் தருவிப்பதில் அவை தடைப்பட்டிருந்தன.
கற்தூண்கள் இப்போது தருவிக்கப்பட்டுவருவதால் துரித கதியில் குறித்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இந்திய பிரசித்தி பெற்ற இந்துக் கோவில்களைப் போன்று திருக்கேதீஸ்வரம் திருத்தலம் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கருகம்பனை மக்களுக்காக ஆயுள்வேத வைத்தியசாலை

## நேற்று திறந்து வைப்பு

வலி.வடக்கு, பெப் 12

வலி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கருகம்பனை பிரதேச மக்களின் நன்மை கருதி ஆயுள் வேதவைத்தியசாலை ஒன்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.



மக்கள் மீளக்குடியேறிய கீரிமலை கருகம்பனை கிராமத்தின் பொது அமைப்புக்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் தனியார் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆயுள்வேத வைத்தியசாலையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி பா.சத்தியலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வைத்தியசாலைப் பெயர்ப் பலகையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி பா. சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன், சுதேச வைத்திய சாலைகளின் வட மாகாண சபையின் ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரைரத்தினம், இணைப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி ஜெ. கனகேஸ்வரி, வைத்தியசாலை பொறுப் பதிகாரி வைத்தியகலாநிதி ஆர்.கஜமாலினி ஆகியோர் உட்படப் பலர் பங்கேற்றனர்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவிக்கையில்,

ஆயுள்வேத அல்லது சுதேச வைத்தியசாலையானது தற்காலிகமாக இந்தப் பகுதியில் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் இந்த வைத்தியசாலையை நிர்மாணிக்க இந்த பகுதி அன்பர் ஒருவர் தனது காணியை அன்பளிப்பு செய்வதாகத் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட காணி கிடைக்கப் பெற்றதும் இந்த பகுதிக்கான நிரந்தரச் சித்தமருத்துவ வைத்தியசாலையை சுகாதார அமைச்சு நிர்மாணிக்கும். கிளிநொச்சியில் உள்ள கல்மடு நகர் பிரதேசத்தில் 100 ஏக்கர் காணி உண்டு. அதில் திட்டமிட்ட முறையில் ஆயுள் வேத மூலிகைகளைக் கொண்ட தோட்டம் ஒன்றை நாம் உருவாக்கியுள்ள துடன் அதனைப் பராமரித்தும் வருகின்றோம். அந்த மூலிகைகளில் இருந்து மருந்துகளை தயாரிக்கும் தொழிற்சாலையையும் உருவாக்கவுள்ளோம்- என்றார். (த-86)

# உள்ளூராட்சி ஆணையாளருக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், பெப். 12

புதுக்குடியிருப்பு பிரதேச சபை முன்னாள் செயலாளரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகத் தெரிவித்து வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ, யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று மதியம், உள்ளூராட்சி ஆணையாளரின் கைத் தொலைபேசிக்கு தொடர்பு கொண்ட பிரதேச சபையின் முன்னாள் செயலாளரால் 'வீடு புகுந்து வெட்டுவேன்' என்று கொலை மிரட்டல் விடுத்ததாக பொலிஸ் நிலைய முறைப்பாட்டில் உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த-5-288)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப் 12

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (புளூஸ்) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23,ரி)

● ● ●

பருத்தித்துறை, பெப் 12

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 9பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித் துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

குறித்த தொடரின் இன்றைய ஆட்டங்களில் மாலை 3.30 மணிக்கு ஆதி சக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பின்னர் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. (த-23,ரி)

# கடத்தப்பட்டோர் தீவுக் கிணறுகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் என அச்சம்

## அமைச்சர் விஜயகலா கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 12

கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போனவர்கள் தீவகப் பகுதிகளில் மூடப்பட்டுள்ள கிணறுகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர். எனவே குறித்த பகுதிகளில் மூடப்பட்டுள்ள கிணறுகளைத் தோண்டியெடுத்து விசாரணை நடத்துமாறு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம், மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலாமகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆயுதக் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்கள் இவ்வாறு மூடப்பட்டுள்ள கிணறுகளுக்குள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று, கடத்தப்பட்டோர்களது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளமையினாலேயே மேற்படி கோரிக்கையை முன்வைத்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊர்காவற்றுறையின் சுருவில் பகுதிக்குச் சென்றபோது அங்குள்ள பொதுமக்கள், தமது கணவன்மார் மற்றும் மகன்மார் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளனர். அவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக் கலாம் என்று சந்தேகிக்கின்றோம். படுகொலை செய்யப்பட்டவர்கள் சுருவில் சந்திப் பகுதியிலுள்ள மூடப்பட்டுள்ள கிணற்றுக்குள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக அந்த மக்களின் என்னிடம் தெரிவித்தனர். தற்போதும் அந்தப் பகுதி, ஆயுதக் குழுவொன்றின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

இந்தப் பகுதியில் மேலும் சில கிணறுகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன. மேலும் மண்டைதீவுப் பகுதியிலும் இவ்வாறு 5 கிணறுகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். மண்டைதீவு தேவாலயத்திற்கு அருகிலுள்ள கிணறும் இவ்வாறே மூடப்பட்டுள்ளது. இங்கிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்ட போதிலும், ஆயுதக் குழுவின் அலுவலகம் தற்போதும் இயங்குகின்றது.

எனவே பொதுமக்களின் முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்காக வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், நீதிமன்ற உத்தரவைப் பெற்று குறித்த கிணறுகளைத் தோண்டியெடுத்து விசாரணை நடத்த வேண்டும், என்று குறிப்பட்டார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் உடனடியாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு சென்றதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-5)

# கடற்படையினர் 8 பேர் கைதாகிப் பிணையில்

எழுவைதீவு கடலில் மீன்படிக்கச் சென்றவரைத் தமது படகால் மோதி உயிரிழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கடற்படையைச் சேர்ந்த 8 பேர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி இந்தச் சம்பம் இடம்பெற்றிருந்தது. படகின் மீன்பிடிக்கச் சென்ற குறித்த குடும்பஸ்தர் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது அந்த இடத்தினூடாகப் படகில் சென்ற கடற்படையினர் குறித்த படகை மோதிவிட்டுச் சென்றுள்ளனர். இதனால் மீனவரது படகு பிளந்துவிட்டது. அவர் தன்னுடன் வைத்திருந்த கைத்தொலைபேசியில் தனது உறவினருக்கு அறிவித்துவிட்டு உடைந்தபடகின் பகுதி ஒன்றைக்கொண்டுதத்தளித்தநிலையில் அவ்வழியே சென்று திரும்பிய மற்றொரு மீனவர் அவரைக் கரை சேர்த்த போதும் அவர் உயிரிழந்துவிட்டார். டிசெம்பர் மாதம் இந்தச்சம்பவம் இடம்பெற்ற போதும் இதுவரை எவரும் கைது செய்யப்படாதிருந்த நிலையில் கடற்படையினர் 8 பேரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அந்த வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-4)


**கண்ணீர் அஞ்சலி**



ஜனசக்தி இன்சூரன்ஸ் யாழ் பிராந்தியத்தில் பணியாற்றும் எமது நண்பன் தர்சன் அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னையா வீரசிங்கம்**

அவர்கள் நேற்று (11.02.2015) புதன் கிழமை அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

ஜனசக்தி இன்சூரன்ஸ் யாழ் பிராந்தியம்.

**மரண அறிவித்தல்**



**பொன்னையா வீரசிங்கம்**

வேலணை, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, 67/3, ஐயனார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வீரசிங்கம் நேற்று (11.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு-முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், தர்மலிங்கம், சந்திரா, தேவி, வசந்தா ஆகியோரின் சகோதரரும், அரவிந்தன் (கொழும்பு), விசிதன் (யாழ். பல்கலைக்கழகம்), தர்சன் (ஜனசக்தி இன்சுரன்ஸ்), இந்துஜன் (நொதேர்ன் சென்ரல் கொஸ்பிற்றல்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காயத்திரியின் மாமனும், ஜனோதனின் அன்புப் பேரனும், நவமலர், மன்னர் பிரான், குமரேஸ்வரன், தவராசா, தர்மணசிங்கம், புஸ்பராணி, யோகராணி, நித்தியகல்யாணி, உதயராணி, நவசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67/3, ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.
077 77 89 266 - தர்சன்

தகவல்:
குடும்பத்தினர்.



**முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் தேவை**

உரிய ஆவணங்களுடன் உடனடியாக நேரில் வரவும்.
திருநெல்வேலி சிமார்ட்கிட்ஸ்,
NO 40, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி.
TP:- 021 205 2262

**ஆசிரியர் தேவை**

A/L உயிரியல், பௌதீகவியல், வீடு வந்து கற்பிக்கக் கூடிய அனுபவமுள்ள ஆசிரியர் தேவை.
தொடர்பு: - 021 300 7926
077 643 5270
(56695)(3.5)

**இந்து நாகரிகம்**

A/L பிரத்தியேக வகுப்புக்கள்
2016, 2017
ஆசிரியர் - ஸ்ரீகுகன் (BA)
'A' சித்திக்கு கற்பித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 698 0573

**பணிப்பெண் தேவை**

கொக்குவிலில் வசிக்கும் வயது முதிர்ந்த இருவரை வீட்டில் தங்கி, நின்று பராமரிப்பதற்கு 35 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு - 077 609 4632

**வாடகைக்கு**

குருநகர் மாக்கற்றுக்கு அண்மையில் கடையொன்று வாடகைக்குண்டு.
தொடர்பு - 077 274 7351

**வாடகைக்கு உண்டு**

இயங்கிக்கொண்டிருக்கும் அரிசி ஆலை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 378 6647

**தேவை**

கொடிகாமத்தில் உள்ள தோட்டம் ஒன்றிற்கு பைப் லைனிங் செய்யக் கூடியவர், தேவை. (அனுபவம் உள்ளவர்)
தொடர்பு :- 077 1807672

**வேலைவாய்ப்பு**

வேலைநேரம் 9 AM-3PM வரை. நாள் சம்பளம், ரூபா 500/= வேலை விற்பனையாளர்.
தொடர்பு:- 075 204 5004



DELL LAPTOP TOUCH

Model No:3542 Inspiron 15
Intel core i3-4030u 4th Gen
500GB harddrive
4GB RAM
15.6HD Touch Display with webcam, DVD Rw Wi-fi, Bt
windows 8.1 Original software
Free Bag& Mouse
69,990/=
உடன் 1year warranty +2 years service

DESKTOP COMPUTER
Model :Dell 3020 4th Gen I3
500GB/4GB RAM
19in Moniter
DOS
72,000
உடன் 3years warranty

TONER HOUSE
195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
T.P.NO:0213003399, email:tonerhouse@nitlk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.